பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2047 கார்த்திகை 17, வெள்ளிக்கிழமை 02.12.2016 கதிர் 27

## கோட்டாவுக்கு வெளிநாட்டுப் பயண தடை நீக்கம்

கொழும்பு, டிசெ.02

'அவன்கார்ட்' ஆயுதக்கப்பல் விவகாரம் தொடர்பில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷக்கும் மற்றும் ஏழு பேருக்கும் வெளிநாடு செல்ல விதிக்கப்பட்டிருந்த தடையை கொழும்பு நீதிவான் நீதிமன்றம் சிலநிபந்தனைகளின் அடிப்படையில் நேற்றுத் தளர்த்தியது. (உ)

### நாடாளுமன்றில் ஜனாதிபதி அறிவிப்பு

# தீர்வைக் குழப்பினால் மீண்டும் இரத்தக்களரி



### சம்பந்தனுக்குப் புகழாரம்; மஹிந்தவுக்குச் சாட்டை

கொழும்பு, டிசெம்பர் 02

**இனப்பிரச்சினைத் தீர்வுக்கான தற்போதைய முயற்சிகள் குழப்பப்படுமானால் இந்த நாட்டில் மீண்டும் இரத்தக் களரி ஏற்பட வாய்ப்புண்டாகும். எனவே, அனைவரும் ஒத்துழைத்து தீர்வு காணக்கிடைத்துள்ள சந்தர்ப்பத்தை வசமாகப் பயன்படுத்த வேண்டும் என நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கோரிக்கை விடுத்தார்.**

**தீர்வுக்காக எம்முடன் ஒத்துழைத்துச் செயற்படும் நல்ல தலைவர் என்று எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தனுக்கு புகழாரம் சூட்டிய ஜனாதிபதி மைத்திரிபால, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் செயற்போக்குக் குறித்து விசனம் தெரிவித்தமையோடு, அவருக்குச் சாட்டை அடி கொடுக்கும் விதத்திலும் கருத்து வெளியிட்டார்.**

நேற்று நாடாளுமன்றத்தில் நல்லிணக்கம், தேசிய கலந்துரையாடல் அமைச்சு, அனர்த்த முகாமைத்துவ அமைச்சு ஆகியவற்றுக்குரிய நிதி ஒதுக்கீட்டுக்கான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு ஜனாதிபதி உரையாற்றினார். அச்சமயம் எதிரணியினரால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கும் ஜனாதிபதி பதிலளித்தார்.

நேற்று தமது நாடாளுமன்ற உரையில் ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேன கூறியவை வருமாறு:- பக்கம் 19 »

## 'நடா' புயல் வலுவிழந்தது; தடாலென குளிர் சூழ்ந்தது!

யாழ்ப்பாணம், டிசெ.02

வங்காள விரிகுடாவில் தென்மேற்குப் பக்கத்தில் உருவாகி வடமேற்குத் திசையில் நகர்ந்து யாழ். குடாநாட்டையும் இன்றுகாலையில் தாக்கலாம் என எதிர்பார்க்கப்பட்ட 'நடா' புயல் நேற்று நண்பகல் அளவில் வலுவிழந்தது என அறிவிக்கப்பட்டது.

அது மேலும் வலுவிழந்து, ஆழ்ந்த காற்றமுத்த மண்டலமாக மாறி, இன்று அதிகாலையில் தமிழகக் கரையைக் கடக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பக்கம் 20 »



*நேற்று மாலை 5.30 மணிக்கு இலங்கைக்கு மேல் முகில் கூட்டங்களின் நிலைமை செயற்கைக்கோள் பார்வை...*

## யாழ். மாவட்டத்தில் புயல் காற்றால் 150 பேர் பாதிப்பு; 19 வீடுகள் சேதம்!

### அவசர நிலையைச் சமாளிக்க படை தயார் நிலையில்

யாழ். மாவட்டத்தில் 'நடா' புயல் காற்றினால் 57 குடும்பங்களைச் சேர்ந்த 150 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

அவசர நிலை ஏற்பட்டால் அதனைச்சமாளிப்பதற்குப் படையினரின் உதவி பெறப்படும். அவர்கள் எந்த நேரத்திலும் உதவக்கூடிய நிலையில் தயார்ப்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் கூறினார்.

'நடா' சூறாவளியின் தாக்கம் தொடர்பாக நேற்று மாலை ஊடகங்களுக்குகருத்துத்தெரிவிக்கும் போதே அரச அதிபர் மேற்கண்ட பக்கம் 20 »

## வடமராட்சியில் கடலுக்குச் சென்ற 8 மீனவர்கள் கரை திரும்பவில்லை

### தேடிச் சென்ற நால்வர் விபத்தில் காயம்

பருத்தித்துறை, டிசெ.02

'நடா' புயலின் ஆதிக்கம் அதிகரித்திருந்த நிலையில், வடமராட்சியில் இருந்து மீன்பிடிக்கக்கடலுக்குச்சென்ற 8 மீனவர்கள் கரை திரும்பவில்லை என உறவினர்கள் தெரிவித்துள்ளனர். அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறிய முடியாத நிலையில் உறவினர்கள் கவலையடைந்துள்ளனர்.

புயல் அபாயம் தொடர்பான அறிவிப்பு வெளியாக முன்னர், நேற்று முன்தினம் புதன்கிழமை கடலுக்குச் சென்ற மீனவர்களே நேற்று மாலை வரை கரை திரும்பியிருக்கவில்லை.

பருத்தித்துறைசுப்பர்மடத்தில் இருந்து ஒரு படகில் சென்ற இருமீனவர்கள், வியாபாரிமூலை எரிந்த அம்மன் கோயிலடியில் இருந்து இரு படகுகளில் சென்ற நான்கு மீனவர்கள், குடத்தனை பொற்பதியில் இருந்து ஒரு படகில் சென்ற இரு மீனவர்கள் என்ற அடிப்படையில் 8 மீனவர்கள் கரை திரும்பவில்லை. அந்தப் பகுதி கடற்றொழிலாளர் சங்கப்பிரதிநிதிகளும் நேற்றுப்பகல் இதனை உறுதிப்படுத்தினர்.

சீரற்ற காலநிலைகாரணமாக பக்கம் 20 »

## இந்திய மீனவர்கள் ஐவர் நேற்று பருத்தித்துறையில் கரை ஒதுங்கினர்

பருத்தித்துறை டிசெ.02

கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த இந்திய மீனவர்கள் ஐவர் 'நடா' புயல் காரணமாக ஏற்பட்ட கடல் கொந்தளிப்பினால் பருத்தித்துறையில் கரையொதுங்கி யுள்ளனர். நேற்று வியாழக்கிழமை நண்பகலில் இவர்களின் படகு கரையொதுங்கியது.

இந்தியாவின்நாகைமாவட்டத்தில் இருந்துகடந்தசெவ்வாய்க்கிழமை கடலுக்கு மீன் பிடிக்கச் சென்ற மேற்படி மீனவர்கள், 'நடா' புயலால் இந்தியக் கடலோரத்தில் ஏற்பட்டுள்ள கடற்கொந்தளிப்புக் காரணமாக அங்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டது.

கடலில்தத்தளித்த இவர்கள், நேற்றுபருத்தித்துறையில்கரையொதுங்கினர். இவர்களைக் கண்ட பருத்தித்துறை மீனவர் கள் பாதுகாப்பாகக் கரைக்கு அழைத்து வந்து உணவு கொடுத்து உபசரித்தனர்.


நாகை மாவட்டத்தைச் சேர்ந்த முத்தப்பன் பக்கம் 20 »

## அமெ.உப ஜனாதிபதி மைத்திரியுடன் தொலைபேசியில் பேச்சு

கொழும்பு, டிசெ.02

அமெரிக்காவின் புதிய உப ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள மயிக் ஸ்பென்ஸ் மற்றும் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகியோர் இடையில் நேற்று தொலைபேசி பக்கம் 20 »

## தென்னாபிரிக்கத் தூதருடன் சம்பந்தன் நேற்றுச் சந்திப்பு



இலங்கைக்கான தென்னாபிரிக்க உயர்ஸ்தானிகர் ரொபினா மார்க்ஸிற்கும் எதிர்கட்சித் தலைவரும் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனுக்கும் இடையில் நேற்று முக்கிய சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. பக்கம் 20 »

### அளப்பு அருணாசலம்



நடாப் புயல் ஓஞ்சாலும் எங்கடை ஒற்றையாட்சிப் புயல் விடாது உலுப்பும் போலை...!

## ரயில்வே ஊழியர்களின் பணிப் புறக்கணிப்பு ரத்து!

### ஆனால் தனியார் பஸ்சேவை நிறுத்தம்?

கொழும்பு,டிசெ.02

நேற்று நள்ளிரவு முதல் சேவைப் புறக்கணிப்பில் ஈடுபட இருந்த ரயில்வே திணைக்கள ஊழியர்கள், அவர்களது சேவைப் புறக்கணிப்பை இரத்துச் செய்துள்ளனர். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் நேற்று மாலை இடம்பெற்ற கலந்துரை பக்கம் 20 »

# ஒற்றையாட்சி விடயத்தில் கூட்டமைப்பு 'பம்மாத்து'!

### சுமந்திரன் இரட்டை வேடப் பேச்சு என பிய்த்து உதறுகிறார் கஜேந்திரகுமார்



யாழ்ப்பாணம், டிசெ.02

ஒற்றையாட்சிக்கு இணங்கவில்லை என்று வெளியில் கூறிக் கொண்டு, முழு அளவில் ஒற்றையாட்சி முறைமைக்குத்தான் தமிழ்க் கூட்டமைப்பு இணங்கியிருக்கின்றது. நாடாளு மன்றில் சுமந்திரன் விடுத்த அறிவிப்பு அதைத்திட்டவட்டமாகவும், தெளிவாகவும் உணர்த்தி நிற்கின்றது. அவரின் உரையிலேயே அது பக்கம் 19 »

# வந்தாறுமூலை வளாகத்தில் அமைந்துள்ள பொலிஸ் சாவடியை உடன் அகற்றுங்கள்!

*தமிழ் – சிங்கள மாணவர்கள் நேற்று ஆர்ப்பாட்டம்*



வந்தாறுமூலை,டிசெ.02

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வந்தாறுமூலை வளாகத்தில் உள்ள பொலிஸ் சாவடியை அகற்ற வேண்டும் என்ற கோரிக்கை உட்பட மேலும் சில கோரிக்கைகளை முன்வைத்து மாணவர்கள் நேற்று வியாழக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மேற்படி வளாகத்தில் கடந்த சில வருடங்களுக்கு முன்னர் தமிழ் – சிங்கள மாணவர்களுக்கிடையே ஏற்பட்ட மோதலையடுத்து சிங்கள மாணவர்களின் பாதுகாப்புக் கருதி அங்கு பொலிஸ் சாவடி ஒன்று அமைக்கப்பட்டது.

அந்தச் சோதனைச் சாவடியை அகற்றுமாறு தமிழ்–சிங்கள மாணவர்கள் கூட்டாக இணைந்து கோரிக்கை விடுக்கும் வகையில் நேற்றைய ஆர்ப்பாட்டம் இடம் பெற்றது.

வளாகப்பிரதேசத்தில் பொருத்தப்பட்டுள்ள சி.சி.டி.வி. கமரா உடனடியாக அகற்றப்பட வேண்டும் என்றும் மாணவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தின்போது வலியுறுத்தினர்.


மேலும், 2 மற்றும் 3 ஆம் வருட மாணவர்களை விடுதியிலிருந்து வெளியேறுமாறு விடுக்கப்பட்ட உத்தரவு கைவிடப்பட்டு அந்த மாணவர்களுக்கு தொடர்ந்தும் விடுதி வசதி வழங்கப்பட வேண்டும்.

மாணவர்களுக்கு வழங்கப்படும் மகாபொல புலமைப்பரிசில் போன்ற கொடுப்பனவுகளில் வரி அறவீடு செய்வது நிறுத்தப்பட வேண்டும்.

பரீட்சை முடிவுகள் வெளியாவதில் ஏற்படும் தாமதங்கள் நிவர்த்தி செய்யப்பட்டு உரிய நேரத்தில் வெளியிடப்பட வேண்டும் - என்பன போன்ற பல கோரிக்கைகளும் மாணவர்களால் முன் வைக்கப்பட்டிருந்தன.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட மாணவர்கள் தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் எழுதப்பட்ட வாசகங்களைத் தாங்கியிருந்தனர். (ம)

# ஈழத் தமிழர் ஆதரவாளரான கவிஞர் இன்குலாப் காலமானார்



மக்கள் கவிஞர் என சிறப்பிக்கப்படும் கவிஞர் இன்குலாப் நேற்று வியாழக்கிழமை காலமானார். சுகயீனம் காரணமாக சென்னை தனியார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையிலேயே அவர் காலமானார்.

தமிழகத்தின் கவிஞர், பேராசிரியர், சொற்பொழிவாளர், நாடக ஆசிரியர், சிறுகதை எழுத்தாளர், பத்திரிகையாளர், பொதுவுடைமைச் சிந்தனையாளர் எனப் பன்முக ஆளுமை கொண்டவர் அவர்.

எஸ்.கே.எஸ். சாகுல் ஹமீது என்னும் இயற்பெயர் கொண்ட இன்குலாப் இராமநாதபுரம் மாவட்ட கீழக்கரையில் பிறந்தவர்.

மதுரைத் தியாகராசர் கல்லூரியில் இளங்கலை (தமிழ்) பட்டம் பெற்ற அவர். படிப்பை முடித்த பின்னர் சென்னையில் உள்ள புதுக்கல்லூரியில் ஆசிரியராகப் பணியில் சேர்ந்தார். முதலில் மார்க்சிய கம்யூனிஸ இயக்க ஆதரவாளரான அவர், பிறகு மார்க்சிய லெனினிய புரட்சிகர இயக்கத்திலும் அதன் பின்னர் தமிழ்த் தேசிய விடுதலையிலும் ஈடுபட்டு இயங்கினார்.

தராசு, நக்கீரன், இனி, நாற்காலி, உண்மை, உங்கள் விசிட்டர் எனப் பல இதழ்களில் ஏராளமான கட்டுரைகளையும் கவிதைகளையும் எழுதினார்.

சூரியனைச் சுமப்பவர்கள் என்னும் கவிதைத் தொகுப்பு, கல்லூரிக் காலத்தில் குரல்கள், துடி, மீட்சி, ஔவை மற்றும் மணிமேகலை ஆகிய நாடகங்களையும் எழுதியுள்ளார்.

கடந்த 2007ஆம் ஆண்டு இவரால் எழுதப்பட்ட மொத்த கவிதைகளின் தொகுப்பு , 'ஒவ்வொரு புல்லையும்' என்னும் பெயரில் ஒரு தொகுப்பு நூலாக வெளிவந்தது.

மார்க்சிய ஆய்வாளர் எஸ்.வி. ராஜதுரையுடன் இணைந்து 'மார்க்சு முதல் மாசேதுங் வரை' என்னும் மொழியாக்க நூலையும் வெளியிட்டுள்ளார்.

இவரது 'மனுசங்கடா, நாங்க மனுசங்கடா' என்னும் புகழ்பெற்ற பாட்டு இன்று வரை எண்ணற்ற மேடைகளில் பாடப்படுகிறது.

சமூகச் சிக்கல்கள், ஒடுக்குமுறைகள், போராட்டங்கள் ஆகியவற்றை மையப்படுத்தியே இவருடைய படைப்புகள் அமைந்திருந்தன. இன்குலாப் என்பதற்குப் புரட்சி என்று பொருள்படும்.

1965 இல் இந்தி எதிர்ப்புப் போராட்டம் தமிழ் நாட்டில் வெடித்தது. அப்போது உடன் பயின்ற மாணவர்களான கவிஞர் நா. காமராசன் கா. காளிமுத்து பா. செயப்பிரகாசம் ஆகியோருடன் இன்குலாப் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் முனைப்பாக இறங்கினார்.

பொலிஸாரின் தடியடிகளுக்கும் ஆளானார். சிறைக்கும் சென்றார். தொடக்கக் காலத்தில் திராவிட முன்னேற்றக் கழக ஆதரவாளாராக இருந்த போதிலும் பிற்காலத்தில் மார்க்சியக் கொள்கையாளர் ஆனார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரனைச் சந்தித்த நிகழ்வு இன்குலாப்பின் வாழ்வில் குறிப்பிடத்தக்க ஒன்று. தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு பல பாடல்களையும் இயற்றினார். புலிகளின் ஆதரவாளராக இருந்த இவர் ஈழத் தமிழ் மக்களில் கரிசனை மிக்கவராகவும் விளங்கினார்.

'முள்ளிவாய்க்கால் கரையில் அலைந்து கொண்டிருக்கின்றது என் உண்மையான தாய்மொழி' எனப்பாடியவர்.

கல்லூரி ஆசிரியர் சங்கப் போராட்டங்களிலும் முன்னணியில் இருந்தார். இளவேனில் என்பவர் நடத்திய கார்க்கி இதழில் கவிஞர் இன்குலாப்பின் தொடக்கக் கால கவிதைகள் வெளிவந்தன. சிற்பி இலக்கிய விருது, கவிஞர் வைரமுத்து விருது என்று சில விருதுகள் இவருக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

# காற்றினால் மரம் முறிந்து வீழ்ந்ததில் இளைஞர் பலி

*சாவகச்சேரியில் நேற்று சம்பவம்*



யாழ்.மாவட்டத்தில் நடா புயல் காரணமாக ஏற்பட்ட கடும் காற்றினால் மரம் ஒன்று முறிந்து வீழ்ந்ததில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்று வியாழக்கிழமை காலை சாவகச்சேரியில் இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில், சங்கத்தானையைச் சேர்ந்தவரும், பூநகரி கட்டடத் திணைக்களத்தில் தொழில்நுட்ப உத்தியோகத்தராக பணியாற்றுபவருமான சச்சிதானந்தம் கஜந்தன் (வயது–31) என்பவர் உயிரிழந்தார்.

இவர், நேற்றுக் காலை மோட்டார் சைக்கிளில் அலுவலகத்துக்குப் புறப்பட்டுச் சென்ற போது கடும் காற்று வீசியதாகவும் இதனால் வீதியோரமாக நின்ற பட்ட மரம் ஒன்று இவருக்குமேல் முறிந்து வீழ்ந்ததாகவும் கூறப்பட்டது.

மரத்தின் கீழ் நசியுண்ட இவர் சம்பவ இடத்திலேயே பலியானார்.

சம்பவ இடத்திற்குச் சென்ற சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். சடலம் பிரேத பரிசோதனைக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது. (ம-40,23)

# மின்சாரத் தாக்குதலில் இளைஞன் காயம்

கொடிகாமம் டிசெ.02

மட்டுவில் பகுதியில் புதிய வீட்டுக்கான மின் இணைப்பை வழங்க முற்பட்ட இலங்கை மின்சார சபையின் ஒப்பந்தப் பணியாளர் ஒருவர் மின்சாரத் தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்துள்ளார்.

மின்சார சபையின் சாவகச்சேரி பிரதேச அலுவலகத்தில் கடமையாற்றும் மீசாலையைச் சேர்ந்த ஜெ.செந்தூரன் (வயது–19) என்ற இளைஞனே காயமடைந்தவராவார்.

அவர் மின் இணைப்பு வழங்குவதற்கான ஆயத்தங்களில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது மின்சாரத் தாக்குதலுக்கு உள்ளாகி மயங்கி வீழ்ந்தார்.

உடனடியாக சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்ட பின்னர் அவருக்கு சுய நினைவு திரும்பியுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ம-23)

# போக்குவரத்து விதிகளை மீறுபவர்களுக்கு ரூ.25 ஆயிரம் அபராதம் விதிப்பது சரியானதே!

*மத்திய அரசின் முன்மொழிவை வழிமொழிகின்றார் டெனிஸ்வரன்*

யாழ்ப்பாணம் டிசெ.02

வீதிவிபத்துக்களால் இலங்கையில் நாளாந்தம் 12 பேர்வரை உயிரிழக்கின்றனர். பலர் நிரந்தர அங்கவீனர்களாகின்றனர். வீதி விபத்துக்கள் நாளாந்தம் அதிகரித்துக்கொண்டு செல்லுமாயின் நாடு பெரும் பின்னடைவைச் சந்திக்கும்.

ஆகவே வீதி விபத்துக்களை தடுக்கவேண்டுமாயின் வீதி ஒழுங்குகளை மீறுபவர்களுக்கான தண்டப்பணம் மற்றும் தண்டனைகள் என்பன அதிகரிக்கப்பட வேண்டும்.

– இவ்வாறு வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வரவு – செலவுத் திட்டத்தில் வீதிப் போக்குவரத்து விதிகளை மீறுவோருக்கு எதிராக அதிகரிக்கப்பட்டுள்ள தண்டப் பணத்தை நிறுத்துமாறு கோரி தனியார் பேருந்துகள் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளன என அறிவித்துள்ள நிலையிலேயே அமைச்சர் டெனிஸ்வரன் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று விடுத்துள்ள ஊடக அறிக்கையில் –


வீதி ஒழுங்குகளை மீறும் சகலருக்கும் தண்டனைகள் மற்றும் தண்டப்பணங்களை அதிகரிப்பதனூடாகவே விபத்துக்களை கட்டுப்படுத்த முடியும். ஒரு பிரச்சினைக்கு பணிப்புறக்கணிப்பு உடனடித் தீர்வாகாது. சம்பந்தப்பட்ட தரப்பினர் பணிப்பகிஷ்கரிப்பை மறுபரிசீலனை செய்து தங்களது பக்கமுள்ள நியாயங்களை நிலைநிறுத்த முடியும் – என்றும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சாரதி அனுமதிப் பத்திரம், காப்புறுதிப் பத்திரம் என்பன இல்லாமல் வாகனம் செலுத்துதல், மது போதையில் வாகனம் செலுத்துதல், ரயில் கடவைகளை அவதானமின்றி கடத்தல், முறையற்ற விதமாக முந்திச் செல்லுதல் போன்ற குற்றங்களுக்கே ரூபா 25000 தண்டமாக மத்திய அரசு தனது வரவு – செலவுத் திட்டத்தில் அறிவித்துள்ளது.

ஆகவே இவ்வாறான ஒரு அறிவிப்பை வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் என்ற வகையில் நான் வரவேற்கின்றேன். இந்த விடயத்தை போக்குவரத்து பொலிஸார் சரியான முறையில் நடைமுறைப் படுத்த வேண்டும்.

எதிர்வரும் சில நாட்களில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைகள் நடைபெறவுள்ளமையால், மாணவர்களின் எதிர்கால வசதி கருதி தனியார் போக்குவரத்து துறையினர் தமது போராட்டத்தை மறு பரிசீலனை செய்யவேண்டும்.– என்றும் டெனிஸ்வரன் தெரிவித்தார். (ம -81)

# டீசல் விலை அதிகரிப்பு



கொழும்பு டிசெ.02

லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் இரண்டு வகையான டீசல்களின் விலையை அதிகரித்துள்ளது.

நேற்று முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த விலைத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டது என அந்த நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதன்படி எக்ஸ்ரா பிரீமியம் யூரோ 03 மற்றும் எக்ஸ்ரா மயில் ஆகிய டீசல்களுக்கான விலையே இவ்வாறு உயர்வடைகின்றது.

சாதாரண டீசல் விலையில் எந்த மாற்றமும் இல்லை எனவும் அந்த நிறுவனம் மேலும் சுட்டிக் காட்டியுள்ளது.







யாழ். மாவட்டத்தில் உள்ள நெடுந்தீவு, எழுவைதீவு மற்றும் அனலைதீவு போன்ற பகுதிகளுக்கு இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் நேற்றுமுன்தினம் விஜயம் செய்துள்ளார்.

பாடசாலைகள், வைத்தியசாலைகள் என்பவற்றுக்குச் சென்று அங்குள்ள குறைபாடுகள் தொடர்பாக ஆராய்ந்துள்ளார்.பாடசாலை மாணவர்களுக்கு அடுத்த வருடத்துக்குத் தேவையான கற்றல் உபகரணங்களையும் அவர் இதன் போது வழங்கியுள்ளார். நெடுந்தீவில் உள்ள 850 மாணவர்களுக்கு அவர் கற்றல் உபகரணங்களை வழங்கியுள்ளார். அத்துடன், தீவகங்களில் உள்ள மந்தமான கல்வி நிலைகளை மாற்றுவதற்கு மாலை நேர வகுப்புக்களை அரச செலவில் நடத்துவதற்கான ஏற்பாடுகளையும் அமைச்சர் கல்வித் திணைக்களத்தின் ஊடாகச் செய்து கொடுத்துள்ளார். (ஜ)

# மன்னார் மீனவர்கள் கடலுக்குச் செல்லவில்லை

வங்காள விரிகுடாவில் மையம் கொண்டுள்ள புயல் காரணமாக மன்னார் மாவட்ட மீனவர்கள் நேற்றுக் கடலுக்குச் செல்லவில்லை.

மன்னார் கடலோரப் பகுதியில் குடியிருக்கும் மக்களையும், மீனவர்களையும் எச்சரிக்கையாக இருக்கும்படி அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் கடற்றொழில் திணைக்களத்தால்விடுக்கப்பட்ட எச்சரிக்கையைத் தொடர்ந்து இப் பகுதி மீனவர்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்தது.

நேற்று முன்தினம் புதன்கிழமை முதல் வங்காள விரிகுடாவில் 'நடா' என அழைக்கப்படும் புயல் காற்று மையம் கொண்டுகாணப்பட்டது.

மன்னார்மாவட்டத்தில் மீன்பிடியை நம்பி வாழும் சுமார் 11092 மீனவ குடும்பங்களின்வருவாய் இதனால்பாதிக்கப்பட்டது.



மன்னார் பகுதியில் புயல் அபாயம் காணப்படுவதாக அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து மீனவர்கள், படகுகள் வலை போன்ற தங்கள் மீன்பிடி உபகரணங்களைபாதுகாப்பானஇடங்களில் வைத்திருந்தனர்.

புதன் கிழமை இரவு தொடக்கம் வியாழக்கிழமை வரை மன்னார் பகுதியில் வானம் கரும் முகிலால் சூழப்பட்டு மழை தூறிக் கொண்டே இருந்தது.

கடற்காற்று பலமாக வீசியதால்கடல்அலைகள் சுமார் மூன்று மீற்றர் உயரத்தில் எழுந்து காணப்பட்டன என்று மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்தவ உதவிப் பணிப்பாளர் கலாநிதி எம்.ஏ. சீ.முகமட் றியாஸ் தெரிவித்தார்.

அத்துடன் மழை மற்றும் காற்றால் இது வரைக்கும் எந்தப் பாதிப்பும் வந்ததாக தங்கள் மையத் துக்கு தெரிவிக்கப்பட வில்லை யெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-112)

## தமிழ் பொலிஸ் அதிகாரிக்கு தமிழ் தெரியாது

வல்வெட்டித்துறை,டிசெ.02

வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக பிரதம பொலிஸ் பரிசோதகர் திருநாவுக்கரசு ராஜ்குமார் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தரவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 2 வருடங்களாகப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய பிரதம பொலிஸ் பரிசோதகர் ரீ.எஸ்.மீடின் மகரகம பொலிஸ் நிலையத்துக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். அவரின் வெற்றிடத்துக்கு தமிழ்ப் பொலிஸ் பொறுப்பதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்.

எனினும், குறித்த பொறுப்பதிகாரிக்குத் தமிழ் மொழியில் பேசத் தெரியாது என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-9)

## பாடசாலைகளுக்கு தவணை விடுமுறை

யாழ்ப்பாணம்,டிசெ.02

அரச மற்றும் அனுமதி பெற்ற தமிழ் சிங்கள மொழிப் பாடசாலைகள் யாவும் மூன்றாம் தவணைக்காக இன்று வெள்ளிக்கிழமை முதல் மூடப்படவுள்ளன. மூடப்படும் பாடசாலைகள் யாவும் முதலாம் தவணைக்காக ஜனவரி 2 ஆம் திகதி திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-30)

## மீள்குடியேறியுள்ள முஸ்லிம்களுக்கு பல தேவைகள், பிரச்சினைகள் உள்ளன

வடமாகாணத்திலும் ஏனைய மாகாணங்களிலும் இனங்களுக்கு இடையே சக வாழ்வு இன்னும் ஏற்படவில்லை. யுத்தத்தால் பல்வேறு வகையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய தீர்வு இன்னும் கிடைக்கவில்லை. 1990 ஆம் ஆண்டு வெளியேற்றப்பட்டு மீண்டும் மீள்குடியேறி வாழும் முஸ்லிம் மக்களுக்குப் பல்வேறு பிரச்சினைகள், தேவைகள் காணப்படுகின்றன என மாலைதீவுக்கான சுவிஸ் தூதரகத்தின் செயலாளர் டமியனோ அஞ்சலோஸ்குய்டாமாட்டி கூறினார்.



வடமாகாணசபை உறுப்பினர் ஐஸ்யூப் அஸ்மின் ஏற்பாட்டில், யாழ். முஸ்லிம் சிவில் சமூகப் பிரதிநிதிகள் யாழ். சுபாஸ் ஹோட்டலில் தூதரக செயலாளரைச் சந்தித்த போது இவ்வாறு அவர் கருத்து தெரிவித்தார். மீள்குடியேறியுள்ள முஸ்லிம் மக்களின் வீட்டுப் பிரச்சினை, பரச்சேறி வெளி காணிப்பிரச்சினை, கல்வி கற்கும் மாணவர்களின் நிலை மற்றும் 1990 ஆம் ஆண்டு இழந்த வியாபாரிகளின் இழப்பீடு சம்பந்தமாகவும் சிவில் சமூகப்பிரதிநிதிகளால் இங்கு எடுத்துரைக்கப்பட்டன.

விரைவில்
எமது யாழ் மண்ணில்...
உங்கள் வீட்டு கூரைகளுக்கு புதிய அத்தியாயம் ஆரம்பம்...
சியன
யாழ்ப்பாணம்
இல்லங்களுக்கான நவீன கூரைத் தெரிவுகள்...
Hospital Road, Jaffna.
[வேம்படி சந்திக்கு அருகில்]
077 9494200
jaffnasiyana
(C/097)

யாழ்ப்பாணத்தில் தொழில்நுட்பத்துறையில் சாதனை படைத்து வரும் விஸ்டம் தொழில்நுட்பக் கல்லூரி

யாழ்ப்பாணத்தில் க.பொ.த உயர்தரப் பிரிவு தொழில்நுட்பப் பாடங்களுக்கு சிறப்பாக இயங்கிவரும் தனியார் கல்வி நிறுவனமாக விஸ்டம் தொழில்நுட்பக் கல்லூரி இனங்காணப்பட்டுள்ளது. பொறியியல் தொழில்நுட்பம், உயிர் முறைமைகள், தொழில்நுட்பம் பாடங்களுக்கு மிகச்சிறந்த விரிவுரைகளும் செயல்முறை வகுப்புகளும் நடைபெற்று வருகின்றன. மாணவர்கள் இறுதிப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெறுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (C/096)

PEARSON BTEC
HND
கற்கை நெறிகளுக்கு கல்வியாண்டு 2017 ற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன



IIS வழங்கும் சிறப்புச்சலுகைகள்
எதிர் வரும் கல்வியாண்டு 2017ல் HND கற்கை நெறிகளுக்கு மார்கழி 5 முதல் 31 வரை பதிவினை மேற்கொள்ளும் அனைத்து மாணவர்களுக்கும் மடிக்கணினி (Laptop)/ Sumsung Tab ஒன்று இலவசமாக வழங்கப்படும்.
மேலதிக விபரங்களுக்கு
071 777 5666
இன்றே அழைப்பினை ஏற்படுத்தி உங்கள் பதிவுகளை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்
CIVIL ENGINEERING
SOFTWARE ENGINEERING
BUSINESS MANAGEMENT
IIS என்றும் உங்கள் வளமான எதிர்காலத்தின் வழிகாட்டி.
IIS CITY CAMPUS
200,சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.
021 222 8060 | 021 4900 900
info@iis.edu.lk iis@iis.lk
www.iis.edu.lk (C/099)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 – 222 3000, editor@kalaikkathir.lk
விளம்பரம்: 021 – 221 9440, ads@kalaikkathir.lk
விநியோகம்: 021 – 222 2600

## தமிழ்க் கூட்டமைப்பின் விட்டுக் கொடுப்புத் தந்திரம்

இலங்கை அமைதி முயற்சிகள் விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு குறித்து விளக்கமளிக்கும் விதத்தில் கடந்த புதன் அன்று நாடாளுமன்றத்தில் உரையாற்றியிருக்கின்றார் கூட்டமைப்பின் பேச்சாளரும், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன்.

அந்த உரையின் வரிகளுக்கிடையில் சில விடயங்களைச் சொல்லாமல் சொல்லியிருக்கின்றார் அவர்.

தீர்வு முயற்சிகள், ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தை நடைமுறைப்படுத்தல் ஆகியவை குறித்த கூட்டமைப்பின் நிலைப்பாடு - தந்திரோபாயம் - உத்தி யாது என்பது குறித்து வார்த்தைக்கு வார்த்தை வெளிப்படையாக இல்லாவிட்டாலும், பூடகமாகக் கோடிகாட்டியிருக்கின்றார் சுமந்திரன்.

" ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலில் ஆகப் பிந்தி இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம், அந்தச் சபையில் அங்கம் வகிக்கும் நாடுகளாலோ அல்லது சர்வதேச சமூகத்தினாலோ இலங்கை மீது திணிக்கப்பட்ட ஒன்றல்ல. அது இலங்கை தானாக முன்வந்து, தனது விருப்பத்தின்பேரில், தானே இணைந்து பிரேரித்த தீர்மானம். ஆகவே எதைச் செய்வோம் என்று இலங்கை தானாக முன்வந்து சர்வதேசத்திடம் பிரகடனப்படுத்தியதோ அதைச் செய்யாமல் அதிலிருந்து இலங்கை தப்பிக் கொள்ளவே முடியாது." - என்பதை சுமந்திரன் விளங்கப்படுத்துகின்றார்.

ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலின் தீர்மானத்தில் இருந்து இலங்கையை விடுவித்து உதவுமாறு புதிய அமெரிக்க அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட டொனால்ட் ட்ரம்ப்பைத் தாமே நேரில் கடிதமூலம் கோருவேன் என்று இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியமைக்கும் சுமந்திரன் பதிலடி கொடுத்திருக்கிறார்.

"வேறு நாடுகளில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக - அல்லது அதனைப் பயன்படுத்தி - இலங்கை முன்னர் தான் ஏற்று, ஒப்புக்கொண்ட பொறுப்புகளிலிருந்து தப்பிக் கொள்ளலாம் எனச் சிலர் கருதுகின்றனர். அது சரிவராது. " - என்ற சாரப்பட உரைக்கிறார் சுமந்திரன்.

நல்லிணக்க முயற்சிகளுக்கு நாம் தயார். அதன் முக்கிய அங்கம்தான் புதிய அரசமைப்பு முயற்சி. அந்த நல்ல முயற்சியை காத்திரமாக முன்னெடுப்பதற்காக வேறு பொறுப்புக் கூறும் விவகாரங்களில் நேர அட்டவணையை மாற்றி, காலம் தாழ்த்துவதற்கு உடன்பட நாம் தயார். ஆனால் எமது அந்த இணக்கத்தை நல்லிணக்க முயற்சியிலும், பொறுப்புக் கூறல் விடயத்திலும் எம்மை ஏமாற்றுவதற்கான வாய்ப்பாக நீங்கள் பயன்படுத்துவதற்கு நாங்கள் விடமாட்டோம். - என்ற சாரப்பட அவர் உரை அமைந்தது.

அதாவது -

தமிழ் மக்களின் பிரதான அபிலாசைளைக் கைவிடாமல், வேறு அம்சங்களில் விட்டுக் கொடுப்புடன் நடந்து, தென்னிலங்கை மக்களுடன் சேர்ந்து ஒரு புதிய அரசமைப்பை உருவாக்கவும், அதன் மூலம் நல்லிணக்கம் ஏற்படவும் உழைப்பதற்கு நாங்கள் தயார். அதற்கு ஆளும் தரப்பும் இணங்கி வந்து, புதிய அரசமைப்பு உருவாக்கத்தையும், அதன் மூலம் தீர்வு நடவடிக்கைகளையும் காலம் தாழ்த்தாமல் முன்னெடுக்கத் துணிச்சலுடன் முன் வரவேண்டும்.

அவ்வாறு முன்வந்தால் அந்த விடயத்துக்கு முன்னுரிமை அளிப்பதற்காக - கால நேர அட்டவணையில் அந்தப் பணிக்கு முதன்மை வாய்ப்பு அளிப்பதற்காக - ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலில் கூறப்பட்ட பொறுப்புக் கூறல், உண்மையை கண்டறிதல் போன்ற அம்சங்களை கால தாமதப்படுத்துவதற்கு நாமும் சேர்ந்து உடன்படுவோம்: அதனை ஆட்சேபிக்க மாட்டோம். இணைந்து நின்று அந்தக் கால தாமதத்துக்கு வழி செய்யலாம்.

- இதுவே தங்கள் உத்தி என்பது சுமந்திரனின் நாடாளுமன்றப் பேச்சின் வரிகளுக்கிடையில் கோடி காட்டி நிற்கிறது.

நியாயத் தீர்வு கிட்டுவதற்காக சில விட்டுக் கொடுப்புகளுக்கு இடம் கொடுப்பதில் தப்பில்லை.

ஆனாலும், அந்த விட்டுக்கொடுப்பு தமிழர்களின் அபிலாசைகளின் அடிப்படையாக அமைந்த அவர்களின் இறைமை என்ற உயரிய அந்தஸ்தையே அடகுவைப்பதாக அமைகின்றது என்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சுட்டுவதும் கவனிக்கத்தக்கது. தமிழ்த் தேசிய அரசியலின் அடிப்படைச் சிந்தனைப் போக்கையே புரட்டிப்போடும் விட்டுக்கொடுப்பாக அது அமைவதைத் தமிழர்கள் ஏற்கமாட்டார்கள் என்பதைச் சுமந்திரனும் கூட்டமைப்புத் தலைமைகளும் புரிந்துகொள்ளவேண்டும்.

அது ஒருபுறம் இருக்க, இத்தகைய விட்டுக் கொடுப்புக்கான நட்புறவுக் கரம் நீட்டலை, தென்னிலங்கை தானும் கையை நீட்டிப் பற்றிக் கொண்டு தீர்க்கமான ஒரு தீர்வுக்கு வாய்ப்பளித்து, இணங்கி வந்து, நியாயமாகச் செயற்படுமா?

அல்லது -

சுமந்திரனே தனது அந்த உரையில் சுட்டிக் காட்டியபடி, தமிழர் தரப்பின்- தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்- இந்த விட்டுக் கொடுப்பை, தமிழர் தரப்புக்கு விடுதலைப் புலிகளின் அழிவோடு நேர்ந்த பலவீனமாகக் கருதி, காலத்தை இழுத்தடித்து நல்லிணக்க முயற்சியையும் குழப்பி, பொறுப்புக் கூறலையும் புறந்தள்ளி தனது கைவரிசையைத் தென்னிலங்கை காட்டுமா?

தென்னிலங்கையினதும் மாறி மாறி வந்த கொழும்பு அரசுகளினதும் பரவணிப்பழக்கம் பின்னையதையே எண்ணத் தோற்றுகின்றது.

# கிழக்கு மாகாண சபைக்கு மேலும் ஒரு தொகுதி நிதி

## மத்திய அரசு தீர்மானம்

கொழும்பு, டிசெ.02

கிழக்கு மாகாண சபைக்கான நிதியில் மேலும் ஒரு தொகுதி நிதியை விடுவிப்பதற்கு மத்திய அரசு தீர்மானித்துள்ளது.

இதனடிப்படையில் 500 மில்லியன் ரூபா நிதியை கிழக்கு முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் விடுத்த கோரிக்கைக்கு இணங்க மத்திய அரசு வழங்கியுள்ளது என்று முதலமைச்சர் நேற்றுத் தெரிவித்தார்.

தமது மாகாணத்துக்கு வழங்கப்பட வேண்டிய நிதியை விரைவில் வழங்க ஆவன செய்யுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் அண்மையில் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இதனடிப்படையில் ஜனாதிபதி கிழக்கு மாகாணத்துக்கு வழங்கப்பட வேண்டிய நிதியில் ஒரு தொகுதியை விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு நிதியமைச்சருக்குப் பணிப்புரை விடுத்தார்.

இதனடிப்படையில் கிழக்கு மாகாணத்துக்கு 500 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளதுடன் மேலும் 600 மில்லியன் ரூபா வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

குறித்த நிதியையும் விரைவில் கிழக்கு மாகாணத்துக்கு வழங்க நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி நிதியமைச்சர் ரவிகருணாநாயக்கவுக்கு பணிப்புரை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

# மக்கள் போராட்டங்களை அரசால் இனிமேல் கட்டுப்படுத்த முடியாது

## ஜே.வி.பி.கூறுகிறது

கொழும்பு, டிசெ.02

அரசுக்கு எதிரான மக்கள் போராட்டங்கள் இனிமேல் அரசால் கட்டுப்படுத்தவே முடியாது என்று ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றிய அந்தக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத்தே இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் கூறியவை வருமாறு:-

அரசால் மக்கள் மீது மேலும் மேலும் வரிச்சுமைகள் சுமத்தப்படுவதுடன் அதற்கு எதிராக வீதிக்கு இறங்கும் மக்கள் மீது பொலிஸாரைக் கொண்டு தாக்குதல்களும் நடத்தப்படுகின்றன.

எவ்வாறாயினும் மக்கள் அரசுக்கு எதிரான போராட்டங்களை தீவிரப்படுத்தியுள்ளனர். எந்த வகையிலும் மக்கள் போராட்டத்தை அரசால் தடுக்க முடியாது-என்றார். (ஏ)

# இலங்கைக்கான கியூபாவின் புதிய் தூதுவர் நியமனம்

கொழும்பு, டிசெ.02

இலங்கைக்கான கியூபா நாட்டின் புதிய தூதுவராக ஜூவானா எலெனா ரமோஸ் ரோட்றிக்ஸ் என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார். அவருக்கான நியமனக்கடிதத்தை ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று வழங்கினார்.

புதிய தூதுவரின்கீழ் கியூபாவுடனான இலங்கை உறவுகள் மேலும் வலுப்பெறும் என்று தாம் நம்புவதாக ஜனாதிபதி குறிப்பிட்டார். (எ)

# ஆட்பதிவுத் திணைக்களம் நாளை திறந்திருக்கும்

கொழும்பு, டிசெ.02

ஆட்பதிவுத் திணைக்களம் நாளை சனிக்கிழமை திறந்திருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சைக்கு இம்முறை தோற்றும் மாணவர்களுக்கு அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கிலேயே இந்த நடவடிக்கையை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சாதாரண தர மாணவர்களுக்கு அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொடுக்க கடந்த இரண்டு வாரங்களாக ஆட்பதிவுத் திணைக்களத்தில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்தக் காலப் பகுதியில் பெரும்பாலான மாணவர்கள் அங்கு சமூகமளித்திருந்திருந்தனர் என்று தெரியவந்துள்ளது.

இதன்படி, நாளை சனிக்கிழமையும் மாணவர்களின் நலன் கருதி காலை 08.30 மணி தொடக்கம் மாலை 04.30 மணி வரை, சுகுறுபாயவிலுள்ள ஆட்பதிவுத்திணைக்களத்தைத் திறக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (எ)

# உள்நாட்டு விமான சேவையை ஆரம்பிப்பது தொடர்பில் தீர்மானம்

கொழும்பு, டிசெ.02

இலங்கையில் உள்நாட்டு விமான சேவை ஒன்றை ஆரம்பிப்பது தொடர்பில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சர்வதேச உள்நாட்டுப் போக்குவரத்து விதிகளுக்கு அமைய சிவில் பயணிகள் போக்குவரத்தினை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் மற்றும் தனியார் நிறுவனங்கள் தொடர்புபட்டுள்ள வர்த்தகமாக உள்நாட்டு விமான சேவை ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய இலங்கை விமானப் படையுடன் இணைந்து கூட்டு வர்த்தகம் ஒன்றை ஆரம்பிப்பதற்காக தகுதியான முதலீட்டாளர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இந்த நடவடிக்கைக்கு போதுமான நிதி வழங்கக்கூடிய தனியார் நிறுவனங்களின் யோசனையைக் கோரும் திட்டத்துக்கு, அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அதற்கமைய வெகுவிரைவில் உள்நாட்டு விமான சேவை நடைமுறைப்படுத்தப் படும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.

(எ)

## நாளை

03.12.2016
சனிக்கிழமை
திதி : சதுர்த்தி முன்னிரவு 11.31 வரை.
நட்சத்திரம் : பூராடம்
காலை 6.30 வரை
சுபநேரம் 3.15 – 4.45 வரை
இராகுகாலம் 9.15 – 10.45 வரை

JSAC

பெண்களுக்கெதிரான
வன்முறை ஒழிப்பு செயற்பாடு
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)
ஆணுக்கு நிகராய் இங்கு பெண்களும்
உழைக்கையிலே,கொடுப்பனவுகளில் மட்டும்
பாரபட்சங்கள்ஏன்?. சம கூலி பேணுவோம்.
சமத்துவத்தினை நிலைநாட்டுவோம்.
யாழ். சமூக செயற்பாட்டு மையம்

16
2016

# நாங்கள் சம உரிமையுடையோராக வாழும் சூழல் விரைவில் ஏற்படும்

## வடமாகாண சபை உறுப்பினர் சுகிர்தன்



இந்த நாட்டில் நாங்களும் சம உரிமையுடைய சம அந்தஸ்து உடைய பிரஜைகளாக வாழக் கூடிய நிலை விரைவில் ஏற்படும்.அப்போதுதான் மடிந்த எமது உறவுகளின் ஆத்மா சாந்தி அடையும்.

எதிர்வரும் 10ஆம் திகதி இடைக்கால அறிக்கையின் மொத்தமான அறிக்கை வெளியிடப்பட இருக்கிறது. அதில் எங்களது அபிலாசைகள் நிறைவேற்றக் கூடிய வகையில் அத் தீர்வுத்திட்டம் அமையும்.

இவ்வாறு தெரிவித்தார் வடமாகாணசபை உறுப்பினர் சந்திரலிங்கம் சுகிர்தன்.

வடக்கு மாகாண சபையின் நிதி ஒதுக்கீட்டில் இருந்து நவிண்டில் கலைமகள் சனசமூக நிலையத்துக்கான உடற்பயிற்சி உபகரணம் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

அங்கு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றும் போது தெரிவித்தவை வருமாறு:-

இன்று எமக்கு உள்ள பிரச்சினைஒற்றுமை இன்மையாகும். கழகங்களும் சரி கட்சிகளும் சரி புரிந்துணர்வுடன் செயற்படுவதில்லை.

ஒற்றுமை இன்மையை எப்போது வெளிப்படுத்துகிறோமோ அப்போதே எமக்கான வெற்றிகள் அனைத்தும் எம்மை விட்டு விலகிப் போகின்றன.

விளையாட்டில் ஆர்வமுடையோர், ஆர்வமற்றோர் என்று இல்லாமல் எல்லோரும் இணைந்து போராடி வெற்றி பெறவேண்டும்.

இங்கு கழகங்களுக்கு வாங்கப்பட இருக்கும் உடற்பயிற்சி உபகரணங்கள் உங்களது வரிப் பணத்தில் பெறப்பட்டவை. நீங்கள் செலுத்தும் வரிப்பணத்தில் ஒரு பகுதி எமக்காக் சிபார்சு செய்யப்பட்டு அதன்மூலம் வழங்கப்படுகிறது.

நாங்கள் எதற்காக அறுபது வருட காலமாகப் போராடினோமோ அதற்கான தீர்வு ஒன்று எமது கைகளில் கிடைக்கக் கூடிய சாத்தியமான நிகழ்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

கடந்த 19ஆம் திகதி முதலாவது இடைக்கால அறிக்கை ஒன்று அரசமைப்பு சபையால் முன்வைக்கப்பட்டுள்ளது.

மேலும் ஆறு விடயங்களை உள்ளடக்கிய மொத்தமான இடைக்கால அறிக்கை 10ஆம் திகதி முன்வைக்கப்படவுள்ளது. அந்த அறிக்கைகள் முன் வைக்கப்படும்போது எங்களது அபிலாசைகளை நிறைவேற்றக் கூடிய வகையில் எமது உணர்வுகளுக்கு வெளிச்சத்தை ஏற்படுத்தும் விதத்தில் அத் தீர்வுத் திட்டம் அமையும் என்பது எமது எதிர்பார்ப்பு.

நிச்சயம் அத்தீர்வுத் திட்டம் அமையும். அப்போது நாங்களும் இந்த நாட்டின் பிரஜைகளாக சகல உரிமைகளோடும் அந்தஸ்தோடும் வாழும் நாள் வெகு விரைவில் வரும். - என்றார். (இ-40)

### பொலிஸார் மீது மிளகாய்ப் பொடி வீசியவருக்கு மறியல்

மந்திகை, டிசெ.02

துன்னாலை வடக்கு பகுதியில் உள்ள பொலிஸ் காவலரணில் கடமையில் ஈடுபட்டிருந்த பருத்தித்துறை பொலிஸார் மீது மிளகாய் பொடி வீசி ஆயுதங்களைப் பறிக்க முற்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய நபரை எதிர்வரும் 5ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிவான் பெருமாள் சிவகுமார் செவ்வாய்க் கிழமை உத்தரவிட்டார்.

கடந்த 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை துன்னாலை வடக்கு கெட்டிசந்தி பகுதியில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மீது மிளகாய்ப்பொடி வீச்சு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இச் சம்பவம் தொடர்பில் நெல்லியடி குடவத்தை பகுதியைச் சேர்ந்த 21 வயதுடைய இளைஞன் ஒருவரைப் பொலிஸார் செவ்வாய்க் கிழமை கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தியிருந்தனர். (ஐ)

### 'பிரசர் குக்கர்' வெடித்து பெண் படுகாயம்

யாழ்ப்பாணம், டிசெ.02

பிறசர் குக்கரில் கடலை அவித்துக் கொண்டிருந்த குடும்பப் பெண் அது வெடித்து சிதறியதில் எரிகாயங்களுக்கு இலக்கானார்.அந்தப்பெண் யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். யாழ்ப்பாணம் ஆனைப் பந்தியில் நடந்த இந்த சம்பவத்தில் ரவிதரன் நிர்மலா (36 வயது) என்ற குடும்பப் பெண்ணே எரி காயங்களுக்கு உள்ளானவராவார். (இ-9)

## 52 ஆவது ஆண்டில் திருமறைக் கலாமன்றம்

ஆயிரக்கணக்கான கலைஞர்களின் உருவாக்கக் களமாக அமைந்த தமிழ்க் கலைகளின் காப்பரணாக, இன,மத, மொழி பேதங்களைக் கடந்த மானுடர்களின் ஒன்றுபட்ட இணைவின் விளை நிலமாக விளங்கும் திருமறைக் கலாமன்றம் என்ற கலைநிறுவனம் நாளை சனிக்கிழமை 52 ஆவது ஆண்டில் கால் பதிக்கின்றது.

இதனை முன்னிட்டு நாளைக் காலை 7.15 மணிக்கு புதுமைமாதா ஆலயத்தில் இடம்பெறும் சிறப்புப் பிரார்த்தனை நிகழ்வைத் தொடர்ந்து யாழ். திருமறைக் கலாமன்ற பணிமனையில் அங்கத்தவர்களுக்கான ஒன்று கூடல் இடம்பெறும். இந் நிகழ்வில் அனைத்து அங்கத்தவர்களையும் கலந்து கொள்ளுமாறு திருமறைக் கலாமன்றம் அழைப்பு விடுத்துள்ளது.

இதேவேளை, இன்றுமுதல் எதிர்வரும் ஆறாம் திகதிவரை கொழும்பிலும், கண்டியிலும் இடம்பெறும் சர்வதேசநாடுகள் பங்குகொள்ளும் ''நட்டான்டா'' சர்வதேச நடன விழாவில் திருமறைக் கலாமன்றக் கலைஞர்கள் வழங்கும் ''பிரணவ''என்னும் நடன நிகழ்வு நாளை மாலை 6.30 மணிக்குக்கொழும்பில் உள்ளதாமரைத் தடாக அரங்கில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பொருத்தமான இடத்திலேயே 'மருதம்' நீர்ப்பாசன பொறியியலாளர் விளக்கம்

'மருதம்' பூங்கா குறித்த செய்தி நேற்றைய காலைக்கதிரில் ''குளமாகிவிட்டது மருதம் பூங்கா; செலவழித்த பல இலட்சம் வீண்'' என்ற தலைப்பில் வெளியாகி இருந்தது.

இந்தச் செய்தி குறித்து கிளிநொச்சி நீர்ப்பாசனப் பொறியிலாளர் த. செந்தூரன் படங்களுடன் கூடிய விளக்கத்தை நமது அலுவலகத்துக்கு நேற்று அனுப்பி இருந்தார்.

அவரது விளக்கக் குறிப்பு விவரம் வருமாறு:-

வடமாகாண விவசாய அமைச்சினால் வருடந்தோறும் நடத்தப்படும் கார்த்திகை 1 தொடக்கம் 30 வரையிலான வடமாகாண மரநடுகை மாதச் செயற்றிட்ட தொடக்க நாள் நிகழ்வுக்கான இடமாக கிளிநொச்சி மாவட்டம் தெரிவு செய்யப்பட்டு பொருத்தமான இட ஒழுங்கமைப்பு, விழா ஏற்பாடு என்பன வடமாகாண விவசாய அமைச்சினால் நீர்ப்பாசனத் திணைக்களத். திடம் ஒப்படைக்கப்பட்டது. அதன் பிரகாரம் மகிழங்காடு பிரதேசத்தில் இரணைமடு இடதுகரை வாய்க்காலின் அருகில் மருதம் அமைக்கப்பட்டுள்ள குறித்த பிரதேசத்தில் நடத்துவதாகத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

குறித்த'மருதம்' அமைக்கப்பட்ட பிரதேசம் நீர்ப்பாசன ஒதுக்கீட்டு காணியென்பதுடன், புதர் நிறைந்த தாழ் நிலப் பகுதியுமாகும். அக்குறு நிலப் பகுதியை அழகுபடுத்தவும் பிரதேசத்துக்குப் பயன்பாடுள்ளதாகவும் மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதேசத்தின் சமூக ஆர்வலர்கள் கடந்த காலத்தில் நீர்ப்பாசனத் திணைக்களத்திடம் கோரிக்கை விடுத்தமைக்கு அமைவாகவும், இந் நிகழ்வையும் கருத்திற் கொண்டும், மழைக்காலத்தில் வெள்ளம் தேங்கும் என்பதை அறிந்தவாறே இதற்குரிய திட்ட முன்மொழிவு ஒன்றினை நீர்ப்பாசனத் திணைக்களம் தயார்செய்தது. அதன் பிரகாரம் திணைக்கள வளங்களைப் பயன்படுத்தியும், ஏனைய நிறுவனங்களது பங்களிப்புடனும் அபிவிருத்தி செய்யப்பட்டது.

மேலும் இத்தாழ் நிலப் பிரதேசத்தின் தன்மைகளுக்கேற்ப தகவமைவு கொண்டு வளரக் கூடிய மரங்களுக்கு பொருத்தமான இடம் என்பதை நிபுணத்துவ ஆலோசனை மூலம் உறுதி செய்யப்பட்டது. மேலும் இத்தாழ் நிலப் பிரதேசம் வெள்ள நீரால் பாதிக்காத வகையில்,அழகுபடுத்தப்பட்ட குட்டை ஒன்று உட்புறத்தில் அமைக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது

ஐவகை நிலங்களில் 'மருதம்'என்பது வயலும் வயல் சார்ந்த இடமும் என்பதால் எமது மண்ணுக்கே உரித்தான மரங்களை எமது எதிர்கால சந்ததியினருக்கு கைமாற்றுவதற்கு ஏற்றவகையில் அரிய வகை மரங்களை இம்மருதம் எனும் பகுதியில் நட்டுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இங்கு மருத நிலமரங்களின் மாதிரிப் பூங்கா என அடையாளப்படுத்தப்பட்டிருப்பதனால், இது பொழுது போக்கு இடமாகவோ அல்லது வனப்புடன் காட்சியளிக்கும் சிறு பூமரங்களிலான பூங்காவோ அல்ல. உண்மையில் தாழ் நிலத்திலும் வளரக்கூடும் என அடையாளப்படுத்தப்பட்ட மரங்களை நட்டி, எமது சமூகம் பயன் பெறவேண்டும் என்ற அடிப்படையில் மனித முயற்சியிலான சிறு வனத்தினை உருவாக்குதலை கொண்ட திட்டமே இதுவாகும்.

எனவே உரியதொழில்நுட்ப மற்றும் நிபுணத்துவ ஆலோசனையுடன்மேற்கொள்ளப்பட்ட ஒரு செயற்பாட்டை எதுவித முன்னறிவும் இல்லாது மேற்கொள்ளப்பட்ட திட்டமாக கருதும் வகையில் வெளியிடப்பட்ட செய்தியைப் பார்க்கும் போது, அர்ப்பணிப்புடன் செயற்பட்ட அத்தனை பேருக்கும் மனச்சோர்வைத் தந்துள்ளதுடன், எதிர்காலத்தில் இவ்வாறான சமூகநலன் சார்ந்த சிறப்பான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு எவரும் முன்வரத் தயங்கும் நிலையையே உருவாக்கும் என எண்ணுகின்றோம்.

மேலும் கடந்த 21 தொடக்கம் 23 ஆம் திகதி வரையில் கிளிநொச்சி மாவட்டத்தில் குறுகிய காலத்துக்குள் பெய்த அதி கூடிய மழைவீழ்ச்சி குறிப்பாக 23ஆம் திகதிகுறித்த மருதம் பகுதியையும் வெள்ளம் சூழ்ந்திருந்தது. ஆனாலும் எமது திணைக்களத்தினால் மேற்கொள் எப்பட்ட தேவையான மாற்று ஏற்பாடுகளின் மூலம் அது உடனடியாக சாதாரணநிலைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதுடன், இவ் வெள்ளப் பாதிப்பானது மருதம் அமைக்கப்பட்டதன் நோக்கத்தை இல்லாமல் செய்து விடவில்லை. தற்போதும் தொடக்க நாள் நிகழ்வில் உணர்வுபூர்வமாக நடப்பட்ட புங்கை மரங்கள் அதே இடத்தில் நிலைத்துள்ளது என்பதனையும் அறியத் தருகின்றோம்.

மேலும் மருதம் மாதிரிப்பூங்காவின் நீண்டகால விளைவிற்கான கண்காணிப்பு மற்றும் பராமரிப்புக்குரிய ஒழுங்குகள் திட்டமிட்டவாறே செயற்படுத்தப்பட்டும் வருகின்றன.

மேலும் குறித்த மருதம் மாதிரிப் பூங்கா திணைக்கள வளங்களைப் பயன்படுத்தியும், ஏனைய நிறுவனங்கள்து பங்களிப்பினையும் பயன்படுத்தியும் மேற்கொள்ளப்பட்டமையால் பயன்படுத்தப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட நிதி, நிர்ணயிக்கப்பட்ட இலக்கை மருதம் பூங்கா நீண்ட காலத்தில் நிச்சயம் அடையும் என்பதனால் வீண் விரயமாக்கப்பட்டு விட்டது என அச்சம் கொள்ளவேண்டிய தில்லை. -என்றுள்ளது. (இ)

# கிளி/முருகானந்தாக் கல்லூரியில் தற்காலிக வகுப்பறை வீழ்ந்தது





முரசுமோட்டை, டிசெ.02

''நடா'' புயல்காற்று நேற்றுவடக்கைஅச்சுறுத்திய நிலையில் நேற்றுக் காலை கிளிநொச்சியில் பலமாக வீசிய காற்றால் காலை எட்டு முப்பது மணியளவில் கிளிநொச்சி முரசுமோட்டை முருகானந்தா கல்லூரியில் உள்ள தற்காலிகவகுப்பறைதொகுதி முற்றாக பாறி வீழ்ந்துள்ளது.

இந்தச் சம்பவம் நடந்த வேளையில் மாணவர்கள் இருந்தபோதிலும்எவருக்கும் எந்தவித பாதிப்புக்களும் ஏற்படவில்லை.

தரம்ஆறுதொடக்கம் உயர்தரம் வரை கலை, வர்த்தகம், கணிதம் விஞ்ஞானம் ஆகிய பிரிவுகளைக் கொண்டு இயங்கி வருகின்ற இப்பாடசாலையில் கிளிநொச்சி கண்டாவளைப்பிரதேசசெயலர் பிரிவுக்கு உட்பட்ட பிரதேசமாணவர்கள்கல்விகற்று வருகின்றனர்.

குறித்த பாடசாலை ஒரு 1ஏபி பாடசாலையாக இருக்கின்ற போதும் போதியளவு வகுப்பறை வசதிகள் இன்றி நீண்ட காலமாக செயற்பட்டு வருகிறது. இது தொடர்பில் பாடசாலை சமூகமும் பெற்றோர்களும் உரிய தரப்பினர்களிடம்கொண்டு சென்றும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று பெற்றோர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு தற்காலிகமாக இயங்கி வந்த வகுப்பறை கொட்டகை ஒன்றே அனர்த்தத்துக்கு உள்ளாகியுள்ளது.

(ஐ-70-81)

## கலந்துரையாடல்

வடமராட்சி, நெல்லியடி மத்திய கல்லூரி கற்கை நிலையத்தில்2011-2013ஆண்டுகளில் கல்வி பயின்று கல் விமாணிப்பட்டப் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்த ஆசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளை பிற்பகல் 3 மணிக்கு அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் இடம்பெறும் என்று நெல்லியடி மத்திய கல்லூரிகல்விமாணி நெறி ஆசிரியர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

(ஐ-7)

## காஸ்ட்ரோ நினைவுக்கூட்டம்

யாழ்.சர்வதேசமார்க்கசியக் குழுவின் ஏற்பாட்டில் ஏகாதிபதியத்துக்கு எதிராக போராடிய வாழ்நாள் சாதனையாளர் தோழர்காஸ்ட்ரோவின்நினைவு தினக்கூட்டம் நாளை மாலை 4 மணிக்கு யாழ்.ஸ்ரான்லி வீதியில்அமந்துள்ளடி.எம்.ஐ. கல்வி நிலையத்தில் இடம்பெறும். ஏ.சி.ஜோர்ஜ் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில்ஆர்வலர்கள்அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

(இ-7)

## அரச கலை விழா

கொழும்பு, டிசெ.02

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட தேவையுடையோர் தொடர்பான அரச கலைவிழா நாளை சனிக்கிழமைமுற்பகல்10மணியளவில் கொழும்பு-7 இல் அமைந்துள்ள நெலும் பொக்குன கலையரங்கில் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் அமைச்சர் எஸ்.பீ.நாவின்ன, பிரதி அமைச்சர் பாலித தெவரப்பெரும ஆகியோரும் கலந்து கொள்வர். தொடர்ந்து நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற வெற்றியாளர்கள்விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

(ஐ-7)



யாழ்.நல்லூர் கோயில் வீதியில் நேற்று மிகப்பெரிய வேப்பமரம் வீதியின் குறுக்கே வாகனங்கள் செல்ல முடியாதவாறு முறிந்து வீழ்ந்து.அதனால் அந்த வீதியின் ஊடான போக்குவரத்து சில மணி நேரம் தடைப்பட்டது. தெய்வாதீனமாக மக்களுக்கோ,உடமைகளுக்கோ,சேதம் எதுவும் ஏற்படவில்லை. (இ-10)

## “மனவானின் மழைத்துளிகள்” கவிதை நூல் வெளியீட்டு விழா

வேலணை டிசெ.02

புளியங்கூடல் தாய்சக்தி கலைக்கூடத்தின்ஏற்பாட்டில் கவிஞர் வேணையூர் சுரேசின் ''மனவானின்மழைத்துளிகள்'' கவிதைத் தொகுதி வெளியீடும், திருக்கேதீச்சரம் சிவனருள் இல்லம் உருவாக்கிய ''அம்மை அப்பன் அருட்பாமாலை'' இறுவட்டு அறிமுகமும் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். சேர். பொன்.இராமநாதன் வீதியிலுள்ள ''ராஜா கிறீம் ஹவுஸ்'' கம்சியா மண்டபத்தில் இடம்பெறும்.

நிகழ்வின் பிரதம விருந்தினராக வட மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள்அமைச்சர்த.குருகுலராஜாவும், சிறப்பு விருந்தினராக யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தியும், யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக புளியங்கூடல்இராஜமகாமாரி அம்மன் ஆலய அறங்காவலர் சி.செந்தூரன், புதிய நதியா நகை மாடத்தின் உரிமையாளர்ச.ஜெகதீஸ்வரன், நோபிள் பேப்பர்ஸ் இன்ரர்நஷனல் தனியார் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர்களான ச.சண்முகானந்தன், கு.சிறீதர் ஆகியோரும் கலந்து கொள்வர்.

திருமதி சித்ரா பிரசன்னாவின் வரவேற்புரையுடன் ஆரம்பமாகும் இந்த நிகழ்வில் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத் தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் ஆசியுரையையும், ஓய்வு நிலை விரிவுரையாளர் பண்டிதர் கலாநிதி செ.திருநாவுக்கரசு வாழ்த்துரையும், ‘வலம்புரி’ ஆசிரியர் ந.விஜயசுந்தரம் சிறப்புரையையும் நிகழத்துவர்.

முதலமைச்சரின் வாழ்த்துச் செய்தியுடன் பிரதம விருந்தினர் உரையும் இடம்பெறும். தொடர்ந்து கவிதை நூலின் மதிப்பீட்டுரைகளை கோப்பாய்ஆசிரியகலாசாலையின் ஓய்வு பெற்ற அதிபர் கவிஞர் சோ.பத்மநாதனும், '' அம்மை அப்பன் பாமாலையின் மதீப்பீட்டுரையை கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் உப அதிபர் எஸ். லலீசனும், ஏற்புரையை நூலாசிரியரும் வழங்குவர்.

நிகழ்வின் குருவாக இருந்து நூலாசிரியரை உருவாக்கிய ஆசான்களான ஓய்வு பெற்றஅதிபர்களானபொ.நடராசா, ஆ.அருமைநாயகம், ச.வாமதேவன் மற்றும் ஓய்வு பெற்ற ஆசிரியை திரமதி இ.யோகேஸ்வரி, ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர் ந.ஜெகநாதன் ஆகியோர் மதிப்பளித்து கௌரவம் பெறவுள்ளனர்.

(இ-7)

## பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், டிசெ.02

இலங்கை கல்வி நிர்வாக சேவையில் கடமையாற்றி ஓய்வுபெற்ற கல்வி நிர்வாகச் சேவையாளர்களுக்கான தலைமைச் சங்கப் பொதுக் கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் ராஜகிரிய ஜனாதிபதிவித்தியாலயத்தில் நடைபெறும்.

இலங்கை கல்வி நிர்வாக சேவையில் கடமையாற்றி, சம்பள முரண்பாடுகள் காரணமாக பாதிக்கப்பட்டவர் கள் இந்தச் சங்கத்தை உருவாக்கி வருகின்றனர். ஓய்வுபெற்ற தமிழ் உத்தியோகத்தர்கள் பலர் இருந்தும் இந்தச் சங்கத்தில் இணைந்து கொள்ளாமல் இருக்கிறார்கள் என்று கூறப்பட்டது.

இப்பொதுக் கூட்டத்துக்கு அனைத்துகல்விநிர்வாகசேவையாளர்களையும் கலந்து கொள்ளுமாறு தலைமைச் சங்க உறுப்பினர் ஆ.பொன்னையாவேண்டுகோள்விடுத்துள்ளார்.

(ஐ-7)

## விதிமுறைகளை மீறிய சாரதிகளுக்கு ரூபா 25 ஆயிரம் அபராதம் விதிப்பு

போக்குவரத்து விதி முறைகளை மீறிய சாரதிகள் இருவருக்கு 23ஆயிரத்து ஐந்நூறு ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார். சாவகச்சேரி நீதி மன்ற பதில் நீதிவான் செல்லையா கணபதிபிள்ளை.

காப்புறுதிப் பத்திரம் இன்றி மோட்டார் சைக்கிள் செலுத்திய ஓட்டுனருக்கு 10ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார்.

அத்துடன்மதுபோதையில் ஆபத்தான முறையிலும், தவறான முறையிலும் முந்திச் சென்ற சாரதி ஒருவருக்கு 13ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. அத்துடன் அவரது சாரதி அனுமதிப் பத்திரத்தை 6 மாதகாலம் தடுத்து வைக்கவும் நீதிவான் உத்தரவிட்டார்.

## தமிழ்க் கல்விமான்கள் பற்றிய ஆவணத் தொகுப்புக்கு ஏற்பாடு

கொழும்பு டிசெ.02

இலங்கையில் வாழ்ந்த தமிழ் விஞ்ஞானிகள், தமிழ் கல்விமான்கள், சட்ட நிபுணர்கள், தலைசிறந்தநிர்வாகிகள், தமிழ்ச்சமுகத்துக்குத் தொண்டாற்றும் பயன்மிக்க நிறுவனங்களை உருவாக்கியோர் மற்றும் தொழில் முனைவர்கள் ஆகியோரின் வரலாற்றையும், சாதனையையும் ஆவணப்படுத்த ஏற்பாடாகியுள்ளது. சம்பந்தப்பட்டவர்கள் தொடர்பான விவரங்களையும், நிழற்படங்களையும் தந்துதவும்படி கொழும்புத் தமிழ்ச் சங்கம் கேட்டுக் கொள்கிறது.

தகவல் தருவோரின் பெயர்களும் ஆவணப்பிரிவில் இடம்பெறும் என்றும், தகவல்கள் அனைத்தையும் ஆதாரபூர்வமாக குறிப்புகளுடன் பின்வரும் முகவரிக்கு அனுப்பி தங்களின் பணிக்கு உதவ முடியும் என்றும் தமிழ்ச் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி அறிவித்துள்ளார்.

அஞ்சல் முகவரி :- இல 7, சங்கம்ஒழுங்கை, கொழும்பு-06 தொலைபேசி இலக்கம் :- 0112363759.

(இ)

## புலமைப்பரிசிலும் கௌரவிப்பும்

கரவெட்டி, டிசெ.02

கரவெட்டிப் பிரதேச செயலக வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களம் நடத்தும் சிசுதிரிய புலமைப்பரிசில் வழங்குதலும், உத்தியோகத்தர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் மூத்த விநாயகர் திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

கரவெட்டிப் பிரதேச செயலாளர் சி.சிவஸ்ரீ தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வுகளுக்கு பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகனும், சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சிவலயக்கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார், யாழ். மாவட்ட செயலக வாழ்வின் எழுச்சிஅபிவிருத்தித்திணைக்களப் பணிப்பாளர் க.மகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்வர்.

(ஐ-7)

# அரேபிய கலாசாரங்களை இலங்கைக்கு கொண்டு வரவேண்டாம்

## ஜே.வி.பி. தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.02

இலங்கைக்கு இஸ்லாம் மதத்தை கொண்டுவருவதில் பிரச்சினை இல்லை. ஆனால், அரேபிய கலாசாரங்களை இலங்கைக்கு கொண்டுவர வேண்டாம் என மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க நேற்று நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இருப்பது இலங்கை கலாசாரம் எனவும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் வரவு-செலவு திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்:-

சில இஸ்லாமியர்கள் உட்பட பௌத்தர்களும் பேஸ்புக் மூலம் வீரர்களாக செயற்படுகின்றனர். அவர்கள் ஒருவருக்கும் தமது மதம் தொடர்பில் எதுவும் தெரியாது. வெறும் இனவாதத்தை பரப்பி பின்னர் அரசியலுக்கு வருகிறார்கள் என்றும் தெரிவித்துள்ளார்.

# மகசின் சிறையில் அரசியல் கைதி திடீர் மரணம்!

கொழும்பு, டிசெ.02

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு கொழும்பு மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த அரசியல் கைதி ஒருவர் நேற்றைய தினம் திடீரென உயிரிழந்துள்ளார்.

70 வயதான குணரத்ன கஜவீர என்பவரே வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார்.

கடந்த 2006 ஆம் ஆண்டு இடம்பெற்ற காலி துறைமுக தாக்குதலுடன் தொடர்பு பட்டவர் என்ற சந்தேகத்தின் பேரில் கடந்த 2009 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 7 ஆம் திகதி பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் குணரத்ன கஜவீர கைதுசெய்யப்பட்டிருந்தார்.

இந்த நிலையில், குணரத்ன கஜவீரவின் 63 வயதான மனைவி வைரமுத்து சரோஜா தேவியும் இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு வெலிக்கடை பெண்கள் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, குணரத்ன கஜவீரவின் 44 வயதான பந்துல கஜவீர என்ற மகனும், 45 வயதான மருமகன் அஜித் நிஜாந்த எதிரிசிங்க ஆகியோரும் இந்த சம்பவத்துடன் தொடர்பு பட்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு மகசின்சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

உயிரிழந்த அரசியல் கைதியான குணரத்ன கஜவீரவின் சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக அனுப்பப்பட்டுள்ளது. (க)

# மங்களவின் கருத்தை மறுக்கிறார் கோட்டாபய



கொழும்பு, டிசெ.02

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர வெளியிட்ட கருத்தை, முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ மறுத்துள்ளார்.

அமெரிக்காவில் தூதரக பிரதிநிதி இல்லாத லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் வீடு ஒன்று கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன், அதில் கோட்டாபய ராஜபக்ஷவின் மகன் தங்க வைக்கப்பட்டுள்ளார் என நாடாளுமன்றில் சுட்டிக்காட்டப்பட்டது. ஒரு வருடமும் 9 மாதங்களும் அந்த வீட்டுக்கான நிதி செலுத்தி பயன்படுத்தப்பட்டு வந்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்திருந்தார்.

வெளிவிவகார அமைச்சு நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதத்தின் போதே, அமைச்சர் மங்கள சமரவீர நேற்று முன்தினம் இந்த தகவலை வெளியிட்டிருந்தார்.

இந் நிலையில், இந்த குற்றச்சாட்டை மறுத்துள்ள கோட்டாபய, இது தொடர்பாக தனது பேஸ்புக் பக்கத்தில் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

எனது மகன் அரசாங்க பணத்தில் அமெரிக்காவில் வீடு கொள்வனவு செய்து வாழவில்லை. அத்துடன் மகனது பாதுகாப்புக்காக இரண்டு இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்பதும் போலியான குற்றச்சாட்டாகும்.

வெளிவிவகார அமைச்சரால் வெளியிடப்பட்ட அடிப்படையற்ற கருத்துக்களுக்கு எனது கண்டனத்தை வெளியிடுகின்றேன். இது எனது மதிப்பை இழக்கச் செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட மற்றுமொரு முயற்சியாகும் என கோட்டாபய ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார். (க)

# பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஹொங்கொங்கிற்கு பயணம்!



கொழும்பு, டிசெ.02

15ஆவது ஜேர்மனி வணிகத்திற்கான ஆசிய பசுபிக் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று ஹொங்கொங் பயணமாகிறார்.

ஜேர்மனிய, ஆசிய பசுபிக் பிராந்திய தொழில் முயற்சியாளர் மத்தியிலான தொடர்புகளை வலுப்படுத்துவதற்காக இந்த மாநாடு, நேற்று ஆரம்பமானது. இம் மாநாடு நாளை சனிக்கிழமை வரை ஹொங்கொங் சர்வதேச கண்காட்சி மற்றும் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

ஜேர்மனிய மற்றும் ஆசிய பசுபிக் பிராந்தியத்தைச் சேர்ந்த முன்னணி சட்டவாக்குநர்கள், கல்விமான்கள், பொருளாதார நிபுணர்கள், தொழில் முயற்சியாளர்கள் ஆகியோர் இந்த மாநாட்டில் கலந்து கொள்கின்றனர்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வெளியேறுவது என்ற பிரிட்டனின் தீர்மானத்தை அடுத்து நடத்தப்படும் முதல் மாநாடு என்பதால், ஜேர்மனிக்கும், ஆசிய பசுபிக் பிராந்தியத்திற்கும் முக்கியமானதாக இந்த மாநாடு அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

# அலுவலகப் பராமரிப்புக்கு எம்.பிக்கு ஒரு லட்சம் ரூபா

கொழும்பு, டிசெ.02

நாடாளுமன்ற உறுப்பினர்களின் கொடுப்பனவுகளை அதிகரிக்குமாறு முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சர் கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

இந்தவகையில், நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர், தனது அலுவலகத்தைப் பேணும் பொருட்டு அதற்கான செலவாக மாதாந்தம் ஒரு லட்சம் ரூபாவை வழங்குவதற்கு அமைச்சரவையின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், நாடாளுமன்ற அமர்வுகளுக்காக வழங்கப்பட்டு வந்த நாளாந்த கொடுப்பனவு 500 ரூபாவை, 2,000 ரூபாவாக அதிகரிப்பதற்கும் அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளது.

குறித்த கொடுப்பனவுகள் யாவும் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் வழங்குவதற்கு தீர்மானித்துள்ளதாகவும் அமைச்சர் கயந்த கருணாதிலக்க மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## குணரட்ணத்தின் குடியுரிமை பரிசீலனை

கொழும்பு, டிசெ.02

முன்னிலை சோஷலிச கட்சியின்குமார்குணரட்ணம் உரிய முறையில் விண்ணப்பித்திருந்தால் குடியுரிமை வழங்குவது தொடர்பில் பரிசீலனை செய்யமுடியும் என அமைச்சர் எஸ்.பி. நாவின்ன தெரிவித்துள்ளார்.

சட்டவிரோதமாக நாட்டில் தங்கியிருந்தார் என்ற குற்றச்சாட்டில் குமார் குணரட்ன கைதுசெய்யப் பட்டு விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# நாடு திரும்பினார் மஹிந்த; கடும் நிலைப்பாட்டில் சீனா!



கொழும்பு, டிசெ.02

சீனாவுக்கு ஏழு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டிருந்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று நாடு திரும்பியுள்ளார்.

இந்த விஜயத்தின் போது, அண்மையில் கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களால் ஜி.எல்.பீரிஸின் தலைமையில் உருவாக்கப்பட்டுள்ள புதிய கட்சியின் முதல் கிளையை சீனாவில் ஆரம்பித்து வைத்துள்ளார்.

மேலும், சீன அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட பல நிகழ்வுகளில் மஹிந்த கலந்து கொண்டதுடன், சீனாவில் உள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களையும் பார்வையிட்டுள்ளார்.

கடந்த மாதம் 23 ஆம் திகதி சீன அரசாங்கத்தினது அழைப்பின் பேரிலேயே மஹிந்த சீனா சென்றிருந்தார்.

இதேவேளை, மஹிந்த ராஜபக்ஷவின் சீன விஜயத்தின் போது, இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் வெளியாரின் தலையீடுகளை எதிர்ப்பதாக சீனா தெரிவித்துள்ளது.

இது தொடர்பில், கடுமையான நிலைப்பாட்டை எடுத்திருப்பதாகவும் சீனா தெரிவித்துள்ளது.

மேலும், மனித உரிமைகளை ஓர் அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்தி, இலங்கையின் பெயரைக் கெடுப்பதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகளை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்றும் சீனா தெரிவித்துள்ளது.


சீனாவின் அரசவை உறுப்பினரும், சீன மக்கள் குடியரசின் வெளிவிவகாரங்களுக்கான முன்னணி குழுவின் பொதுச் செயலருமான யாங் யீச்சி மஹிந்தவுடனான சந்திப்பின்போது, இதனைத் தெரிவித்துள்ளார். (க)

# புதுக்குடியிருப்பில் நடந்த கலை, இலக்கிய விழா







முல்லைத்தீவு, டிசெ.02

முல்லைத்தீவு மாவட்ட கலாசார அதிகார சபை மற்றும் பேரவை இணைந்து நடத்திய மாவட்ட கலை இலக்கிய விழா -2016 நேற்று முன்தினம் பிற்பகல் 1.30 மணிக்கு புதுக்குடியிருப்பு பொன்னம்பலம் கலையரங்கில் வெகு சிறப்பாக நடைபெற்றது

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள அனைத்து பிரதேச செயலகங்களையும் சார்ந்த கலைஞர்களை ஒருங்கிணைத்து இவ்விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரனின் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வின் ஆரம்பத்தில் தமிழர்களின் பாரம்பரிய கலை கலாசார விழுமியங்களை சித்திரிக்கும் வகையில் அமைக்கப்பட்ட ஊர்திகள் மற்றும் பண்பாட்டு நடனங்கள் சகிதம் புதுக்குடியிருப்பு நகரிலிருந்து ஆரம்பமான பேரணி ஏ-35 வீதிவழியாக விழா மண்டபத்தை வந்தடைந்ததும் அங்கு நிகழ்வுகள் ஆரம்பமாகின.

இங்கு தமிழர்களின் பாரம்பரிய கலை விழுமியங்கள் இன்றும் பாதுகாக்கப்பட்டு வருகின்றமையை வெளிப்படுத்தும் வகையான கலை நிகழ்வுகளும் மற்றும் மாவட்டத்தில் வாழ்ந்து வரும் மூவின மக்களின் கலை உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையில் தமிழ், சிங்கள, முஸ்லிம் கலைஞர்களால் நிகழ்த்தப்பட்ட கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன.

இதேவேளை, இவ்விழாவின் சிறப்பு நிகழ்வாக ''முல்லைசாரல்'' நூல் வெளியீடும், மாவட்டத்தின் மூத்த கலைஞர்களைக் கௌரவிக்கும் வகையில் ஆறு கலைஞர்களுக்கு 'முல்லைக்கோ' விருது வழங்கலும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் குருகுலராஜா மற்றும் நாடாளு மன்ற உறுப்பினர் சாந்திசிறிஸ் கந்தராஜா,கலைஞர் பெரியதம்பி செல்லக்குட்டி, துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் ரவிச்சந்திரன், யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி ராஜ்உமேஸ் ஆகியோரும் மற்றும் முல்லைத்தீவு வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆதவன் ஆகியோரும் உதவி அரச அதிபர்கள், அரச அதிகாரிகள், கலைஞர்கள், கலை இலக்கிய ஆர்வலர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ-70-77)

# ஈச்சங்குளம் துயிலும் இல்லம் விடுவிப்பு குறித்து கலந்துரையாடல்

## தளபதியுடன் தமிழ் விருட்சம் அமைப்பினர் சந்திப்பு

வவுனியா, டிசெ.02

வவுனியா,மன்னார், முல்லைத்தீவு அடங்கலான வன்னி இராணுவக் கட்டளைத்தளபதிமேஜர்ஜெனரல் ருவான் குலதுங்கவுடன் நேற்றுமுன்தினம் தமிழ் விருட்சம் அமைப்பின்தலைவர் மற்றும் செயலாளர் ஆகியோர் கலந்துரையாடினார்.

வவுனியாவின் ஒரே ஒரு துயிலும் இல்லமான ஈச்சங்குளம் துயிலும் இல்லம் விடுவிப்பு சம்பந்தமாக கலந்துரையாடிய போது கருத்து தெரிவித்த ஜெனரல் குலசிங்க கூறியவை வருமாறு:-

''ஜனாதிபதி,பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர், பாதுகாப்புச் செயலாளர் ஆகியோர் விடுவிப்பு சம்பந்தமாக அறிவித்தல் தரவேண்டும். அப்படிதருமிடத்து உங்களின் கோரிக்கைக்கு சாதகமான பதிலே என்னிடமிருந்து கிடைக்கும். மக்களின் உணர்வை என்னால் புரிந்து கொள்ள முடியும்'' எனத் தெரிவித்துள்ளார்.

தமிழ் விருட்சம் அமைப்பின் ஆக்கபூர்வமான செயலுக்கும் கருத்துக்களுக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்த ஜெனரல் ''மக்கள் பிரதி நிதிகள் மட்டுமல்ல யாரும் தன்னுடன் இது தொடர்பாக வந்து பேச முடியும்.'' என்றார். (இ-100)

# காலநிலை சீர்கேட்டால் பிற்போடப்பட்ட ஆர்ப்பாட்டம்

கிளிநொச்சி, டிசெ.02


ஆனையிறவு,குறிஞ்சாதீவு உப்பளங்களைத் தனியார்மயமாக்குவதற்கு எதிரான ஆர்ப்பாட்டம் பிற்போடப்பட்டுள்ளது

கிளிநொச்சி ஆனையிறவு மற்றும் குறிஞ்சாதீவு உப்பளங்கள் தனியார் மயமாக்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்றுக் காலை ஆனையிறவு உப்பளத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்று மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டிருந்தது.

நாட்டில் நிலவுகின்ற சீரற்ற கால நிலை காரணமாக குறித்த எதிர்ப்பு நடவடிக்கை தற்காலிகமாக பிற்போடப்பட்டுள்ளது என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

காலை 9 மணிக்கு ஆனையிறவு உப்பளத்துக்கு முன்பாக ஆனையிறவு, குறிஞ்சாத்தீவு உப்பளங்களின் சுற்றயல் கிராம மக்கள் அமைப்புகள் இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தன.

காற்றுடன் கூடிய மழை காரணமாக குறித்த ஆர்ப்பாட்டத்தை பிற்போட்டுள்ளனர் எனவும் விரைவில் பிறிதொரு தினத்தில் எதிர்ப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அது தொடர்பில் அனைவருக்கும் அறிவிக்கப்படும் என்றும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ-70)



# மோதின இரு ஓட்டோக்கள்; பெண்கள் உட்பட4பேர் படுகாயம்

வவுனியா, டிசெ.02

வவுனியா - மன்னார் வீதியில் இரு ஓட்டோக்கள் நேருக்கு நேர் மோதி விபத்து ஏற்பட்டதில் பெண் உட்பட நால்வர் படுகாயமடைந்தனர்.

புதன்கிழமை இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவர்கள் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:-

வவுனியா - மன்னார் வீதியில் எதிர்த்திசையில் பயணித்த இரு ஓட்டோக்கள் நெளுக்குளம் பகுதியில் நேருக்கு நேர் மோதியதில் இவ்விபத்து ஏற்பட்டது.

இது தொடர்பான விசாரணைகளை நெளுக்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(ஐ-100)

நல்லிணக்கம் பேச்சளவில்

# தமிழனின் வரலாற்றை படிப்பதற்கும் தடை!

## வடக்கு கல்வி அமைச்சர் விசனம்



நல்லிணக்கம் என்று பேசிக் கொள்ளும் இந்தச் சந்தர்ப்பத்திலும் தமிழரின் வரலாற்றை தமிழர்கள் படிப்பதற்கு அரசு தடைவிதித்துள்ளது.

பேராசிரியர் குணசிங்கத்தின் தமிழர் வரலாற்று நூலை சுங்கத் திணைக்களத்தினர் கையகப்படுத்தியுள்ள நிலையில் இதனை நாம் உணர முடிகின்றது.

வடக்கு மாகாண கல்வி அமைச்சர் குருகுலராஜா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

புதன்கிழமை புதுக்குடியிருப்பில் நடைபெற்ற முல்லை மாவட்ட கலை இலக்கிய விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அங்கு அவர்மேலும் உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:-

பேராசிரியர் குணசிங்கம் தமிழர்களின் வரலாற்றை வெளிப்படுத்தும் நூல் ஒன்றை வெளியிட்டுள்ளார் போர்த்துக்கேய நாடுகளிலும் மற்றும் இலங்கை உள்ளிட்ட நாடுகளிலும் அவர் மேற்கொண்ட பல ஆய்வுகளை உள்ளடக்கி சுமார் முன்னூறுக்கும் மேற்பட்ட பக்கங்களைக் கொண்ட தாக அமைந்த அந்த நூல் இலங்கை யில் தமிழர்களின் இருப்பைத் தெளிவாகக் குறிப்பிடுகின்றது.

கடந்த 28ஆயிரம் வருடங்களுக்கு முன்னர் பாலியாற்றில் நாகர்கள் வாழ்ந்தார்கள் என்ற வரலாற்றுப் பதிவும் அதில் அடங்கியுள்ளது.

இந்நூலைப் படித்து தமிழர்களின் வரலாற்றை அறிந்து கொள்ளும் வாய்ப்பை ஏனைய நாட்டவர்கள் பெற்றுள்ளனர் .

ஆனால், மலேசியாவிலிருந்து அந்த நூலை இலங்கைக்கு எடுத்து வரும்போது சுங்கத் திணைக்களத்தினர் அதைக் கையகப்படுத்தியுள்ளனர். அதனை விடுவிக்க அவர்கள் தொடர்ந்தும் மறுப்பு வெளியிட்டு வருகின்றனர்.

இன்று இன நல்லிணக்கம் என்றும் மூவின ஒற்றுமை என்றும் பேசிக்கொள்கின்றபோதும் எமது வரலாற்றை நாம் அறிந்துகொள்ள கின்ற வாய்ப்புக்கள் மறுக்கப்படுகின்ற நிலையிலேயே நாம் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம்.- என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஐ-77)



மன்னார் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சாந்திபுரம் கிராமசேவகர் பிரிவைச் சேர்ந்த, திருமதி மனுவேல் வினுபிரிட்டா என்பவருக்கு வீடு திருத்த வேலைகளுக்காக வடக்கு மாகாண அமைச்சர் பா.டெனிஸ்வரன் உதவிகளை வழங்கியுள்ளார். சிமெந்து பைகள், கிடுகுகள் என்பன வழங்கப்பட்டன. (ஐ-81)







சர்வதேச நீரிழிவு தினமும், மூலிகைக் கண்காட்சியும், 'நீரிழிவை வெற்றி கொள்வோம்' நூல்வெளியீடும் அண்மையில் யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் தி.மைக்கல் தலைமையில் இடம் பெற்றன.

இந்த நிகழ்வில் கைதடி சித்த வைத்தியத்துறை மாணவர்களின் மூலிகைகளின் கண்காட்சியுடன் நீரிழிவு நோயிலிருந்து பாதுகாக்கக்கூடிய மூலிகைகளின் பயன்கள் பற்றியும் மக்களுக்கு எடுத்து விளக்கப்பட்டன.

நிகழ்வில் வைத்தியர்களான இ.சுரேந்திரகுமார், எம்.அரவிந்தன், பொ.ஜெசிதரன் ஆகியோர் உரையாற்றினர். நூல் ஆய்வுரையை வைத்தியர் கா.வைத்தீஸ்வரன் நிகழ்த்தினார். விசேட அம்சமாக நீரிழிவு தின நிகழ்வுக்கு வருகை தந்தோருக்கு இலைக்கஞ்சி பரிமாறப்பட்டது.

சர்வோதயம், லயன்ஸ் கழகம், யாழ். சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதியோர் சுகவாழ்வுக் கழகம் மற்றும் யாழ்.நீரிழிவு நிலையம் ஆகியன இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன. (இ-19)





வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக கலாசார பிரிவின் ஒழுங்குபடுத்தலில் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு அரங்கத்திறன் விருத்தி பயிற்சிப் பட்டறை நிகழ்வு பிரதேச செயலக மண்டபத்தில் இடம் பெற்றபோது விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம். (ஐ-54)





மெலிஞ்சிமுனை இளையோர் கழகத்தினரின் ஏற்பாட்டில் கடந்த சனிக்கிழமை ஊர்காவற்றுறை பிரதேச கடல்தீவுகளில் ஒன்றான நவையம்பிட்டியில் மரநடுகை நிகழ்வு இடம்பெற்றது.

மெலிஞ்சிமுனை இருதயராஜா ஆலய பங்குத்தந்தை அருட்திரு பத்திநாதர் தலைமையில் இக்கிராம இளைஞர்களும் ஒன்றிணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தனர். (இ-8)







நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற சிறுவர்தின நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட ஓய்வுபெற்ற ஆசிரியர் கவிஞர் நா. சத்தியபாலன் வரவேற்கப்படுவதையும், மாணவர்களது கலைநிகழ்ச்சியையும், அண்மையில் இடம்பெற்ற ஆசிரியர் தின நிகழ்வின்போது ஆசிரியர்கள் ஆசிரிய கீதம் இசைப்பதையும் படங்களில் காண லாம்.

காலைக்கதிர் Kalaikkathir



பொன்.வேணு கிருஷ்ணா

# 18 "ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...?"



## புரட்சி இயக்கம்

'ஜூலை 26 இயக்கம்' என்பது பிடல் காஸ்ட்ரோவால் உருவாக்கப் பட்டது. இந்தப் புரட்சி இயக்கம் கியூபாவை ஆண்ட சர்வாதிகாரி படிஸ்டாவுக்கு எதிரானது. சொல்லப் போனால் அவரைப் பதவியிலிருந்து இறக்குவதுதான் இந்த இயக்கத்தின் முக்கிய நோக்கம்.

சாண்டியாகோ நகரில் இருந்த அரசின் இராணுவப் பகுதியின் மீது இந்த அமைப்பு தன் முதல் தாக்குதலை நடத்தியது ஜூலை 26, 1953 அன்று. அதனால் இந்தப் பெயர் அதற்குக் கிடைத்து விட்டது. (இந்தத் தாக்குதல் வெற்றிகரமானதாக இல்லை என்பது வேறு விஷயம்). மெக்ஸிகோவிலும் இந்த இயக்கம் வேரூன்றியது. படிஸ்டாவின் ஆட்சியை நீக்குவதற்காகக் கட்டுப்பாடு நிறைந்த கெரில்லாப் படையாக இது மாறியது.

படகுகளின் மூலமாக 1956 டிசெம்பர் 2 அன்று இந்த இயக்கத்தினர் கியூபாவை அடைந்தனர். இந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் 82 பேர். பட்டப் பகலில் இவர்கள் வந்து இறங்கியதால், கியூபாவின் விமானப்படை இவர்களின் மீது தாக்குதல் நடத்தியது. தவிர இந்த அணியினர் இரண்டாகப் பிரிந்துவிட்டனர்.

உணவுகூட போதிய அளவில் கிடைக்கவில்லை. அரச இராணுவத்தினரால் பலரும் கொல்லப்பட்டனர். சேகுவாரா கழுத்தில் சுடப்பட்டார். என்றாலும் காயம்பட்ட சக கெரில்லா வீரர்களுக்கு அவர் தொடர்ந்து மருத்துவ உதவிகளைச் செய்தார். (அவர் மருத்துவம் படித்தவர்).

புரட்சி இயக்கத்தைச் சேர்ந்த 82 பேரில் 12 பேர் மட்டுமே உயிர் தப்பினர். கொல்லப்பட்டவர்களில் பிடல் காஸ்ட்ரோவும் ஒருவர் என்று தவறாக நம்பிய படிஸ்டா அவசரமாக இதை அறிவிக்கவும் செய்தார். பிறகுதான் உண்மை புரிந்தது.

இதுதான் கியூபா புரட்சியின் தொடக்கக் கட்டம். போகப் போக இது வலுவடைந்தது.

சியெரா மாஸ்ட்ரா என்பது கியூபாவின் எல்லைப் பகுதியில் அடர்ந்த காடுகள் அமைந்த மலைத் தொடர். இதைத்தான் தங்களது முக்கிய களமாகத் தேர்ந்தெடுத்தனர் பிடல் காஸ்ட்ரோ, அவரது புரட்சி இயக்கத்தைச் சேர்ந்தவர்களும். இந்த மலைப் பகுதியில் மறைந்தபடிதான் படிஸ்டாவின் இராணுவ வீரர்கள் மீது சுமார் இரண்டு வருடங்களுக்குத் தொடர்ந்து கெரில்லாத் தாக்குதல்களை நடத்தினார்கள்.

நடுநடுவே சிறு சிறு இராணுவப் பகுதிகள் மீது தாக்குதல் நடத்தி அங்குள்ள ஆயுதத் தளவாடங்களை கடத்தினார்கள். அதே சமயம் தங்களால் தாக்கப்பட்ட இராணுவத்தினருக்கு மருத்துவ உதவிகளையும் இவர்கள் அவ்வப்போது செய்து வந்தனர்.

மறுபுறம் கியூபாவின் காவல்துறை இரும்புக் கரத்தோடு செயற்பட்டது. பிடல் காஸ்ட்ரோவின் இயக்கத்தில் அன்டோனியோ, ஃபிராங் பயஸ் ஆகியோரும் அந்தப் புரட்சிக் குழுவின் அபிமானத்தைப் பெற்ற தலைவர்களாக இருந்தனர். ஆனால், நடந்த தொடர் தாக்குதல்களில் அவர்கள் இருவரும் கொலை செய்யப்பட்டுவிட, இயக்கத்தின் போட்டியற்ற சிங்கிள் தலைவரானார் பிடல் காஸ்ட்ரோ.

உள்ளூரில் கடும் தணிக்கை என்பதால் பிடல் காஸ்ட்ரோவின் கருத்துகள் மக்களை அடையவில்லை. எனவே, கில்லாடி பிடல் காஸ்ட்ரோ வெளிநாட்டு ஊடகங்களைத் தொடர்பு கொண்டார். நியூயோர்க் டைம்ஸ் இதழில் பிடல் காஸ்ட்ரோவின் நேர்முகம் வெளியானதும் அவரது புகழ் மிகவும் பரவியது.



1958இல் பிடல் காஸ்ட்ரோவின் இயக்கம் மேலும் வலிமை பெற்றது. வேறுவழியின்றி இராணுவம் கொஞ்சம் கொஞ்சமாகப் பின்வாங்கியது. மருத்துவமனை, தொழிற்சாலை, பள்ளி, சுரங்கம் என்று ஒவ்வொன்றாக புரட்சி இயக்கத்தின் கைவசம் ஆயின.

படிஸ்டாவுக்கு உள்ளூர் மக்களின் ஆதரவு சரிந்து கொண்டிருந்தது. அவரது கடும் தகவல் தணிக்கைமுறை மற்றும் பிடிக்காதவர்களை சித்திரவதைக்கு உள்ளாக்கும் போக்கு ஆகியவை இதற்கான முக்கிய காரணங்கள். இதை அறிந்த அமெரிக்கா படிஸ்டா ஆட்சிக்குத் தாங்கள் அளித்து வந்த ஆயுத உதவிகளை நிறுத்திக் கொண்டது.

### வீழ்ந்தது படிஸ்டாவின் அரசு

எதிர்க்கட்சிகள் பொது வேலை நிறுத்தம் ஒன்றில் ஈடுபட, படிஸ்டா ஆக்ரோஷம் கொண்டார். நாட்டின் எந்தப்பகுதி மக்களெல்லாம் புரட்சியாளர்களுக்கு உதவுகிறார்கள் என்று எண்ணினாரோ அந்தப் பகுதிகளில் எல்லாம் 'ஆபரேஷன் வெரானோ' என்று பெயரிட்ட தாக்குதலின் மூலம் பிடல் காஸ்ட்ரோவின் புரட்சி இயக்கத்தை முழுவதுமாக அழிப்பதுதான் அவரது திட்டம்.

ஆனால், கடும் எதிர்ப்புக் காரணமாக படிஸ்டாவால் நினைத்ததை நடத்திக் காட்ட முடியவில்லை. இராணுவத்தினர் இதனால் மனச்சோர்வு அடைய, காஸ்ட்ரோ புது உற்சாகம் பெற்றார். படிஸ்டாவின் இராணுவம் தோல்வியடைய முக்கிய காரணம் அவர்களுக்கு கெரில்லா போர்முறையில் போதிய அனுபவம் இல்லாததுதான்.

பிடல் காஸ்ட்ரோவின் அணியைச் சேர்ந்தவர்களுக்கு உள்ளூர் மக்களின் ஆதரவு பெருகியது. இது போதாதென்று கியூபா நாட்டு இராணுவத்தைச் சேர்ந்தவர்களிலேயே கணிசமானவர்கள் பிடல் காஸ்ட்ரோவின் இயக்கத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

மக்களின் ஆதரவை இழந்த படிஸ்டாவை இனி ஆதரிக்க வேண்டாம் என்ற முடிவுக்கு அமெரிக்கா வந்துவிட்டது. என்றாலும் பிடல் காஸ்ட்ரோவை அது ஆதரிக்கத் தயாராக இல்லை. தனது பிரதிநிதி கான்டில்லோ என்பவரைத் தேர்ந்தெடுத்தது. இவர் கியூபாவின் இராணுவத் தளபதியாக ஒரு காலத்தில் இருந்தவர். ஆனால் இராணுவத் தலைவராக இருந்த படிஸ்டா, ஆட்சியைக் கைப்பற்றிய போது இவர் அதற்குத் துணை நிற்கவில்லை.

கான்டில்லோ, பிடல் காஸ்ட்ரோவோடு ஒரு இரகசிய சமாதான உடன்படிக்கைக்கு வந்தார். (அப்போதே அவர் தந்திரமாகச் செயற்பட்டார் என்பதுதான் உண்மை). 'ஆட்சிக்கு எதிரான செயல்களை பிடல் காஸ்ட்ரோ அணி மேற்கொள்ளக் கூடாது. அமைதியான முறையில் அவர் ஆட்சிப் பொறுப்பை ஏற்கலாம். படிஸ்டா நிச்சயம் கைது செய்யப்பட்டு இராணுவ நீதிமன்றத்தின் முன்னால் போர்க் குற்றவாளியாக நிறுத்தப்படுவார்'. இது கான்டில்லோ அளித்த வாக்குறுதி. ஆனால் நடந்ததோ வேறு.

படிஸ்டாவுக்கு இரகசியத் தகவல் பறந்தது. அவர் சத்தமில்லாமல் தலைமறைவானார். கஜானாவில் இருந்த கோடிக்கணக்கான டொலர்களோடு ஸ்பெயினுக்குச் சென்றார் என்கிறார்கள். கான்டில்லோவின் செயல்பாடுகள் இத்துடன்நின்றுவிடவில்லை. நாட்டின் உச்சநீதிமன்ற நீதிபதியான கார்லோஸ் என்பவரை அதிபர் ஆக்கினார். புதிய அரசு ஒன்றையும் அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டார்.

பிடல் காஸ்ட்ரோ கடும் கோபம் அடைந்தார். அவரது படை ஹவானாவுக்குள் நுழைந்து கான்டில்லோவைக் கைது செய்தது. இதற்கு இராணுவத்திலேயே இருந்த பிடல் காஸ்ட்ரோ அனுதாபிகள் உதவினார்கள். 1959 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் படிஸ்டாவின் அரசு முழுவதுமாக நீக்கப்பட்டது.

(இதற்குப் பிறகு ஜூலை 26 இயக்கம் தன்னை அரசியல் கட்சியாக மாற்றிக் கொண்டது. 'கியூபா சோசலிஸ்ட் புரட்சியில் இணைந்த கட்சி' என்று பெயர் வைத்துக் கொண்டது. 1965இல் 'கியூபாவின் கம்யூனிஸ்ட் கட்சி' என்று பெயரை மாற்றிக் கொண்டது.).

### ஆரம்ப நிலை செயல்பாடுகள்

பிடல் காஸ்ட்ரோ ஊடகங்களுக்கு பல பேட்டிகளை அளிக்கத் தொடங்கினார். தற்காலிக அதிபராக மேனுவல் உருஷியா என்பவரை நியமித்தார். பிடல் காஸ்ட்ரோவின் பரம சீடர் என்றே இவரைக் கூறலாம். ஹவானாவில் உள்ள ஹின்டல் ஹோட்டலைத்தான் பிடல் காஸ்ட்ரோ தனது முதல் அதிகாரபூர்வ அலுவலகமாக்கிக் கொண்டார். 'எனது வீடும் இதுவேதான்' என்றார் குடும்ப வாழ்வு இல்லாத பிடல் காஸ்ட்ரோ.

நாட்டில் ஊழல் குறைந்தது. கல்வி அறிவு மேம்பட்டது. பிற அரசியல் கட்சிகள் மீது தற்காலிகத் தடை விதிக்கப்பட்டது. 'விரைவில் பல கட்சித் தேர்தல் நடைபெறும்' என்று பொய் வாக்குறுதியைச் சளைக்காமல் கூறி வந்தார் பிடல் காஸ்ட்ரோ. நாட்டை சோசலிசப் பாதையில் திருப்ப முயற்சித்தார்.

புரட்சியை அடக்கும் நோக்கத்தில் ஆயிரக்கணக்கானவர்களை படிஸ்டா அரசு கொன்று குவித்திருந்தது. இதற்குக் காரணமானவர்களை காஸ்ட்ரோ தண்டிக்கத் தொடங்கினார். வழக்குகள் நடைபெற்றன. அவர்களுக்கு தூக்குத் தண்டனை வழங்கப்பட்டு நிறைவேற்றப்பட்டன. உள்ளூரில் இதற்குப் பலத்த ஆதரவு. ஆனால், அமெரிக்க ஊடகங்கள் இந்த வழிமுறையை ஏற்கவில்லை.

''நாங்கள் என்ன அப்பாவி மக்களையா தண்டிக்கிறோம்? அரசியல் எதிரிகளை பழிவாங்குகிறோம்? கொலைகாரர்களைக் கொல்கிறோம், அவ்வளவுதானே'' என்று வெளிப்படையாகவே கூறினார் பிடல் காஸ்ட்ரோ.

பின்னர் வெனிசுலாவுக்குச் சென்றார். ஒரு பெரும் தொகையைக் கடனாகப் பெறுவதும், பெட்ரோலை வாங்கிக் கொள்ளவும் திட்டமிட்டார். இரண்டுமே நடக்கவில்லை.



கொஞ்சம் சோர்வுடன் பிடல் காஸ்ட்ரோ கியூபாவுக்குத் திரும்பிய போது வேறொரு சிக்கல் காத்திருந்தது. கியூபாவில் உள்ள சூதாட்டக் கிடங்குகளையும் பாலியல் கூடங்களையும் மூடச் சொல்லி உத்தரவிட்டிருந்தார் பிடல் காஸ்ட்ரோ. இதனால் எக்கச்சக்கமானவர்கள் வேலை இழந்து தவிக்கத் தொடங்கினார்கள். பிரதமராக பிடல் காஸ்ட்ரோவால் நியமிக்கப்பட்டிருந்தவர் ராஜினாமா செய்து சத்தமில்லாமல் அமெரிக்கா சென்று விட்டார்.

(கேள்வி தொடரும்...)

# பழைமைக்கு எதிரான பண்பாட்டுப் புரட்சி

01



சீனாவில், அறுபதுகளில் அந்தப் புரட்சி நிகழ்ந்தது. புரட்சிக்குப் பின் ஒரு புரட்சியாக , தொடர் புரட்சியாக, பழைமையை மாற்றியமைக்கும் பண்பாட்டுப் புரட்சியாக அந்தப் பூகம்ப நிகழ்வு இடம்பெற்றது. அது விளைவித்த பேரனர்த்தம் பயங்கரமானது. நாடு முழுவதுமே ஒரு வன்முறைப் பிரளையத்தில் மூழ்கி எழுந்தது. அந்தப்புரட்சிப்பெருவெள்ளத்தில் அள்ளுப்பட்டுச் சென்றவர்களின் எண்ணிக்கையோ எண்ணிலடங்கா. அது சீனக் கம்யூனிஸ இயக்கத்தை ஓர் உலுப்பு உலுக்கியது. வேர் அறுந்து விழுந்த விருட்சங்கள் போல கட்சியின் பழம்பெரும் தலைவர்கள் தூக்கி எறியப்பட்டனர். சீன சோசலிச நிர்மாணம் ஓர் இருண்ட யுகத்தினுள் தள்ளப்பட்டது. முன்னோக்கி நகர்ந்து வந்த செஞ்சீனம், இந்தக் காலகட்டத்தில் ஒரு பெரிய பின்னோக்கிய பாய்ச்சலை நிகழ்த்தியது.

இந்த ஊழிக் கூத்தை நடத்தி முடித்தவர் மாவோ. எதற்காக இந்தப் புரட்சியை அவர் கட்டவிழ்த்துவிட்டார்? தான் கட்டி வளர்த்த கட்சியையே அவர் எட்டி உதைத்தமையின் காரணம் என்ன? தேசிய விடுதலைப் போரில் தோளோடு தோள் நின்ற தோழர்கள் பலரை அவர் இம்சைப்படுத்தியதன் நோக்கம் என்ன? பெரும் புயலாக எழுந்து பேரழிவைத் தோற்றுவித்த இந்த அரசியற் கொந்தளிப்பைப் பண்பாட்டுப் புரட்சி என அவர் வர்ணித்தமை ஏன்?

நீண்டகாலமாகவே சோசலிச சிந்தனை உலகில் பெரும் சர்ச்சையை எழுப்பிய வினாக்கள் இவை?

'முன்னோக்கிய பெரும் பாய்ச்சல்', 'பண்பாட்டுப் புரட்சி', என்பன மாவோ நிகழ்த்திய சமூகப் பரிசோதனைகள். இந்தப் பரிசோதனைகளின் போது பெரும் தவறுகள் இழைக்கப்பட்டன என்பதும், இவற்றினால் சீனச்சமூகம் பெரிதும் பாதிக்கப்பட்டது என்பதும் வரலாற்று உண்மைகள். இன்றைய சீனத் தலைமை மாவோவின் இந்தப் பரிசோதனைகளை விமர்சித்து, கண்டித்தும் இருக்கிறது. ஆனால், மாவோவை நிராகரிக்கவில்லை. நவசீனத்தின் உருவாக்கத்தில்மாவோவின்பங்கு அளப்பரியது.தேசிய விடுதலையிலும், சமூகப் புரட்சியிலும் அவர் கணிசமான தொண்டாற்றியிருக்கிறார். சீனாவில் சிற்பி என வர்ணிக்கப்பட்ட இந்த மாபெரும் வரலாற்று மனிதர், ஏன் இந்தப் பாரிய தவறுகளை இழைத்தார்?

மாவோவின் இலட்சியங்கள் உன்னதமானவை. ஆனால் இந்த இலட்சியங்களை அடைவதற்கு அவர் கையாண்ட அணுகுமுறைகள்தான் தவறானவை என்பது சீன ஆய்வாளர்கள்பலரது கருத்து. அவர் முற்றுமுழுதாக மனித சக்தியைப் பயன்படுத்தி தனது இலக்குகளை அடைய முனைந்தார். ஆனால், இதனை ஓர் ஒழுங்கான முறையில், நடைமுறைச் சாத்தியமான செயற்திட்டத்தின் அடிப்படையில்செய்யவில்லை. இதனால் சீன சமூகம் பெரும் துன்பத்துக்கு ஆளாகியது. பொருண்மிய வளர்ச்சியும் பாதிக்கப்பட்டது.

கலாசாரப் புரட்சியை அவர் தொடக்கி வைத்தமைக்கும் காரணங்கள் இருக்கத்தான் செய்தன. கொள்கையளவில், இந்தப் பரிசோதனை உயரிய நோக்குகளைக் கொண்டிருந்தன. ஆனால், நடைமுறை யதார்த்தம் வேறு. நடைமுறையில் அது பேரழிவைத் தோற்றுவித்தது.

மாவோ ஓர் இலட்சியவாதி. பெரிய கனவுகளைக் கண்டவர். சீனத்தை ஒரு சோசலிச சுவர்க்கமாக மாற்ற விழைந்தவர். சோவியத் யூனியனின் சோசலிசப் பாதையில் அவர் செல்ல விரும்பவில்லை. அந்தப் பாதை கட்சி சர்வாதிகாரத்தைக் கட்டி வளர்த்தது. மக்கள் ஜனநாயகத்தை மறுத்தது. பொருளுலகுக்கு முதன்மை கொடுத்தது. மனித உறவுகளை மலினப்படுத்தியது. அந்தப் பாதை ஓர் உன்னதமான பொதுவுடைமைச் சமூகத்தை நோக்கிச் செல்லவில்லை என மாவோ கருதினார். சீனத்தை ஒரு புதிய பாதையில், புதிய யுகத்தை நோக்கி நகர்த்திச் செல்ல அவர் விரும்பினார்.

பொதுவுடைமைச் சமூதாய மாற்றம் என்பது ஒரு நீண்ட பயணம். ஒரு தடவை நிகழ்த்தப்படும் சமூகப் புரட்சியுடன் அந்த இலக்கை எட்டிவிட முடியாது. ஒரு புரட்சியுடன் சமூகத்தில் நிலவும் எல்லா முரண்பாடுகளையும் களைந்துவிட முடியாது. படிப்படியாகக் கட்டவிழ்ந்து செல்லும் தொடர்ச்சியான புரட்சி மூலமே கம்யூனிச சமூகத்தைக் கட்டி எழுப்ப முடியும் எனக் கருதினார் மாவோ. இந்தத் தரிசனத்தின் அடிப்படையில் புதிய சமூகப் பரிசோதனைகளை அவர் நிகழ்த்த விரும்பினார். மக்களை விழிப்புறச் செய்து, மனித உறவுகளை மேம்பாடு செய்து, மக்கள் ஜனநாயகத்தைக்கட்டி வளர்க்கும் புதுமையான வழிமுறைகளாகவே இந்தப் பரிசோதனைகளை அவர் முன்னெடுத்தார். அவரைப் பொறுத்தவரை, சீனப் பண்பாட்டுப் புரட்சியானது பொதுவுடைமைச் சமூகக் கட்டமைப்பை நோக்கிய ஒரு புதிய நகர்வு.

பொருண்மியக் கட்டமைப்பை மாற்றி அமைத்தால், மனவுலக மாற்றத்துக்கும் அது வழிவகுக்கும் என்ற வைதீக மாக்ஸியக் கருத்தை மாவோ ஏற்கவில்லை. பொருளுலகம் கருத்துலகை முற்றாக நிர்ணயிப்பதல்ல. காலம் காலமாக மனவுலகில் வேர் பதிக்கும் கருத்துக்கள், நம்பிக்கைகள் சமூகப் புறநிலை மாற்றத்தால் மறைந்து விடுவதில்லை. கருத்துக்களை மாற்றுவதற்குக் கருத்துலகில் ஒரு புரட்சியை நிகழ்த்த வேண்டும். சிந்தனைப் புரட்சி மூலமே புரட் சிகரப் பிரக்ஞையைத் தோற்றுவிக்க முடியும் எனக் கருதினார் மாவோ. சீனாவில் சமூகப் புரட்சி நிகழ்ந்தது. பொருண்மியக் கட்டமைப்பில் மாற்றம் ஏற்பட்டபோதும், மக்களின் மனவுலகில் மாற்றம் நிகழவில்லை. பழைமைவாதக் கருத்துக்கள், பிற்போக்கான பார்வைகள், மூடநம்பிக்கைகள் மக்களிடம் செறிந்து கிடந்தன. கொன்பூசியஸின் ஆதிகால அடிமைவாதச் சித்தாந்தம் சீனச்சமூக வாழ்வில் ஆதிக்கம் செலுத்தி நின்றது. இந்தப் பழைமைவாத சமூகப் பிரக்ஞையுடன் புதிய சமூக உலகைக் கட்டி எழுப்புவது கடினம். பொருளிய புற வளர்ச்சிக்கு ஒத்திசைவாக அக வளர்ச்சியும் ஏற்பட வேண்டும். புதிய யுகத்தை நோக்கி முன்னேறும் ஒரு சமூகம், புரட்சிகரமான அறிவியற் பார்வையைக் கொண்டிருக்க வேண்டும். பண் பாட்டுப் புரட்சி மூலம் நோக்கை அடையலாம் என மாவோ கருதினார்.

சோவியத் யூனியன் போன்று, சீனாவிலும்கட்சிச் சர்வாதிகாரம் விஸ்வரூபப் பரிமாணம் பெறுவதை மாவோ விரும்பவில்லை. மக்களுக்குப் புறம்பாக, மக்களிடமிருந்து அந்நியப்பட்ட சக்தியாக அரச நிர்வாக இயந்திரம் உருவாக்கம் பெறுவதை அவர் விரும்பவில்லை. அது, கட்சிக்கும் மக்களுக்குமிடையே பெரிய தொரு முரண்பாட்டைத் தோற்றுவிக்கும். இந்த முரண்பாட்டைக் களைவதானால், அதிகார பீடத்திலுள்ள கட்சிக்காரர்களை மக்கள் அரங்கில் இறக்கிவிட வேண்டும். மக்கள் மீது அதிகாரம் செலுத்துவதல்ல. மக்களுக்குச் சேவை புரிவதுதான் கட்சியின் இலட்சியம் என்பதை அவர்களுக்கு உணர்த்த வேண்டும். இந்த நோக்கிலும் பண்பாட்டுப் புரட்சியை முடுக்கிவிட்டார் மாவோ.

இளைய நெஞ்சங்கள் மிகவும் செழிப்பான நிலம். புரட்சியின் விதைகளை அங்குதான் விதைக்க வேண்டும். இளைஞரிடம் புரட்சியுணர்வு இருக்கிறது. துணிவு இருக்கிறது. தூய்மை இருக்கிறது. எந்த ஒரு போராட்டத்திலும் வலுவான சக்தியாக, துணிவாக நின்று போராடுவது இளம் சமூகமே. எனவேதான், இளம் பரம்பரையை அணிதிரட்டி, அவர்களுக்கு 'செம்படை' எனப் பெயரிட்டு, அவர்களுக்கு சகல அதிகாரங்களையும் வழங்கி, பழைமைக்கு எதிராக, பழைமையில் சிதைந்து கிடக்கும் கட்சியின் பழம் பரம்பரைக்கு எதிராகப் பண்பாட்டு புரட்சியை அரங்கேற்றி வைத்தவர் மாவோ.

மாவோவின் இலட்சிய நோக்கு உயர்ந்ததாக இருக்கலாம். ஆனால், பண்பாட்டு புரட்சி இந்தநோக்குகளை நிறைவு செய்யவில்லை. மாறாக, பேரழிவையே விளைவித்தது.

சீனப்பண்பாட்டுப் புரட்சி பற்றி பல நூல்கள் எழுதப்பட்டிருக்கின்றன. மாக்ஸிய தத்துவாசிரியர்கள் பலர் மதிப்பாய்வுக் கட்டுரைகளை எழுதியிருக்கிறார்கள். பல கோணத்தில் இந்த மாபெரும் வரலாற்று நிகழ்வு விமர்சிக்கப்பட்டிருக்கிறது. இவை எல்லாம் சீனாவுக்கு வெளியே இருந்து சீனம் பற்றிப் பார்க்கப்பட்ட பார்வைகள் உள்ளார்ந்த அனுபவம் இன்றி, நிகழ்த்தப்பட்ட புறநிலை நோக்குகள். ஆனால், சீன வரலாற்றுத்தரிசனத்துடன் எழுதப்பட்ட நூல்கள் மிகவும் சொற்பம். இந்த வகையில்,யுங் சாங் எனப்படு சீனப் பெண்மணி எழுதியுள்ள 'காட்டு அன்னங்கள்: சீனாவின் மூன்று புதல்விகள்' (wild Swans; Three Daughters of China) என்ற நூல், சீனப் பண்பாட்டுப் புரட்சியின் போது நிகழ்ந்த அனர்த்தங்களை, சுய அனுபவப் பார்வையில் தத்ரூபமாக சித்திரிக்க முனைகிறது.

(தொடரும்...)

## தேச விடுதலையுடன் மானிடத்தின் விடுதலை குறித்தும் ஆழமாகச் சிந்தித்த தத்துவாசிரியர் அன்ரன் பாலசிங்கம்

*ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றிய சிந்தனைப் புரட்சியை முன்வைத்தவர் விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம்.*


*அவர் வெறும் அரசியல் மதியுரைஞர் மட்டுமல்லர். அதையும் தாண்டி ஒரு தத்துவாசிரியர். ஓரினத்தின் தேச விடுதலையையும் தாண்டி மனித விடுதலை பற்றியும் ஆழமான ஆத்ம விசாரணைகளைச் செய்த ஓர் ஆய்வறிஞர்.*



*'விடுதலை' என்ற தமது நூலிலே அரசியலுக்கு அப்பால், மேலும் பல்துறை சார்ந்த தமது சிந்தனைத் தெறிப்புக்களை அவர் முன்வைத்துள்ளார்.*

*அரசியல், சமூகவியல், உளவியல், பொருளியல், மெய்யியல், வரலாற்றியல், மானிடவியல் போன்ற அறிவியல் பரப்புகளை ஊடுருவி நிற்கும் அர்த்தம் பொதிந்த கட்டுரைகள் அதில் அடங்கியுள்ளன.*

*இந்த விசாரணைகள் அனைத்துக்கும் மூலப் பொருளாக விளங்குபவன் மனிதன். ஆகவே, மனிதன் பற்றியும், மனித வாழ்வு மற்றும் வரலாறு பற்றியும், மனித விடுதலை பற்றியும் ஆழமான விசாரணைகள் செய்த சிந்தனையாளர்கள் சிலரின் புதுமையான, புரட்சிகரமான பார்வைகளை இக்கட்டுரைகள் வாயிலாக அறிமுகம் செய்துவைக்கிறார் 'தேசத்தின் குரல்' அன்ரன் பாலசிங்கம்.*



பொதுவுடைமைச் சமுதாய மாற்றம் என்பது ஒரு நீண்ட பயணம். ஒரு தடவை நிகழ்த்தப்படும் சமூகப் புரட்சியுடன் அந்த இலக்கை எட்டிவிட முடியாது. ஒரு புரட்சியுடன் சமூகத்தில் நிலவும் எல்லா முரண்பாடுகளையும் களைந்துவிட முடியாது.படிப்படியாகக் கட்டவிழ்ந்து செல்லும் தொடர்ச்சியான புரட்சி மூலமே கம்யூனிஸ சமூகத்தைக் கட்டி எழுப்ப முடியும் எனக் கருதினார் மாவோ. இந்தத் தரிசனத்தின் அடிப்படையில் புதிய சமூகப் பரிசோதனைகளை அவர் நிகழ்த்த விரும்பினார்.

# மாகாணங்களுக்கு அதிகாரம் வழங்கினால் பெரும்பான்மையினருக்கே கூடுதல் பயன்

## வடக்கு, கிழக்குக்கு மட்டுமல்ல என்கிறார் கிழக்கு முதலமைச்சர்

மாகாணங்களுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டால் சிறுபான்மை மக்களுக்கான வடக்கும் கிழக்கும் மாத்திரம் நன்மை பெறப்போவதில்லை.

பெரும்பான்மையினர் வசிக்கும் ஏனைய 7 மாகாணங்களும் இதன்மூலம் கூடுதல் நன்மையைப் பெறப்போகின்றன என்று தெரிவித்தார் கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட்.

கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் மற்றும் இலங்கை மற்றும் மாலை தீவுக்கான சுவிற்ஸர்லாந்து தூதரகத்தின் அரசியல் கொள்கைகள் வகுப்பு தொடர்பான செயலாளர் டமியனோ அஞ்சலோ ஸ்கு அய்டாமெட்டி ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் திருகோணமலையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டில் தற்போது திடீரெனத் தலைதூக்கியுள்ள இனவாதச் செயற்பாடுகளின் பின்னால் திட்டமிட்ட நிகழ்ச்சி நிரல் ஒன்று காணப்படுகின்றது.

தற்போது உருவாக்கப்பட்டிருக்கும் புதிய அரசமைப்புச் சீர்திருத்தத்தினூடாக மாகாணங்களுக்கு அதிகாரங்களை வழங்குவதற்கான சாதகமான காரணிகள் உருவாகியுள்ளன.

இந்தநிலையில், மாகாணங்களுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதற்கான உபகுழு அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.



அதற்கு எதிராக பெரும்பான்மை மக்களிடையே தவறான புரிதலை ஏற்படுத்தவும் புதிய அரசமைப்புத் திருத்தத்தை உருவாக்கும்போது சில வேளை பொதுசன வாக்கெடுப்புக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்படலாம். அவ்வாறு ஏற்பட்டால் பெரும்பான்மையினரின் வாக்கே அதனைத் தீர்மானிக்கக் கூடியதாக இருக்கும்.

சிறுபான்மையினர் தொடர்பான தவறான புரிதலை பெரும்பான்மையினர் மத்தியில் ஏற்படுத்துவதன் மூலம் இனவாதிகளுக்குச் சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்த முடியும் என்ற நிகழ்ச்சி நிரலுக்கு அமையவே இந்த இனவாதச் செயற்பாடுகள் தீடீரென வெளிக்கிளம்பியுள்ளன.

ஆனால், மாகாணங்களுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டால் சிறுபான்மை மக்களுக்கான வடக்கும், கிழக்கும் மாத்திரம் நன்மை பெறப்போவதில்லை. பெரும்பான்மையினர் வசிக்கும் ஏனைய ஏழு மாகாணங்களும் இதன்மூலம் கூடுதலான நன்மையைப் பெறப்போகின்றன.

ஆகவே, மாகாணங்களுக்கு அதிகாரங்கள் வழங்கப்படும் பட்சத்தில் பெரும்பான்மையினர் இன்று தமது எல்லாத் தேவைகளுக்கும் கொழும்புக்கு அலைய வேண்டிய தேவையில்லை. தமது பெரும்பாலான தேவைகளை தமது சொந்த மாகாணங்களிலேயே நிறைவேற்றிக் கொள்ளக்கூடிய சாதகமான சூழல் உருவாகும் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

பெரும்பான்மையினர் இந்த நிகழ்ச்சி நிரல்களுக்குள் சிக்காமல் தெளிவாக நடந்து கொள்ள வேண்டும் என்பதை கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.-என்றார். (எ)

## பாடசாலை பஸ் விபத்து;மாணவிகள் 6 பேர் காயம்

பதுளை, டிசெ.02

பாடசாலை மாணவர்களை ஏற்றிச்சென்ற பஸ் ஒன்று தியத்தலாவ, கலேதெண்ட பிரதேசத்தில் விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த பாடசாலை மாணவிகள் 6 பேர் காயமடைந்தனர்.

இந்த விபத்தில் காயமடைந்தவர்கள் சிகிச்சைகளுக்காக தியத்தலாவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பாடசாலை மாணவர்களை ஏற்றிச்சென்ற பஸ், சாரதி யின் கட்டுப்பாட்டை மீறி வீதியை விட்டு விலகி இவ்வாறு விபத்துக்குள்ளாகியதாகக் கூறப்படுகின்றது.

மேலும், சம்பவம் தொடர்பில் வான் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதோடு, விபத்து தொடர்பாக மேலதிக விசாரணைகளை தியத்தலாவ பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (எ)

## தினசரி ராசி பலன் 02.12.2016

சுபநேரம் : காலை : 9.15 – 10.15
மாலை : 4.45 – 5.45
ராகு காலம் : 10.30 – 12.00
குளிகன் : 7.30 – 9.00
எமகண்டம் : 3.00 – 4.30

ஜோதிட ஜோதி P.ராமன் பட்டாச்சாரியார்
ஸ்ரீ ஜெய மாருதி ஜோதிட நிலையம்
கும்பகோணம், தமிழ்நாடு.
(maruthi_jaya2003@yahoo.co.in)

சுபமுகூர்த்த நாள் – மேல்நோக்கு நாள்

**மேஷம்:** தோல்வி- எதிர்பாராத நிகழ்வுகளினால் தோல்விகள் ஏற்படும்.

**ரிஷபம்:** பண்டம் பரிமாற்றங்களில் வாக்குத் தவறுவதால் கவலைகள் மனதை ஆளும் நாள்.

**மிதுனம்:** இன்று உங்களுக்கு சந்திராஷ்டமம் என்பதால் வீண் அலைச்சல்கள் இருந்தாலும் நல்லவை நடக்கும். சந்திராஷ்டமம்- திருவாதிரை

**கடகம்:** இன்பம்- மன உளைச்சல்கள் குறைந்து குடும்பத்தில் குதூகலம் தரும் நாள்.

**சிம்மம்:** அமைதி- அமைதி நிறைந்து மனக் குழப்பங்கள் குறைந்து நிம்மதி காணும் நாள்.

**கன்னி:** உழைப்புக்குத் தகுந்த பாராட்டுக்கள் கிடைக்கும்.

**துலாம்:** பரிசு- எதிர்பாராத பரிசு பொருள் சேர்க்கை தரும். நீண்ட நாளைய நண்பர்களைச் சந்திக்கும் நாள்.

**விருச்சிகம்:** தனம்- அதிஷ்டங்கள் மறைமுக வரவுகளாக வளம் நல்கும்.

**தனுசு:** கவனம்- எடுக்கும் காரியங்களில் சிறப்புக்கள் குறையும். ஆதலால் கவனத்துடன் இருக்க வேண்டிய நாள்.

**மகரம்:** பகை-எதிர்பாராத சண்டை சச்சரவுகளினால் மனதளவில் பகை துளிர்விடும்.

**கும்பம்:** வரவு- இன்று எதிர்பாராத வகையில் வரவுகள் வரும்.

**மீனம்:** கீர்த்தி- உயர்ந்த பண்புகள் மனதில் பிரதிபலித்து நிலையான நிம்மதி தரும்.

## அமெரிக்கா-இலங்கை உறவு சிறந்த நிலையில்

### அமெரிக்க தூதுவர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.02

ஐக்கிய அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுநிலை உண்மையில் சிறப்பாக இருப்பதை தாம் உணர்வதாக அமெரிக்கத் தூதுவர் அட்டுல் கெசாப் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான வர்த்தக சபையின் உருவாக்க நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இதன் போதே அமெரிக்கத் தூதுவர் தமது கருத்தை வெளியிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் கூறியவை வருமாறு:-

2015 ஆம் ஆண்டு ஜனவரி மற்றும் ஓகஸ்ட் மாதங்களில் நடைபெற்ற சுதந்திரமானதும் நியாயபூர்வமானதுமான ஜனநாயகத் தேர்தல்களில் இலங்கை வாழ் மக்களால் வெளிப்படுத்தப்பட்ட தூரநோக்கை அமெரிக்க மக்கள் நம்புகின்றனர்.

இலங்கை மக்கள் ஜன நாயகமும், சமாதானமும், நல்லிணக்கம் மற்றும் ஐக்கியத்தையும் கொண்ட ஓர் இலங்கையைக் கட்டி எழுப்புவார்கள் என்று அமெரிக்க மக்கள் நம்பிக்கை வைத்துள்ளனர். -என்றார். (எ)

## சட்டவிரோதமாக துப்பாக்கி வைத்திருந்த ஒருவர் கைது

கொழும்பு, டிசெ.02

சட்டவிரோதமான முறையில் துப்பாக்கி மற்றும் அதற்குரிய ரவைகளை தன் வசம் வைத்திருந்த ஒருவர் நீர்கொழும்பு குற்ற விசாரணைப் பிரிவினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் கலுஅக்கல பிரதேசத்தில் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். அவரிடம் இருந்து துப்பாக்கி மற்றும் ரவைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபர் மினுவங்கொட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (எ)

## நல்லிணக்கம் ஏற்பட வேண்டுமானால் தமிழ்மொழிக்கு முக்கியத்துவம் தேவை

### கல்வி இராஜாங்க அமைச்சர் ராதாகிருஷ்ணன் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.02

இலங்கையில் இனப் பிரச்சினை தீர்க்கப்பட்டு நல்லிணக்கம் ஏற்பட வேண்டுமானால், தமிழ் மொழிக்கு முக்கியத்துவம் வழங்கப்படவேண்டும் என்று கல்வி ராஜாங்க அமைச்சர் வே.ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

தொழில்நுட்பம் மற்றும் கல்விமாணி பட்டம் பெற்ற நாடகம் அரங்கியல் பட்டதாரி ஆசிரியர்களுக்கான நியமனம் வழங்கும் நிகழ்வு கொழும்பில் இடம் பெற்றது. இதன்போது கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இந்த நிகழ்வு தேசிய ஒற்றுமையை வலியுறுத்தும் வகையில் அமையப் பெற்றதாகக் கூறப்பட்ட போதும் அரங்கில் காட்சிப் படுத்தப்பட்டிருந்த பதாகைகள் முழுமையாக சிங்கள மொழியிலேயே இருந் தன. அதில் தமிழ் மொழிக்கு எந்த இடமும் வழங்கப்படவில்லை.

இதனைச் சுட்டிக்காட்டிய ராஜாங்க அமைச்சர் நல்லிணக்கம் ஏற்பட வேண்டுமானால் சிங்களத்துடன் தமிழ் மொழிக்கும் உரிய இடம் வழங்கப் பட வேண்டும் என்று தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.

இந்தவிடயம் தொடர் பில் தமது அமைச்சின் சார்பில் தாம் கவலையடைவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். (எ)

# தியாகி அறக்கொடை நிறுவனத்தின் ஸ்தாபகர் உயர் திரு.வாமதேவா தியாகேந்திரன் அவர்களின்



# 65 ஆவது அகவை

"உண்மையான மகிழ்ச்சி நாம் சம்பாதிக்கும் பணத்தில் இல்லை,அதில் எவ்வளவு தர்மங்களைச் செய்கின்றோம் என்பதிலேயே அடங்கியிருக்கின்றது."

என்பதிற்கமைய திரு.வாமதேவா தியாகேந்திரன் அவர்கள் சுவிஸ் நாட்டில் வசித்தாலும் தான் பிறந்த மண்ணுக்கும் மக்களுக்கும் உதவவேண்டும் என்ற நோக்கத்துடன் தியாகி அறக்கொடை நிறுவனத்தை உருவாக்கித் தனது முழுமையான உழைப்பாலும் நிதிப்பங்களிப்பினாலும் வறுமையில் உள்ள எமது மக்களுக்கு அறப்பணிச் செயற்பாடுகளைத் தொய்வில்லாது தொடர்கின்றார்.

தமது 65ஆவது அகவை நாளின்று மட்டும் (02.12.2016) அவரின் அறப்பணிக் கொடுப்பனவுகள் :-

1) பார்வை குறைபாடுடைய பாடசாலை மாணவர்கள் மற்றும் முதியவர்கள் 250 பேருக்கு வைத்தியர்களின் சிபார்சிற்கு அமைய பத்து லட்சம் ரூபா (ரூ.10,00,000/-) பெறுமதியான மூக்கு கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன.

2) மகளிர் எழுச்சித் திட்டத்தில் 32 மகளிர்கள் புதிய அங்கத்தவர்களாக இணைக்கப்படுகின்றார்கள். இவர்களுக்கு முதற்கட்டமாக 3000/- ரூபாவும் மாதாந்தம் தலா 1000/- ரூபாவும் அவர்களின் கணக்கில் வைப்பிலிடப்படும். இதற்கு முதற்கட்டமாக ஒதுக்கப்பட்ட தொகை 96000/- ரூபா

3) தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலைக்கு இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான (ரூ.200,000/-) உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

4) தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளுக்கு பசுமாடுகள் வழங்கப்படவுள்ளன. இதற்காக ஒரு லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. (ரூ.100,000/-)

5) ஊனமுற்ற பயனாளிகள் மூவருக்கு ஒரு லட்சத்து ஐயாயிரம் (ரூ.105,000/-) பெறுமதியான மூன்று சில்லு சைக்கிள்கள் வழங்கப்படவுள்ளன.

6) 350 பயனாளிகளுக்கு மூன்று லட்சத்து ஐம்பதாயிரம் பெறுமதியான(ரூ.350,000/-) புடைவைகள் வழங்கப்படவுள்ளன.

7) தெரிவுசெய்யப்பட்ட 10 சிறுவர்களுக்கு தலா ரூ.1500/- பெறுமதியான பரிசுபொருட்கள். இதற்காக ஒதுக்கப்பட்ட தொகை பதின்ஐயாயிரம் ரூபாய்கள் (15,000/)

8) தெரிவுசெய்யப்பட்ட 100 முதியவர்களுக்கு ரூ.1500/- பெறுமதியான மடிப்பு மெத்தையும்,தலையணையும் வழங்கப்படவுள்ளன. இதன் மொத்த பெறுமதி ஒரு லட்டசத்து ஐம்பதாயிரம் ரூபாய்கள்.(Folding mattresses and pillows) ரூ.150,000/-

**தியாகி அறக்கொடை நிறுவனத்தினூடாக ஆண்டு தோறும் பல மில்லியன் ரூபா பின்வரும் மாதாந்த சமூகநலச் செயற்பாடுகளுக்காக ஒதுக்கப்படுகின்றன:-**

### 1. கல்வி ஊக்குவிப்பு செயற் திட்டம் :-

✹ சர்வதேச சிறுவர் மற்றும் முதியோர் தினத்தை முன்னிட்டு சில பிரதேச செயலகங்களினால் கொண்டாடப்படும் சிறுவர் தின விழாவிற்கு அன்பளிப்பு பொருட்கள் எம்மால் வழங்கப்பட்டு வருகின்றன.

✹ **பாடசாலை மாணவர்களுக்கான உதவி**

மிகவும் வசதி குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு அவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக மாதாந்தம் தலா ரூ.500/- வழங்கப்படுகின்றது.

✹ **பல்கலைக்கழக மாணவர்களுக்கான உதவி**

பல்கலைக்கழகங்களில் கல்வி கற்கும் வசதி குறைந்த மாணவர்களுக்கு அவர்களின் கல்வி தேவைக்காக மாதாந்தம் தலா ரூ.1000/- வழங்கப்படுகின்றது.

### 2. பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவிச் செயற் திட்டம்

◯ கணவனை இழந்த அல்லது கணவனால் கைவிடப்பட்ட மிகவும் வறிய நிலையில் இருக்கும் குடும்பங்கள் பொருளாதார முயற்சியில் வருமானத்தையீட்ட தொடங்கும் வரை அவர்களின் குடும்ப நிலைக்கேற்ப மாதாந்தம் தலா ரூ.500/- தொடக்கம் ரூ2000/- வரை வழங்கப்படுகின்றது.

◯ பொருளாதார முயற்சியில் ஈடுபட்டுள்ள மாதர் சங்கங்கள், மற்றும் தொண்டு நிறுவனங்களின் உள்ளூர் உற்பத்திகளை சந்தைப்படுத்த வசதி செய்து கொடுக்கப்படுகின்றது.

### 3) மருத்துவ உதவிச் செயற் திட்டம்

✹ **புற்று நோயாளருக்கான உதவி**

புற்று நோயினால் பாதிக்கப்பட்ட மிகவும் வறிய நிலையில் உள்ள நோயாளர்களுக்கு மருத்துவ செலவிற்காக மாதாந்தம் தலா ரூ.1000/- வழங்கப்படுகின்றது.

✹ **முதியவர்களுக்கான மருத்துவ உதவி**

பிரதேச செயலகங்களின் ஊடாக மாவட்ட அலுவலகர், சமூகசேவைத் திணைக்களத்தினால் வைத்திய உதவி போதியளவு பெறமுடியாத வறுமைக்குட்பட்ட முதியோர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு ஞாயிற்றுக்கிழமைகளில் இலவச மருத்துவ சேவை எம்மால் வழங்கப்படுகின்றது. அத்துடன் இவர்களுக்கு இலைக்கஞ்சியும், போக்குவரத்து வாகன வசதிகளும் வழங்கப்படுகின்றன.

### 4) ஆதரவற்ற முதியவர்களுக்கான உதவிச் செயற் திட்டம்

◯ ஆதரவற்று வறுமை கோட்டின் கீழ் வாழும் முதியோர்களுக்கு மாதாந்த கொடுப்பனவு தலா ரூ.500/- வழங்கப்படுகின்றது.

### 5) சிறுவர்கள் தொடர்பான செயற் திட்டம்

◯ எம்மால் நடத்தப்பட்டு வரும் சிறுவர் இல்லத்தில் பெற்றோரை இழந்து பாடசாலை செல்லும் பெண் பிள்ளைகள் நன்றாக பராமரிக்கப்பட்டு வருகின்றார்கள்.

### 6) மகளிர் மீள் எழுச்சித் திட்டம்

◯ பொருளாதார ரீதியில் மிகவும் பின் தங்கிய நிலையில் உள்ள பெண்களுக்கு மாதாந்தம் ரூ.1000/- உதவித்தொகையாக வழங்கப்படுகின்றது. அவர்கள் பொருளாதார முயற்சிகளில் ஈடுபடுவதற்கான சந்தை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுப்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும்.

### 7) தாய் சேய் நலத் திட்டம்

◯ வறுமைக் கோட்டிற்குட்பட்ட, ஒரு வருடத்திற்குட்பட்ட குழந்தையையுடைய தாய்மாருக்கு மாதாந்தம் ரூ.1000/- பெறுமதியான சத்துணவுப் பொதி வழங்கப்படுகின்றது.

### 8) சூழல் பாதுகாப்புத் திட்டம்

◯ இத்திட்டத்தின் ஊடாக செம்மணி இந்து மயானம் தெரிவு செய்யப்பட்டு, இங்கு 200 நிழல் தரும் மரங்கள் நாட்டப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. அத்துடன் மாதம் தோறும் இம் மயானத்தில் உள்ள புற்செடிகள் எம்மால் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன.

எமது நிறுவனம் மேலும் சில உதவித் திட்டங்களை முல்லைத்தீவு, அம்பாறை மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் உள்ள சில இடங்களிலும் செயற்படுத்தி வருகிறது. எமது இந்த நிறுவனம் இன, மத, மொழி வேறுபாடின்றி மனித நேயத்தோடு செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

மேற்குறிப்பிட்ட உதவித் திட்டங்களை செயற்படுத்துவதற்கான நிதி வளங்கள் -

✹ ஏமது ஸ்தாபகர் திரு. வாமதேவா தியாகேந்திரன் அவர்களின் நன்கொடை

✹ ரிசிரி பல்பொருள் விற்பனை நிலையத்தில் இருந்து கிடைக்கும் வருமானம்

எமது உதவித்திட்டங்களுக்கான நிதியை பெறும் வழியாக ஆரம்பிக்கப்பட்ட வியாபார நிலையத்தின் மூலம் ஏறத்தாழ நூறு பேர் வரையிலான இளைஞர், யுவதிகள் வேலைவாய்ப்பை பெற்றுள்ளமை இங்கே குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும்.

**எஸ்.மாணிக்கராஜா**
**பிரதிக் கல்விப் பணிப்பாளர்,**
**யாழ்ப்பாணம்.**

(C-101)

காலைக்கதிர் Kalaikkathir



## சேலத்தில் 500 ரூபா தாள்கள் அமிலம் ஊற்றி அழிப்பு !



சேலம், டிசெ.02

சேலம் மாவட்டம் மேட்டூரை அடுத்த காவிரி கிராஸ் ஆற்றங்கரைப் பகுதியில் கட்டாக 500 ரூபா தாள்கள் அமிலம் ஊற்றி அழிக்கப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

ரூ.500, ரூ.1000 தாள்கள் செல்லுபடியாகாது என்ற பிரதமர் மோடியின் அறிவிப்பைத் தொடர்ந்து, அந்தத் தாள்களை கறுப்புப் பணமாக வைத்திருப்பவர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

வருமானத்துக்கு பொருந்தாத அந்தப் பணத்தை வங்கியில் செலுத்தினால் வரியுடன் அபராதம் செலுத்த நேரிடும். எனவே, வேறு வழியின்றி அந்தத் தாள்களை தீயிட்டு எரிக்கவோ? கிழித்து வீசவோ? செய்யும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இந்நிலையில், சேலம் மாவட்டம் மேட்டூரை அடுத்த காவிரி கிராஸ் ஆற்றங்கரைப் பகுதியில் கட்டு கட்டாக 500 ரூபா தாள்கள் அமிலம் ஊற்றி அழிக்கப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. (எ)

# தோட்டா தொழிற்சாலையில் நேற்று திடீர் வெடி விபத்து!

## 20 பேர் உடல் சிதறிப் பலி!!



திருச்சி, டிசெ.02

திருச்சி மாவட்டம், துறையூர் அருகே உள்ள தோட்டா தொழிற்சாலையில் நேற்று ஏற்பட்ட திடீர் வெடிவிபத்தில் தொழிலாளர்கள் 20 பேர் உடல் சிதறிப் பலியாகினர்.

திருச்சி- சேலம் வீதியில் உள்ள முருங்கப்பட்டிக் கிராமத்தை அண்மித்து வெடிமருந்து தயாரிக்கும் தொழிற்சாலை உள்ளது. அங்கு அதிகமானதொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

நேற்றுக் காலை 7.30 மணியளவில் தொழிலாளர்கள் வேலைக்கு சென்ற போது, திடீரென வெடி மருந்து குடோன் பயங்கர சத்தத்துடன் வெடித்துச் சிதறித் தீப்பிடித்தது. குடோனுக்குள் இருந்த தொழிலாளர்கள் நீண்ட தூரத்துக்கு தூக்கி வீசப்பட்டனர்.

சத்தம் கேட்டு பொது மக்கள் அங்கு சென்று பார்த்தபோது, தொழிலாளர்கள் ஆங்காங்கே உடல் சிதறிய நிலையில் பிணமாகக் கிடந்தனர். வெடிமருந்து வெடித்துத் தீப்பிடித்ததால் அந்தப் பகுதி முழுவதும் புகை மண்டலமாக காட்சியளித்தது. சிலர் உடல் அடையாளம் தெரியாத அளவுக்கு உருக்குலைந்து கிடந்தது.

இதுதொடர்பில் தகவல் அறிந்த தீயணைப்புத் துறையினர் மற்றும் பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று மீட்பு பணியில் ஈடுபட்டனர்.

இறந்தவர்களின் உடல்கள் மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

### பொதுமக்கள் கொந்தளிப்பு

விபத்து ஏற்பட்ட தனியார் வெடிமருந்து தொழிற்சாலையை அகற்றக்கோரி நீண்ட காலமாகவே அந்தப் பகுதி மக்கள் மனுக்கள் அளித்து கோரிக்கை விடுத்து வந்திருக்கின்றனர். ஆனால், தங்களது கோரிக்கைகளை அதிகாரிகள் பரிசீலிக்கவில்லை என்று அந்த மக்கள் குற்றம் சாட்டினர்.

இந்த நிலையில், விபத்து ஏற்பட்டவுடன் தொழிற்சாலையின் முன் பாகத் திரண்ட பொது மக்களும், தொழிலாளர்களின் உறவினர்களும் வீதி மறியலில் ஈடுபட்டனர். அவர்களுடன் அதிகாரிகள் பேச்சு நடத்திய பின்னர் மீட்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டன. (எ)

## தேறினார் சோனியா



டில்லி, டிசெ.02

உடல்நலம் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தி வீடு திரும்பி உள்ளார்.

வைரஸ் காய்ச்சல் காரணமாக டில்லியில் உள்ள மருத்துவமனையில் அவர் நேற்று முன்தினம் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்குத் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது.

இந்த நிலையில் நேற்று உடல் நலம் முற்றாகத் தேறி தற்போது வீடு திரும்பி உள்ளார்.

ஏற்கெனவே கடந்த ஒகஸ்ட் மாதம், உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்டு, சிகிச்சை மேற்கொண்ட சோனியா காந்தி, தற்போது நேற்று முன்தினம் மீண்டும் உடல் நலம் பாதிக்கப்பட்டு, தற்போது உடல் நலம்தேறி உள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

## கருணாநிதி மருத்துவமனையில்

சென்னை, டிசெ.02

தி.மு.க., தலைவர் கருணாநிதி சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அவர் கடந்த 25 ஆம் திகதி தொடக்கம் உடல் ஒவ்வாமையால் அவதிப்பட்டு வந்ததாகக் கூறப்படுகிறது.

கடந்த ஒரு மாதமாக எந்த ஒரு பொது நிகழ்விலும் அவர் கலந்து கொள்ளவில்லை. இந்த நிலையில், தற்போது அவர் உடல் ஒவ்வாமை காரணமாக சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எ)

## காங்.கட்சியின் அதிகாரபூர்வ டுவிட்டர் பக்கம் முடக்கம்

டில்லி, டிசெ.02

ராகுலின் டுவிட்டர் பக்கம் முடக்கப்பட்டது. எனினும் அது சரி செய்யப்பட்ட நிலையில், காங்கிரஸ் கட்சியின் அதிகாரபூர்வ டுவிட்டர் பக்கமும் ஒரு சில மணி நேரம் முடக்கப்பட்டது.

காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுலின் டுவிட்டர் பக்கம் முடக்கப்பட்டது. அவரது பக்கத்தை முடக்கிய மர்ம நபர்கள், அதில் பல ஆபாச வார்த்தைகளை பதிவேற்றம் செய்தனர். அந்தப் பக்கத்தை முடக்கியவர்கள் யார் என்பது தெரியவில்லை. ராகுல் பக்கம் முடக்கப்பட்டதற்கு காங்கிரஸ் கண்டனம் தெரிவித்தது. இது தொடர்பாக டில்லி சைபர் பிரிவு பொலிஸில் அந்தக் கட்சி முறைப்பாடு அளித்தது. தொடர்ந்து அந்தப் பக்கம் மீண்டும் செயற்பாட்டுக்குக்கொண்டுவரப்பட்டது.

இந்தநிலையில், காங்கிரஸ் கட்சியின் அதிகாரபூர்வ டுவிட்டர் பக்கமும் மர்ம நபர்களால் முடக்கப்பட்டுள்ளது.

அந்தப் பக்கத்தில் காங்கிரஸ் வெளியிட்ட செய்திகளும் அழிக்கப்பட்டுள்ளன. ஆபாச வார்த்தைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. பின்னர் அந்தப் பக்கம் செயற்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டது.



அதேபோல், காங்கிரஸ் கட்சியின் அதிகாரபூர்வ இணையத்தளமும் மர்ம நபர்களால் முடக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில்,காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுலின் டுவிட்டர் பக்கம் முடக்கப்பட்டது தொடர்பாகவும், முடக்கிய நபர்கள் குறித்தும் டுவிட்டர் இணையத்தளத்திடம் மத்திய அரசு அறிக்கை கேட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

## இராணுவ ஹெலி விழுந்து விபத்து மூவர் சாவு!

மேற்கு வங்க மாநிலத்தில் இராணுவ ஹெலி விழுந்து நொறுங்கியதில் 3 பேர் உயிரிழந்துள்ளனர்.

சிலிகுரி அருகே சுக்னாவில் இந்திய இராணுவத்துக்குச் சொந்தமான ஹெலி ஒன்று விழுந்து நொறுங்கியது. இதில் விமானியும் இராணுவ அதிகாரிகள் 2 பேரும் உயிரிழந்துள்ளனர். விபத்தில் சிக்கிய ஒருவர் பலத்த காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்த இராணுவம் உத்தரவிட்டுள்ளது. (எ)

# ‘நடா’ புயலை எதிர்கொள்ள தயார்நிலையில் கடலூர்!



சென்னை, டிசெ.02

நடா புயலை எதிர்கொள்ள கடலூர் மாவட்டத்தில் தீயணைப்புத் துறை மற்றும் மீட்புப்பணித்துறையினர் தயார்நிலையில் உள்ளனர் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பொதுமக்களை தாழ்வான பகுதிகளிலிருந்து மேடான பகுதிகளுக்குச் செல்ல அரசு அதிகாரிகள் அறிவுறுத்திவருகின்றனர்.

மேலும், அவர்கள் மக்களை மரங்கள் அருகில் செல்ல வேண்டாம் என்றும், மின்சாதனப் பொருள்களைக் கவனத்துடன் உபயோகப்படுத்துமாறும் அறிவுறுத்தி வருகின்றனர்.

கடலூர் மாவட்டத்திலுள்ள 15 தீயணைப்பு நிலையங்களில் பணிபுரியும் 225 பணியாளர்கள் பாதுகாப்பு உபகரணங்கள், றப்பர் படகுகள், மரங்கள் அறுக்கக்கூடிய கருவிகள் உள்ளிட்டவற்றுடன் தயார் நிலையில் உள்ளன என்று அரச அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

‘நடா’ புயல் எதிரொலியால் காஞ்சிபுரம் மாவட்டம் மாமல்லபுரம், கல்பாக்கம் போன்ற பகுதிகளில் கடலலைகள் வழக்கத்தைவிட அதிகமாக கடல் மட்டத்தில் இருந்து சுமார் 10 அடிக்கும் மேல் எழுந்து காணப்படுகின்றன.

வழக்கத்தைவிட கடல் அலைகளின் சீற்றம் அதிக அளவில் காணப்படுவதால் மாமல்லபுரம், கல்பாக்கம் போன்ற பகுதிகளில் உள்ள மீனவர்களுக்கு மீன் வளத்துறை சார்பில் கடலுக்குச் செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. (எ)

## சுரங்கப் பாதை அமைத்து பயங்கரவாதிகள் ஊடுருவல்!

ஜம்மு, டிசெ.02

நக்ரோட்டாப் பகுதியில் தாக்குதல் நடத்திய பயங்கரவாதிகள், பாகிஸ்தான் பகுதியிலிருந்து சுரங்கப்பாதை அமைத்து இந்தியாவுக்குள் ஊடுருவியமை தெரியவந்துள்ளது.

ஜம்மு-காஷ்மீர் எல்லைப்பகுதியில் பயங்கரவாதிகள் நேற்று முன்தினம் நடத்திய தாக்குதலில் 7 இராணுவ வீரர்கள் உயிரிழந்தனர்.

இந்த நிலையில் பயங்கரவாதிகள் யாராவது பதுங்கியிருக்கிறார்களா என்று எல்லைப் பாதுகாப்புப் படையினர் தீவிர சோதனை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தச் சோதனையின் போது, எல்லையை ஒட்டி அமைந்துள்ள சம்பா பகுதி வயலில், 20 அடி ஆழத்தில், 80 மீற்றர் நீளம் கொண்ட சுரங்கப் பாதை அமைத்து, பாகிஸ்தான் பகுதியிலிருந்து பயங்கரவாதிகள் ஊடுருவியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. (எ)

### எரிபொருள் விலை வீழ்ச்சி; தீர்வு காண 'ஒபெக்' தீவிரம்

வியன்னா, டிச.02

எரிபொருள் விலை வீழ்ச்சிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு 'ஒபெக்' அமைப்பு தீவிரம் காட்டி வருகின்றது. இதன் ஊடாக எரிபொருளுக்கான விலைகளை வரையறுக்க முடியும் என்று நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

எவ்வாறெனினும், ஈராக், ஈரான் மற்றும் சவூதி அரேபியா போன்ற நாடுகள் இந்த யோசனை தொடர்பில் ஏற்படுத்திக் கொள்ளும் இணக்கப்பாட்டின் அடிப்படையில் இறுதித் தீர்மானம் எடுக்கப்பட உள்ளதுடன் எரிபொருள் உற்பத்தியை வரையறுப்பதற்கும் சவூதி அரேபியா தீர்மானித்துள்ளது. எரிபொருள் விலை வீழ்ச்சி காரணமாக சம்பளங்களும் குறைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (எ)

# கிழக்கு அலெப்போவிலிருந்து 50 ஆயிரம் பேர் வெளியேற்றம்

டமாஸ்கஸ், டிச.02

சிரிய இராணுவம் தாக்குதலை தீவிரப்படுத்தியதால், கிழக்கு அலெப்போ நகரில் இருந்து 50 ஆயிரம் மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

சிரியாவில் ஐ.எஸ். அமைப்பினர் மற்றும் கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக சிரிய அரசாங்கம் மற்றும் ரஷ்ய படையினர் இணைந்து வான்வழித் தாக்குதல் நடத்தி வருகின்றனர். சிரிய அரசுக்கு எதிராகப் போராடும் கிளர்ச்சியாளர்கள் வசம் உள்ள அலெப்போ நகர் மீது தற்போது உக்கிரமான தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது. இந்தத் தாக்குதலில் கிளர்ச்சியாளர்கள் மட்டுமின்றி பொதுமக்களும் கொல்லப்பட்டனர்.

இதையடுத்து ஐ.நா. வேண்டுகோளை ஏற்று, மக்கள் பாதுகாப்பாக வெளியேற ஏதுவாக தாக்குதலை நிறுத்த ரஷ்யாவும் சிரியாவும் சம்மதம் தெரிவித்தன. ஐ.எஸ். தீவிரவாதிகள் மக்களை கேடயமாகக் கொண்டு தாக்குதலில் ஈடுபடுவதால் அவர்களை வெளியேற்றும் நடவடிக்கையை சிரிய அரசு துரிதப்படுத்தியது.



இந்நிலையில், சிரிய இராணுவம் தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளநிலையில், ஐ.எஸ். தீவிரவாதிகள் கட்டுப்பாட்டில் உள்ள கிழக்கு அலெப்போ நகரின் 3 மாவட்டங்களில் இருந்து 50 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இதில் 20 ஆயிரம் மக்கள் அரச கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்குள் சென்றுள்ளனர்.

ஆனால், 30 ஆயிரம் பேர் குர்தீஷ் கட்டுப்பாட்டில் உள்ள மாவட்டங்களுக்குள் சென்றுள்ளனர். இன்னும் பலர் அலெப்போ நகரில் தெற்குப் பகுதியில் கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்குள் தஞ்சம் புகுந்துள்ளனர்.

முன்னதாக அலெப்போ நகரில் நேற்று முன்தினம் விமானப் படை நடத்திய குண்டு வீச்சில் 21 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

## ஒரு நிமிடத்தில் 20 உடைகளை மாற்றிய பெண் உலக சாதனை



கோலாலம்பூர், டிசெ.02

ஒரு நிமிடத்தில் 20 உடைகளை மாற்றி மலேசியப் பெண் ஒருவர் கின்னஸ் சாதனை படைத்துள்ளார்.

மின் செக்லூ என்ற மலேசியப் பெண் கடந்த செப்ரெம்பர் மாதம் ஒரு நிமிடத்தில் 16 உடைகளைப் பார்வையாளர்கள் முன்னிலையில் மாற்றி கின்னஸ் சாதனை படைத்தார். அவரின் இந்தச் சாதனையை மற்றொரு மலேசியப் பெண்ணான சில் வியாலிம் ஒரு நிமிடத்தில் 18 உடைகள் மாற்றியதன் மூலம் முறியடித்துள்ளார்.

இதனால் சற்றும் மனம் தளராத மின் தற்போது ஒருநிமிடத்தில் 20 உடைகளை மாற்றி புதிய உலக சாதனை படைத்துள்ளார். இதன்மூலம் மின்னின் பெயர் மீண்டும் கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது.

மின் செக் லூ நிகழ்த்திய இந்தச் சாதனையை கின்னஸ் புத்தகம் தனது பேஸ் புக் பக்கத்தில் பதிவிட, 19 லட்சம் பார்வையாளர்களைத் தாண்டி இந்தக் காணொலி தற்போது இணையம் மற்றும் சமூக வலைத்தளங்களில் பரவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ)

## ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடார் மிச்செல்

வொஷிங்டன், டிசெ.02

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் மிச்செல் ஒருபோதும் போட்டியிட மாட்டார் என்று ஒபாமா திட்டவட்டமாகக் கூறியுள்ளார்.



நடந்து முடிந்த அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயக கட்சிவேட்பாளர்ஹிலாரி கிளிண்டனுக்காக பிரசாரம் செய்தவர், ஜனாதிபதி ஒபாமாவின் மனைவி மிச்செல் ஒபாமா. நான் ஜனாதிபதி பதவிக்கு வந்தால் மிச்செல்லுக்கு அமைச்சர் பதவி அளிப்பேன் என்று ஹிலாரி கூறி இருந்தார். ஆனால், தேர்தலில் அவர் தோல்வியைத் தழுவ நேரிட்டது. ஒரு பெண், முதல் முறையாக அமெரிக்க ஜனாதிபதியாகின்ற வாய்ப்பும் தட்டிப்போய் விட்டது.

இந்நிலையில் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் மிச்செல் ஒபாமா போட்டியிடக்கூடும் என்று யூகங்கள் எழுந்தன.

இது தொடர்பாக 'ரோலிங் ஸ்டோன்' என்ற பத்திரிகைக்கு ஒபாமா அளித்த பேட்டியில் தெரிவித்தவை வருமாறு:-

மிச்செல் ஒருபோதும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட மாட்டார். நீங்கள் அறிந்தபடி மிச்செல் திறமை வாய்ந்தவர். அமெரிக்க மக்களுடன் அவர் வியக்கத்தக்க தாக்கத்தைக் கொண்டுள்ளார்.

ஆனால், அவர் அரசியலில் இருக்க வேண்டும் என்று விரும்புகிறார் என்று நான் நகைச்சுவையாகத் தான் கூற வேண்டும்.-என்றார். (எ)

## மியன்மார் அகதிகள் வருகை ; கண்காணிப்பை அதிகரித்த சீனா



பீஜிங், டிசெ.02

உள்நாட்டுக் கலவரம் காரணமாக மியன்மாரில் இருந்து அகதிகள் வருகின்றமை காரணமாக, சீனாவின் தெற்கு எல்லையில் இராணுவ கண்காணிப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

மியன்மாரில் அரசுக்கும் சிறுபான்மையினருக்கும் இடையே ஏற்பட்ட பிரச்சினை காரணமாக மக்கள் அகதிகளாக சீனாவின் தெற்கு எல்லையில் வந்து தஞ்சம் புகுவது அதிகரித்துள்ளது. சமீபத்திய தகவல்களின்படி, இவ்வாறு அங்குவந்துள்ள சுமார் மூவாயிரம் பேரை, எல்லைப் புறமாகாண அரசுடன் இணைந்து மறு குடியேற்றம் செய்ய சீன அரசு உதவியுள்ளது.

இதனால் தங்களது நாட்டின் ஒருமைப்பாடு மற்றும் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் உண்டாகலாம் என்று சீனா நினைக்கிறது.

இதுதொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய, இராணுவ செய்தித் தொடர்பாளர் யாங் யூஜுன், இது போன்ற பிரச்சினைகளைச் சமாளிக்க சீன மக்கள் இராணுவம் ரோந்துப் பணிகளை அதிகப்படுத்தியுள்ளது.என்று தெரிவித்தார். (எ)

## ஈராக்கில் நீரின்றி உயிர் இருந்தும் உயிரற்றவர்களான குழந்தைகள்!

பக்தாத், டிசெ.02

ஈராக்கில் ஐ.எஸ்.தீவிரவாதிகள் கட்டுப்பாட்டிலிருக்கும் மொசூல் நகரில் தண்ணீர் மற்றும் பசியால் வாடி எலும்புக்கூடான குழந்தைகளின் நெஞ்சை உருக்கும் புகைப் படம் மற்றும் காணொலி இணையத்தில் வெளியாகியுள்ளன. இது மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

ஹசன்ஷாம் அகதி முகாமிலே இந்த காணொலி பதிவு செய்யப் பட்டுள்ளது. இந்தக் காணொலி மற்றும் புகைப்படங்களில் இருக்கும் இரு குழந்தைகளில் ஒருவருக்கு 2 வயதும் மற்றொருவருக்கு 9 வயதும் என்று தெரிவிக்கப் படுகின்றது.



இதில் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் தாய், இது எனக்கு மிகவும் வேதனையாக இருக்கிறது. அவர்கள் ஏற்கனவே இறந்து விட்டார்கள். அவர்கள் உயிரோடு இருக்கிறார்கள் என்பதை என்னால் நம்பவே முடியவில்லை என்று தெரிவித்துள்ளார்.

இராணுவப் படைக்கும், ஐ.எஸ். குழுவுக்கும் இடையிலே நடைபெற்ற மோதலின்போது மொசூல் நகரில் உள்ள 6 இலட்சத்து 50 ஆயிரம் குடியிருப்பாளர்களுக்கு நீர் வழங்கும் குழாய் சேதமடைந்துள்ளது. எனினும், அந்த இடத்தில் தொடர்ந்து போர் இடம் பெற்று வருகின்றமையால் அந்தக் குழாயை சரி செய்ய முடியாத நிலை காணப்படுவதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (எ)

# வடக்கு போக்குவரத்து அதிகார சபைக்கு வழங்கப்பட்ட 43 தற்காலிக நியமனங்கள்

## ஜனவரியில் 175 பேருக்கு வேலைவாய்ப்பு



வடக்கு மாகாண போக்குவரத்து அதிகார சபைக்கான தற்காலிக நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த மாதம் 24ஆம் திகதி யாழ்ப்பாணம் குருநகரில் அமைந்துள்ள மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்கள மாநாட்டு மண்டபத்தில் போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரன் தலைமையில் நடந்த நிகழ்வில் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், போக்குவரத்து அதிகாரசபையின் தலைவர் அ.நிக்கோலாஸ்பிள்ளை, அமைச்சின் பிரதம கணக்காளர் திருமதி அனந்த கிருஷ்ணன், மாகாண வீதி அபிவிருத்திதிணைக்களபணிப்பாளர் டி.சிவராஜலிங்கம், அதிகாரசபையின் உறுப்பினர்கள், இலங்கை போக்குவரத்துச் சபையின் பிராந்திய முகாமையாளர், தனியார் பேரூந்து உரிமையாளர் சங்கங்களின் தலைவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

குறித்த நிகழ்வின்போது யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் இருந்து தலா இரண்டு பேரும் மன்னார் மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் இருந்து தலா ஒருவருமாக மொத்தம் 8 முகாமைத்துவ உதவியாளர்களுக்கும், இவர்களுடன் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 14 பேரும் கிளிநொச்சியிலிருந்து 7 பேரும் மன்னார் மற்றும் வவுனியாவிலிருந்து 6 பேரும் முல்லைத்தீவில் இருந்து 2 பேருமாக மொத்தம் 35 நேரக் கணிப்பாளர்களுக்கும் தற்காலிக நியமனங்கள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் அமைச்சர் உரையாற்றுகையில்: போக்குவரத்து சேவையில் காணப்படும் பல்வேறு பிரச்சினைகளை சீர்செய்வதற்கும், ஒழுங்குபடுத்துவதற்குமான அவசர தேவை கருதி அமைச்சரவை பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது, அதற்கமைவாக ஆளுநர் அனுமதித்ததன் பேரில் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அதிகாரசபை உருவாக்கப்பட்ட பின்னர் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவில் பல வருடங்கள் வேலை செய்தவர்கள் எவ்வித முன்னறிவித்தலுமின்றி நிறுத்தப்பட்டுள்ளனர். அவ்வாறு நிறுத்தப்பட்டவர்களையும் தனியார் சங்கங்களில் பணி புரிந்தவர்களையும் அழைத்து நேர்முகத்தேர்வு நடத்தப்பட்டது.

அவ்வாறு அழைக்கப்பட்ட நூறுக்கு மேற்பட்டவர்களில் இருந்து அடிப்படைக் கல்வித் தகைமைகள் உடையவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். - என்று தெரிவித்தார்.

தற்காலிக நியமனங்களைப் பெற்றவர்கள் அதனை வைத்து நிரந்தர நியமனம் கோர முடியாது எனவும், நிரந்தர ஆளணிகள் உள்வாங்கப்படும்போது அரச நடைமுறைகளுக்கு அமைவாக விண்ணப்பித்து நிரந்தர நியமனத்துக்குத் தகுதியுடையவர்களாக வரமுடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

ஜனவரியில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் ஆளணிக்கான அனுமதி வழங்கும். அதன்பின்னர் உடனடியாக ஆளணி நிரப்பப்படும். குறைந்தது 175 பேருக்கான வேலை வாய்ப்பை வழங்கமுடியும்.

வடக்கு மாகாணசபை உருவாக்கப்பட்டு ஓர் நியதிச்சட்டத்தினூடாக வேலைவாய்ப்பு வழங்கப்படுகின்றது என்றால் இதுவே முதல்தடவையாகும் என்று மேலும் கூறினார். (ஐ)

## குளமங்கால் றோ.கவுக்கு விளையாட்டு உபகரணங்கள்

யாழ்.குளமங்கால் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலைக்கு நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் விளையாட்டு உபகரணங்களை வழங்கியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் பிரமாண நிதியிலிருந்து விளையாட்டு உபகரணங்கள் பெற்றுக் கொடுத்துள்ளார்.

கடந்த செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2.15 அளவில் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற இந் நிகழ்வில் தெல்லிப்பழை பிரதேசசெயலர் சிறீமோகன், குளமங்கால் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையின் அதிபர் செல்வரட்ணம், விளையாட்டுத்துறை ஆசிரியர் துஷ்யந்தன் மற்றும் பாடசாலை மாணவர்களும் பிர தேச செயலக அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர். (ஐ)



## கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் ஒளிவிழா





கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் ஒளிவிழா நேற்று முன்தினம் காலை கலாசாலை ரதிலஷ்மி மண்டபத்தில் நடைபெற்றது.

.கலாசாலையின் பிரதி அதிபர் ச.லலீசன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிறிஸ்தவ மற்றும் இஸ்லாமிய நாகரிகத் துறைகளின் தலைவர் வண. பேராசிரியர் ஜீ.வி. பிலேந்திரன் அடிகளார் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினராக கலாசாலை சிற்றாலய ஆன்மீகக் குருவும் யாழ். மறைக்கல்வி நடுநிலைய இயக்குநருமாகிய வண. ஏ.எப்.பெனற் அடிகளாரும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் எம்.எப். பப்சி மரியதாசனும் கலந்துகொண்டனர்.

கொழும்புத்துறை புனித சவேரியார் குருமட விரிவுரையாளர் வண. இ.தயாபரன் அடிகள் திருப்பலியை ஒப்புக் கொடுத்தார்.

கிறிஸ்தவமன்றக் காப்பாளர் ஜெ.பாலகுமார் நிகழ்வுகளை நெறிப்படுத்தினார். கிறிஸ்தவ மன்றத் தலைவர் றீகன் ஜாக்சன் நன்றியுரை வழங்கினார்.

நிகழ்வில் நாட்டுக் கூத்து, வில்லிசை, கிராமிய நடனம், நாடகம், கரோல் கீதம் எனப் பல நிகழ்வுகள் இடம்பெற்றன. ஒளிவிழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில்வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் இடம் பெற்றது. (ஐ-32)

## வீதியில் அலைந்த முதியவர் ஆசிரமத்தில்

கவனிப்பாரற்ற நிலையில் வீதியில் அலைந்து திரிந்த முதியவர் ஒருவர் பருத்தித்துறை நீதிமன்ற உத்தரவுக்கு அமைய கரவெட்டியில் அமைந்துள்ள பரமானந்த ஆசிரமத்தில் நேற்று முன்தினம் சேர்க்கப்பட்டார்.

இறுதி யுத்தத்தின் போது அனைத்து உறவுகளையும் இழந்த ஞானப்பிள்ளை அப்புபிள்ளை(வயது 85) என்ற முதியவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள வீதியில் கடந்த சில நாள்களாக அலைந்து திரிந்துள்ளார்.

குறித்த பகுதிக்குரிய கிராமசேவையாளர் முதியவரை பருத்தித்துறை. பொலிஸாரின் உதவியுடன் பருத்தித்துறை நீதிமன்ற நீதிவானிடம் பெறப்பட்ட கட்டளைக்கு அமைய அவர் கரவெட்டியில் அமைந்துள்ள பரமானந்த ஆசிரமத்தில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ-9)

## டிராக்டர் சாரதிக்கு ரூ.45 ஆயிரம் அபராதம்

அனுமதிப் பத்திரம் இன்றி உழவு இயந்திரத்தில் மணல் ஏற்றிய சாரதிக்கு 30ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

அத்துடன் குறித்த உழவு இயந்திர சாரதி காப்புறுதிப் பத்திரம், வருமானவரிப் பத்திரம் மற்றும் சாரதி அனுமதி பத்திரம் இன்றி வாகனத்தை செலுத்தியதாக கொடிகாமம் பொலிஸார் நீதிவானின் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தனர்.

இந்தக் குற்றங்களுக்காக 15 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி நீதிமன்றபதில் நீதிவான் செல்லையா கணபதிப்பிள்ளை நேற்று முன் தினம் இந்தத் தீர்ப்பை வழங்கினார். (ஐ-9)

## மின்கம்பங்கள் வீழ்ந்ததில் போக்குவரத்து பாதிப்பு

அச்சுவேலி,டிசெ.02

அச்சுவேலி- தொண்டைமானாறு பிரதான வீதியில் நேற்று முன்தினம் இரவு பெய்த காற்றுடன் கூடிய மழை காரணமாக பிரதான மின்கம்பங்கள் இரண்டு சரிந்து வீழ்ந்துள்ளன.

இதனால், யாழ்ப்பாணம் - பருத்தித்துறை 751 மார்க்க வீதிப் போக்குவரத்து தடைப்பட்டது. வாகனங்கள் அனைத்தும் மாற்று வழியூடாக அனுப்பி வைக்கப்பட்டன. இது தொடர்பில் மின்சார சபை அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து மின்கம்பங்கள் சீர்செய்யப்பட்டன. (ஐ-9)

# 2015 ஆம் ஆண்டுக்கான சிறந்த கிரிக்கெட் வீரருக்கான விருது அஞ்சலோ மெத்தியூஸ்க்கு



கொழும்பு, டிசெ.02

இலங்கை கிரிக்கெட் அணித்தலைவர் அஞ்சலோ மெத்தியூஸ் , 2015 ஆம் ஆண்டுக்கான சிறந்த கிரிக்கெட் வீரராக தெரிவானதுடன் டெஸ்ட், ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் திறமையை வெளிப்படுத்திய சிறந்த வீரருக்கான விருதையும் சுவீகரித்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் நடைபெற்ற வருடாந்த விருது வழங்கும் விழாவில் இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டில் சர்வதேச ரீதியில் திறமையை வெளிப்படுத்திய கிரிக்கெட் வீர வீராங்கனைகள் மற்றும் நடுவர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இரவு பத்தரமுல்லையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் விளையாட்டுத் துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர, பாகிஸ்தான் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் வசிம் அக்ரம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

ஆசியக்கிண்ண 20 இற்கு 20 மகளிர் கிரிக்கெட் போட்டியில் பங்கேற்றுள்ளதால் மகளிர் கிரிக்கெட் அணியால் இந்த நிகழ்வில் பங்கேற்க முடியவில்லை.

20 இற்கு 20 கிரிக்கெட் போட்டியில் சிறந்த பந்து வீச்சாளருக்கான விருதை வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க பெற்றுக் கொண்டார்.

அந்தப் போட்டிப்பிரிவின் சிறந்த துடுப்பாட்ட வீரருக்கான விருது டீ.எம்.டில்ஷான் வசமானது.

இதேவேளை ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் சிறந்த பந்துவீச்சாளருக்கான விருதும் லசித் மலிங்கவுக்கு கிடைத்துள்ளது.

ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளின் சிறந்த துடுப்பாட்ட வீரருக்கான விருது குமார் சங்கக்காரவுக்கு கிடைத்துள்ளது.

மேலும் டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் சிறந்த பந்துவீச்சாளருக்கான விருது ரங்கன ஹேரத்துக்கும் சிறந்த துடுப்பாட்ட வீரருக்கான விருது தினேஷ் சந்திமாலுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை புதுமுக வீரர்களில், குசல் மெண்டிஸ் வருடத்தின் வளர்ந்து வரும் வீரருக்கான விருதைத் தட்டிச் சென்றார்.

இதேவேளை ரசிகர்களின் செல்வாக்குமிக்க வீரருக்கான விருது டி. எம் டில்ஷான் வசமானது.

# உலக செஸ் போட்டி: கார்ல்சன் சம்பியன்



நியூயோர்க், டிசெ.02

நியூயோர்க் நகரில் நடந்த உலக செஸ் போட்டியில் ரஷ்ய வீரர் செர்ஜி கர்ஜாகினை வீழ்த்தியதன் மூலம் மாக்னஸ் கார்ல்சன் 3 ஆவது முறையாக சம்பியன் பட்டத்தை வென்றுள்ளார்.

உலக செஸ் சம்பியன் போட்டி அமெரிக்காவில் உள்ள நியூயோர்க் நகரில் கடந்த 11 ஆம் திகதி தொடங்கியது. 12 சுற்றுக்களை கொண்ட இந்தப் போட்டியில் நடப்பு சம்பியனான மாக்னஸ் கார்ல்சன் (நோர்வே)- செர்ஜி கர்ஜாகின் (ரஷ்யா) மோதினார்கள்.

ஆட்டங்கள் சமநிலையில் முடிந்ததால் வெற்றி-தோல்வியை நிர்ணயிக்க டைபிரேக்கர் கடை பிடிக்கப்பட்டது. டைபிரேக்கர் போட்டி நேற்று முன்தினம் இடம் பெற்றது. ரேபிட் முறையில் 4 ஆட்டங்கள் நடத்தப்பட்டது.

இதன் முதல் 2 ஆட்டமும் சமநிலை ஆனது. 3 ஆவது மற்றும் 4-வது ஆட்டத்தில் கார்ல்சன் வெற்றி பெற்றார்.

இதன்மூலம் கார்ல்சன் 3-1 என்ற கணக்கில் வென்று உலக செஸ் சாம்பியன் பட்டத்தை கைப்பற்றினார். அவர் 3 ஆவது முறையாக சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளார்.

# இலங்கைக்கு எதிரான போட்டி: ஸிம்பாப்வே வீரர் மீது புகார்!

ஹராரே, டிசெ.02

இலங்கைக்கு எதிரான போட்டியில் ஸிம்பாப்வே அணியின் இடதுகை வேகப்பந்து வீச்சாளர் பிரைன் விட்டோரி ஐ.சி.சி. விதிமுறையை மீறி பந்து வீசியதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.



சமீபத்தில் நடந்து முடிந்த முத்தரப்புத் தொடரின் இறுதிப்போட்டியில் பிரைன் விட்டோரி விதியை மீறி பந்தை வீசியதாக போட்டி அதிகாரிகள் ஸிம்பாப்வே கிரிக்கெட் ஆணையத்திடம் முறையிட்டுள்ளனர்.

இந்த ஆண்டு ஆரம்பத்தில் இதே பிரச்சனை காரணமாக விட்டோரி பந்து வீச தடைவிதிக்கப்பட்டது நினைவு கூரத்தக்கது.

பின்னர், விட்டோரி, பந்து வீச்சுப் பாணியை மாற்றிக் கொண்டதைத் தொடர்ந்து ஐ.சி.சி. அவருக்கு மீண்டும் அனுமதியளித்தது.

தற்போது, மீண்டும் விட்டோரி மீது புகார் எழுந்துள்ளதை அடுத்து அவரது பந்துவீச்சினை ஆராய்வதுடன், குறித்த அறிக்கையை 14 நாட்களுக்குள் சமர்பிக்க வேண்டும் என ஐ.சி.சி. அறிவித்துள்ளது.

## முரளிக்குப் பின் எவரும் 20 விக்கெட்டுகள் வீழ்த்தவில்லை!

கொழும்பு, டிசெ.02

இலங்கை அணியில் முத்தையா முரளிதரனுக்குப் பிறகு சுழற்பந்து வீச்சாளர்கள் எவரும் 20 விக்கெட்டுக்களை வீழ்த்தவில்லை என ஜெயசூர்யா கூறியுள்ளார்.

இலங்கை அணியின் அதிரடி ஆட்டக்காரரும் முன்னாள் வீரருமான ஜெயசூர்யா, இடது கை சுழற்பந்து வீச்சாளரான ரங்கனா ஹேரத் இன்னும் இரண்டு ஆண்டுகள் விளையாட வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில்:-

இலங்கை அணியில் ஜெயவர்த்தன, சங்கக்கார, திலகரத்ன டில்சான் போன்றோர் அணியில் இருந்து ஓய்வுபெற்ற பின்பு, அவர்கள் வெற்றிடத்தை நிரப்புவதற்கு இன்னும் போதுமான வீரர்கள் கிடைக்கவில்லை என்றும் கூறியுள்ளார்.




# டெஸ்ட் தர வரிசையில் 3 ஆவது இடத்தை பிடித்த விராட் கோஹ்லி

டுபாய், டிசெ.02

ஐ.சி.சி. டெஸ்ட் துடுப்பாட்ட வீரர் தரவரிசையில் தொடர்ந்து முன்னேறி வரும் இந்திய அணித் தலைவர் விராட் கோஹ்லி தற்போது 3 ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.

மொகாலியில் கடந்த செவ்வாயன்று நிறைவடைந்த இங்கிலாந்துக்கு எதிரான 3 ஆவது டெஸ்ட் கிரிக்கெட்டில் இந்திய அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று தொடரில் 2-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

இதையடுத்து டெஸ்ட் கிரிக்கெட் வீரர்களின் புதிய தரவரிசைப் பட்டியலை சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) நேற்று முன்தினம் வெளியிட்டது.

இதில் துடுப்பாட்ட வீரர்களின் தரவரிசையில் இந்திய அணித் தலைவர் விராட் கோஹ்லி ஒரு இடம் முன்னேறி 833 புள்ளிகளுடன் 3 ஆவது இடத்தை பிடித்துள்ளார்.

மொகாலி டெஸ்டில் 62 ஓட்டங்கள் மற்றும் 6 ஓட்டங்கள் (ஆட்டம் இழக்காமல்) எடுத்ததன் மூலம் அவருக்கு 9 தரவரிசைப் புள்ளி கூடுதலாகக் கிடைத்துள்ளது.

இங்கிலாந்து தொடருக்கு முன்பாக 15 ஆவது இடத்தில் இருந்த விராட் கோஹ்லி இந்த தொடரில் மொத்தம் 405 ஓட்டங்களை குவித்து இருப்பதுடன் தரவரிசையிலும் அதி வேகத்தில் ஏற்றம் கண்டு, மிகச்சிறந்த நிலையை எட்டியுள்ளார். இங்கிலாந்துக்கு எதிரான எஞ்சிய இரு டெஸ்டிலும் அவர் இதே போன்று அதிக ஓட்டங்களை நிச்சயம் பெற்றால் முதல்முறையாக தரவரிசையில் முதல் இடத்தைப் பிடிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆஸ்திரேலிய அணித் தலைவர் ஸ்டீவன் ஸ்மித் முதலிடமும் (897 புள்ளி), இங்கிலாந்து வீரர் ஜோ ரூட் (847 புள்ளி) 2 ஆவது இடமும், நியூசிலாந்து அணித் தலைவர் வில்லியம்சன் 4 ஆவது இடமும் (817 புள்ளி) வகிக்கிறார்கள்.

இதே டெஸ்டில் 89, 15 ஓட்டங்கள் வீதம் விளாசிய இங்கிலாந்து வீரர் ஜானி பேர்ஸ்டோ (759 புள்ளி) 3 இடங்கள் அதிகரித்து தனது வாழ்க்கையில் சிறந்த தர நிலையாக 9 ஆவது இடத்தைப் பெற்றிருக்கிறார்.

ஏனைய இந்திய வீரர்களான புஜாரா 8 ஆவது இடத்திலும் (ஒரு இடம் ஏற்றம்), ரஹானே 12 ஆவது இடத்திலும் (ஒரு இடம் குறைவு), எம்.விஜய் 29 ஆவது இடத்திலும் (6 இடம் பின்னடைவு) உள்ளனர்.

டெஸ்ட் பந்து வீச்சாளர்களின் தரவரிசையில் முதல் 4 இடங்களில் மாற்றம் இல்லை. இந்தியாவின் அஸ்வின் (891 புள்ளி), இலங்கையின் ரங்கன ஹேரத் (867 புள்ளி), தென்னாபிரிக்காவின் ஸ்டெயின் (844 புள்ளி), இங்கிலாந்தின் ஜேம்ஸ் அண்டர்சன் (834 புள்ளி) ஆகியோர் முதல் 4 இடங்களில் தொடருகிறார்கள்.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான பகல்-இரவு டெஸ்டில் 6 விக்கெட்டுகளை வீழ்த்திய ஆஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் ஜோஷ் ஹேசில்வுட் 4 இடங்கள் எகிறி, முதல் முறையாக முதல் ஐந்து இடங்களுக்குள் நுழைந்து 5 ஆவது இடத்தைப் பெற்றுள்ளார். இந்தியாவின் ரவீந்திர ஜடேஜா 7 ஆவது இடத்திலும் (ஒரு இடம் சரிவு), முகமது ஷமி 19 ஆவது இடத்திலும் (2 இடம் முன்னேற்றம்) உள்ளனர்.

சகலதுறை அட்டக்காரர்களின் தரவரிசையில் அஸ்வினின் அரியணைக்கு ஆபத்து இல்லை.

## பிரேஸில் வீரர்களின் மறைவுக்கு பீபா அனுதாபம்; வீரர்களை இரவல் கொடுக்க முன்வரும் கழகங்கள்



கொலம்பியா, டிசெ.02

பிரேஸில் செப்பே கோன்ஸ் உதைபந்தாட்டக் கழக வீரர்கள் விமான விபத்தில் பலியான சம்பவத்தையிட்டு பீபா (FIFA) தலைவர் ஜியான்னி இன்பன்டீனோ அனுதாபம் வெளியிட்டுள்ளார்.

“உதைபந்தாட்டத்துக்கு இது மிகவும் சோகம் நிறைந்த நாள். கொலம்பியாவில் இடம்பெற்ற விமான விபத்து பெரும் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது. இது ஓர் அதிர்ச்சி தரும் அவலச் செய்தியாகும்.

விபத்தில் பலியான கால்பந்தாட்ட வீரர்களை நினைவுகூரும் அதே வேளை அவர்களது குடும்பத்தினர், நண்பர்களுக்கு பீபா தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றது'' என இன்பன்டீனோ தெரிவித்துள்ளார்.

பிரேஸில் உதைபந்தாட்டக் கழக வீரர்கள், விமானச் சிப்பந்திகள் உட்பட 81 பேர் பயணித்த விமானம் பொலிவியாவில் தரித்து விட்டு கொலம்பியா நோக்கிச் செல்லும் போது திங்கள் இரவு விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் 2 உதைபந்தாட்ட வீரர்கள் உட்பட 6 பேர் உயிர்தப்பியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கோபா சுடா அமெரிக்கானா கிண்ண இறுதிப் போட்டியில் கொலம்பியாவின் அத்லெட்டிகோ நெஷனல் கழகத்தை எதிர்கொள்வதற்காக சேப்பே கோன்ஸ் கழக வீரர்கள் விமானம் மூலம் பயணித்துக்கொண்டிருந்த போதே இந்த அனர்த்தம் இடம் பெற்றது.


இந்த விபத்தை அடுத்து செப்பேகோன்ஸ் கழகத்துக்கு வெற்றி அளிப்பதற்கு அத்லெட்டிகோ நெஷனல் கழகம் முன்வந்துள்ளது.

இறுதிப் போட்டி நடைபெறவுள்ள நேரத்தில் ரசிகர்கள் வெள்ளை ஆடை அணிந்து அரங்குக்கு வருகை தருமாறும் அத்லெட்டிகோ நெஷனல் கழகம் டுவிட்டர் மூலம் கோரிக்கை விடுத்திருந்தது.

இதேவேளை, செப்பே கோன்ஸ் கழகத்துக்கு எவ்வித வேதனமும் இன்றி வீரர்களை இரவல் கொடுப்பதற்கு பிரேஸில் நாட்டின் முதல் தரக் கால்பந்தாட்டக் கழகங்கள் முன்வந்துள்ளன.

அத்துடன் அடுத்த மூன்று வருடங்களுக்கு செப்பேகோன்ஸ் கழகம் தரமிறக்கப்படக்கூடாது என்ற கோரிக்கையையும் முதல் தரக் கழங்கள் விடுத்துள்ளன.

## ஹோட்டலுக்கு பெண்களுடன் சென்ற பங்களாதேஷ் வீரர்களுக்கு அபராதம்!





டாக்கா, டிசெ.02

பங்களாதேஷின் முன்னணி வீரர்களான, வேகப்பந்து வீச்சாளர் அல்-அமின் ஹூசைன், துடுப்பாட்ட வீரர் சபீர் ரகுமான் ஆகியோருக்கு தலா 10 லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் இடம்பெறும் ஐ.பி.எல். போன்று பங்களாதேஷ் பிரிமீயர் லீக் 20 ஓவர் கிரிக்கெட் போட்டி பங்களாதேஷில் தற்போது நடைபெற்று வருகிறது.

இந்த போட்டியில் பங்கேற்றுள்ள பங்களாதேஷ் முன்னணி வீரர்களான வேகப்பந்து வீச்சாளர் அல்-அமின் ஹூசைன், துடுப்பாட்ட வீரர் சபீர் ரகுமான் ஆகியோர் ஒழுங்கீன நடவடிக்கையில் சிக்கியுள்ளனர்.

இதனால் இவர்களுக்கு தலா 10 லட்சம் ரூபா அபராதம் விதித்து பங்களாதேஷ் கிரிக்கெட் சபை நடவடிக்கை எடுத்துள்ளது. அத்துடன், எதிர்காலத்தில் இதுபோன்ற ஒழுங்கீன செயலில் ஈடுபட்டால் தண்டனை கடுமையாக இருக்கும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

இருவரும் என்ன தவறு செய்தார்கள் என்பதை கிரிக்கெட் வாரியம் வெளியிடவில்லை. ஆனால், ஹோட்டலில் தங்களது அறைக்கு சிறப்பு விருந்தினர் என்ற பெயரில் பெண்களை இவர்கள் அழைத்து சென்றதாகவும், அதனால் தான் கிரிக்கெட் சபை அபராதம் விதித்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

# ஒற்றையாட்சி விடயத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அம்பலமாகியுள்ளது.

– இவ்வாறு கூறுகின்றார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

நேற்று யாழ். ஊடக அமையத்தில் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தமிழ்க் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரை தொடர்பில் இந்தச் செய்தியாளர் மாநாட்டில் அவர் காரசாரமான கருத்துக்களை முன்வைத்தார். அங்கு அவர் கூறியவை வருமாறு:-

புதனன்று நாடாளுமன்றில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் கொள்கை நிலைப்பாடு தொடர்பில் முக்கிய அறிவிப்புக்களை கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் விடுத்திருக்கின்றார். அவர் குறிப்பிடும் விடயங்கள் நடைமுறையில் வந்தால் தமிழ் மக்களைப் பொறுத்தவரை பாரதூரமான விளைவுகளும் பாதிப்புக்களும் ஏற்படப் போகின்றன.

2009 இல் போர் முடிந்த காலத்திலிருந்தே தமிழ்க் கூட்டமைப்பு எல்லாத் தேர்தல்களிலும் ஒரே விடயத்தைக் கூறிவந்திருக்கின்றது. ஒரு சமஷ்டி ஆட்சி முறையைத் தாங்கள் கோரி வருகின்றனர் என்றும் அந்த ஆட்சி பகிரப்பட்ட இறைமையின் அடிப்படையில் அமையவேண்டும் என்றும் அவர்கள் கூறிவந்தனர்.

அண்மைக் காலமாகக் கூட்டமைப்பின் தலைவர்கள் எல்லோரும் சம்பந்தன், சுமந்திரன் உட்பட அனைத்துத் தலைவர்களும் – அரசியல் தீர்வு குறித்துக் குறிப்பிடுகையில் தமிழ் மக்களின் இறைமையின் அடிப்படையில் அந்தத் தீர்வு அமையவேண்டும் என்றே வலியுறுத்தி வந்துள்ளனர்.

## இறைமையைப் பகிர முடியாது

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைப் பொறுத்தவரை நாம் 'பகிரப்பட்ட இறைமை' என்ற விடயத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. ஏனென்றால், வேறு யாரிடமிருந்தும் இறைமையைப் பகிர்ந்து கொண்டுதான் எமக்கு இறைமை கிடைக்கும் என்ற கருத்துக்கு நாம் உடன்படவில்லை.

எமது கருத்து என்னவென்றால் – அதுதான் உண்மையில் தமிழ்த்தேசிய அரசியல் சிந்தனையின் ஆரம்பத்தில் இருந்து, 1951 முதல் தமிழரசுக் கட்சியின் உருவாக்கம் தொடக்கம் மிகத் தெளிவாகக் கூறப்பட்டுவரும் கருத்து – தமிழ் தேசத்துக்கு என்று தனித்துவமான ஓர் இறைமை இருக்கின்றது என்பதுதான்.

நாங்கள் ஒரு தேசம் என்ற வகையில் எமது இறைமை எங்களிடம்தான் இருக்கின்றது. அதை நாங்கள் இன்னொருவரிடமிருந்து பெற்றுக்கொள்ளத் தேவையில்லை. ஒரு தேசமாக இருக்கும் மக்களிடம் இறைமை உண்டு. அது எங்களிடமும் உண்டு.

## தமிழரசுக் கட்சியும் அதைத்தான் கூறிவந்தது

அதைத்தான் 1951 இல் இருந்து தமிழரசுக் கட்சியும் கூறிவந்திருக்கின்றது. தேசம் என்ற வகையில் எங்களிடம் பிறப் புரிமையாக இருக்கும் இறைமையின் அடிப்படையில், அந்த இறைமையைச் சிங்கள தேசம் என்ற இறைமையுடன் கூட்டி நாங்கள் ஒரு நாட்டுக்குள் இணைந்துவாழலாம் என்றுதான் அவர்கள் கூறிவந்திருக்கின்றார்கள். அந்த அடிப்படையில்தான் தமிழ்த்தேசிய அரசியல் இவ்வளவு காலமும் வளர்ந்து வந்தது.

## கூட்டமைப்புடன் ஏன் முரண்பட்டோம்?

இப்படி 60 வருட காலமாக இறைமை தொடர்பாக நாம் கருதி வந்த நிலைப்பாட்டில் இருந்து 2009 யுத்த முடிவுக்குப் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விலகி, புதிய கருத்து நிலைப்பாட்டைக் கூறமுற்பட்ட போதே நாம் அவர்களுடன் முரண்பட்டு வெளியே வந்தோம்.

வெளிவிவகார அமைச்சின் விவாதத்தில் தமிழ்ப் பிரதிநிதி கருத்துக்கூறுவது மிக முக்கியமானது. புதிய அரசமைப்பு உருவாக்கம், நல்லிணக்க முயற்சிகள், பொறுப்புக்கூறல் ஆகிய – தமிழர்களைப் பொறுத்தவரை முக்கியமான – மூன்று விடயங்கள் இந்த அமைச்சுடன்தான் தொடர்புபட்டுள்ளன.

அத்தகைய இடத்தில் தமது உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை சுமந்திரன் கூறுகின்றமையும் மிக முக்கியமானதாகும்.

அந்த உரையில் தமிழ் மக்கள் தாங்கள் தங்களின் இறைமையைக் கோரவில்லை என்றும், இறைமையைப் பகிரும்படி கூடக் கோரவில்லை என்றும் அவர் மிகத் தெளிவாகக் கூறி அந்த நிலைப்பாட்டை அங்கு பதிவு செய்கின்றார். இது மிகப் பாரதூரமான விடயம்.

"இறைமையைப் பகிர்ந்து கொள்ளலாம். அதில் எந்த விதமான பிரச்சினையும் இல்லை. அப்படியிருந்தும் நாங்கள் அதைக் கூடக் கோரவில்லை" – என்றும் அவர் மேலதிகமாகத் தங்களது நிலைப்பாட்டை உறுதிப்படுத்துகின்றார். இது மிக முக்கியமான விடயம்.

தமிழ்க் கூட்டமைப்பு, தமிழ் மக்களிடம் திரும்பத் திரும்ப ஒரு விடயத்தைக் கூறிவருகின்றது. அது – தாங்கள் ஒற்றையாட்சியை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்பது. அது மாத்திரமல்ல, 'ஒற்றையாட்சி', 'சமஷ்டி' என்ற சொற்கள் ஏதும் பாவிக்கக்கூடாதென்றும், ஆனால், தமிழ்க் கூட்டமைப்பும் மக்களும் ஒற்றையாட்சியை ஒரு போதும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்றும் அது கூறி வருகின்றது.

## ஒற்றையாட்சி - சமஷ்டி என்ன வித்தியாசம்?

ஒற்றையாட்சிக்கும் சமஷ்டிக்கும் இருக்கும் வித்தியாசம் என்ன?

ஒற்றையாட்சியில் இறைமை என்பது பகிரப்படாமல் ஓரிடத்தில் குவிந்திருக்கும். ஒற்றை – ஒன்று – ஓரிடம்.

சமஷ்டியில் இறைமை பல இடங்களில் – மையங்களில் – தங்கியிருக்கலாம். ஓரிடத்தில் மட்டும்தான் என இறைமை குவிக்கப்பட்டிருக்காது.

சுமந்திரன், ஒற்றை ஆட்சியைத் தாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்று கூறினாலும்கூட நடைமுறையில் "இறைமையைப் பகிர்ந்தளிக்கும்படி நாங்கள் கேட்கவில்லை" என்று குறிப்பிடுகின்றமை மூலம் சட்ட ரீதியாக இலங்கை அரசுக்கும் நாடாளுமன்றுக்கும் ஒரு தெளிவான – திட்டவட்டமான – வாக்குறுதியை அளிக்கின்றார். பெயரில் இல்லாவிட்டாலும் ஓர் ஒற்றையாட்சிக்கு முழுமையாக நாம் இணங்கத் தயார் என்பதே அந்த வாக்குறுதி. அதுதான் அவரது அந்தப் பேச்சின் முக்கிய அம்சம்.

## கூட்டமைப்பு குத்துக்கரணம்

தமிழ் மக்களிடம் ஒவ்வொரு கட்டத்திலும் கூட்டமைப்பினர் கூறியவை என்ன?

இரண்டு வாரங்களுக்கு முன்னர் கூட சம்பந்தர் யாழ்ப்பாணம் வந்தபோது தமிழ் மக்களின் இறைமையின் அடிப்படையில்தான் நாங்கள் தீர்வைக் கேட்கின்றோம் என்றுதான் கூறியிருந்தார்.

ஆனால், சுமந்திரனோ இந்தத் தனித்துவமான இறைமை என்ற விடயத்தைத் தாங்கள் கோரவேயில்லை என மிக ஆணித்தரமாக – உத்தியோகபூர்வமாக – அதுவும் நாடாளுமன்றத்தில் கூறுகின்றார்.

எங்கே போய் நாங்கள் எங்கள் கருத்துக்களை ஆணித்தரமாகக் கூறி – பதிவுசெய்து – வாதம் செய்து – சொற்சமர் புரிந்து – விடயத்தைச் சாதிக்கவேண்டுமோ அங்கு போய்த்தான் இந்த நிலைப்பாட்டை அவர் கூறுகின்றார்.

தமிழ் மக்கள் கொடுத்த ஆணையை அடியோடு நிராகரித்து உதாசீனம் செய்யும் இந்தக் கருத்து கூட்டமைப்பு சார்பில் உத்தியோகபூர்வமாக வந்திருக்கின்றது.

2010 பெப்ரவரியில் கூட்டமைப்பிலிருந்து வெளியேறி, எமது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை நாம் ஸ்தாபித்த காலம் தொடக்கம் கடந்த தேர்தல் வரை நாம் எமது மக்களிடம் ஒரு விடயத்தைத் திரும்பத்திரும்பக் கூறிவந்தோம்.

## தேர்தலுக்குக் கொள்கை 'பின்னர் குத்துக்கரணம்

ஆக, கூட்டமைப்பு தேர்தல் காலத்தில் மட்டும்தான் இந்தக் கொள்கை, கோட்பாடு பற்றிப் பேசும். தேர்தலுக்குப் பின்னர் அந்தக் கொள்கை, கோட்பாடுகளைக் காற்றில் பறக்கவிட்டு, முற்றுமுழுதாக அதற்கு மாறாகச் செயற்படும் என்பதுதான்.

அப்படிக் கூட்டமைப்பின் செயற்பாடு அமையும் என்பதால், அதனை நம்பி ஏமாறாதீர்கள் என்றுதான் நாம் மக்களிடம் எடுத்துரைத்து வருகின்றோம்.

தமிழ் மக்கள் பேரவை ஒரு தீர்வு யோசனையை முன்வைத்த போது மட்டும் அதைக் குழப்புவதற்காக அவ்வப்போது வடக்கு, கிழக்கு வந்து இறைமை குறித்தும் தமிழ்த் தேசம் குறித்தும் சமஷ்டி பற்றியும் பேசினார்கள்.

ஆனால், நடைமுறையில், பேசவேண்டிய உரிய இடத்தில் இந்த அனைத்துக் கொள்கைகளையும் கைவிட்டுத்தான் அவர்கள் பேசுகின்றார்கள்.

இதைத்தான் திரும்பத்திரும்ப எமது மக்களுக்கு எடுத்துரைத்து வருகின்றோம்.

எமது எதிர்காலச் சந்ததியினருக்குத் துரோகம் இழைக்கும் ஓர் தீர்மானத்தை நாம் எடுக்காமல் கட்டுப்படுத்துவதற்கு முதலில், நாம் உண்மை நிலையைப் புரிந்துகொள்ள வேண்டும்.

சுமந்திரனின் அறிவிப்பு தமிழ்த் தேசியத்தையும், தமிழரின் பிறப்புரிமையான இறைமையையும் அடகுவைக்கும் நடவடிக்கை. இதை மக்கள் முழு அளவில் புரிந்துகொண்டால்தான் எமது எதிர்காலச் சந்ததியை அழிவில் இருந்து காப்பாற்றலாம். – என்றார்.

# தீர்வைக் குழப்பினால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்காலத்தின் தலையெழுத்தைத் தீர்மானிக்கும் அமைச்சுக்களின் மீதே இன்று குழுநிலை விவாதம் நடைபெறுகின்றது. நல்லிணக்கம், தேசிய கலந்துரையாடல் அமைச்சு முக்கியமானவை. அத்துடன் அனர்த்த முகாமைத்துவ அமைச்சும் விவாதம் செய்யப்படுகிறது.

நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தாவிடின் இயற்கை அனர்த்தத்தைவிடவும் மோசமான அனர்த்தத்துக்கு நாடு முகம் கொடுக்க நேரிடும்.

சர்வதேசத்தில் நவீன தொழில்நுட்ப யுகத்தில் கூட அபிவிருத்தி அடைந்த நாடுகளிலும் இன, மத, மொழி சார்ந்த பிரச்சினைகள் உள்ளன. அங்கும் கலவரங்களும், முரண்பாடுகளும், மோதல்களும் ஏற்பட்ட வண்ணமுள்ளன.

இலங்கையில் இனப்பிரச்சினை என்பது புதியது அல்ல. 1930ஆம் ஆண்டு முதல் 8 தசாப்தங்களுக்குள் சிங்களம் – முஸ்லிம், சிங்களம் – தமிழ் கலவரங்கள் நடந்தேறியுள்ளன. இதன் காரணமாக நாட்டு மக்களிடையே ஏற்பட்ட குரோதமும் சந்தேகமும் பீதியும் நாட்டின் முன்னேற்றத்தை தகர்த்தெறிந்தன. இதன் மூலம் பொருளாதாரம் சீர்குலைந்தது.

சுதந்திரத்தின் பின்னர் எமது தலைவர்கள் தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு முனைந்த போதும் அது நிறைவேறவில்லை. தேசிய பிரச்சினைக்குத் தீர்வொன்றைக்காணும் நிமித்தம் நாம் முன்னெடுக்கும் முயற்சிகள் பற்றி சிலர் தவறான அர்த்தப்படுத்தல்களுடன் பேசி வருகின்றனர். புதிய அரசமைப்பொன்றை இயற்றும் எமது முயற்சிகளைப் பார்த்து பரிகசித்து – அவமதித்து – பேசும் செயற்பாடுகள், இந்த நாட்டில் மீண்டுமொரு இரத்தகளரி இடம்பெற வேண்டும் என்ற எதிர்பார்ப்பை அவர்கள் கொண்டிருப்பதையே வெளிப்படுத்துகிறது.

1987 ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தன இந்திய – இலங்கை ஒப்பந்தத்தை ஏற்படுத்தியபோது அப்போதைய பிரதமராக இருந்த ரணசிங்க பிரேமதாச உள்ளிட்ட அமைச்சரவை அதை எதிர்த்திருந்தது. எனினும், நாட்டில் பட்டப்பகலில் ஊரடங்கு சட்டத்தை பிறப்பித்து இந்திய பிரதமர் ராஜீவ் காந்தியுடன் ஜே.ஆர். ஜெயவர்தன அந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டிருந்தார். அதன் பிரகாரமே 13 ஆவது அரசமைப்பு திருத்தம் கொண்டுவரப்பட்டு மாகாண சபைகளும் உருவாக்கப்பட்டன.

அதன்மூலம் உண்மையான தீர்வு கிடைக்கவில்லை என்று எழுப்பப்பட்ட குரல்களினால் இறுதியில் அது தேசிய பிரச்சினையாக மட்டுமல்லாது, சர்வதேச மட்டத்திலான பிரச்சினையாகவும் உருவெடுத்துள்ளது.

யுத்தத்தின் விளைவாக பெரும் எண்ணிக்கையிலான இலங்கையர்கள் வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்து சென்றுள்ளனர். அதில் ஒரு தரப்பினர் விருப்பத்தின் பேரில் சென்றிருந்தனர். இன்னுமொரு தரப்பினர் தப்பிச் சென்றிருந்தனர்.

இன்றும் கூட தென்னிந்தியாவில் ஒரு லட்சம் இலங்கை அகதிகள் இருக்கின்றனர். நாடு என்ற வகையில் இது எமக்கு அகௌரவமாகும். சர்வதேச மாநாடுகளில் சென்று பேசும் போது இதை அகௌரவமாக ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது.

யுத்தம் பற்றிய அனுபவம் எம் அனைவருக்கும் இருக்கிறது. என் மீது தாக்குல் நடத்துவதற்கு 5 தடவைகள் முயற்சிக்கப்பட்டுள்ளன. யுத்தம் முடிவடைந்துவிட்ட போதிலும் பிரச்சினை உண்மையில் இன்னும் நிறைவடைந்துவிடவில்லை. நாட்டைப் பிளவுபடுத்தும் கருத்துக்கள் இன்னும் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. உண்மையான சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு தனித் தமிழீழம் பற்றி பேச்சுக்களை சர்வதேச ரீதியில் தோற்கடிக்க வேண்டும்.

புதிய அரசமைப்பு தொடர்பில் கலந்துரையாடல்களை மேற்கொண்டு வெற்றிகரமான பிரவேசமொன்றுக்கு நாம் வந்துள்ளோம்.

எனினும், பண்டாரநாயக்க, டட்லி, ஜே.ஆர்., சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க போன்ற கடந்த கால தலைவர்கள் அரசியல் தீர்வொன்றுக்கான முன்முயற்சியை மேற்கொண்ட போது அக்காலப் பகுதிகளிலும் சிலர் அவற்றைக் குழப்பியமையைப் போன்று இன்றும் சிலர் எமது முயற்சிகளை குறைத்து மதிப்பீடு செய்து குழப்புவதற்கு முயற்சிக்கின்றனர். புதிய அரசமைப்பின் மூலம் நாட்டை பிளவுப்படுத்த அரசாங்கம் முயற்சிப்பதாக பிக்குமார்கள் மத்தியில் சென்று தவறான கருத்தைப் பரப்புகின்றனர். பௌத்த மதத்திற்குரிய முதன்மை அந்தஸ்த்தை நீக்கப்போவதாக பொய்யான பிரசாரங்களை முன்னெடுக்கின்றனர்.

அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்வதற்கும் அதிகாரத்தை பயன்படுத்தி தப்பித்துக் கொள்வதற்கும் கடந்த காலத்தில் இந்த பிரச்சினையைப் பயன்படுத்திய சில தலைவர்கள் இன்று எதிர்காலத்தில் அதிகாரத்திற்கு வரும் எதிர்பார்ப்புடன் குறுகிய அரசியல் நோக்கத்திற்காக, பிரச்சினையை தீர்ப்பதற்கான தற்போதைய அரசின் உண்மையான முயற்சிகளை எந்தவொரு அடிப்படை ஆதாரங்களுமின்றி பொய்யான வார்த்தைகளைப் பயன்படுத்தி குழப்புவதற்கு முயற்சிக்கின்றனர். இந்த பிரச்சினை தீர்க்கப்படாமல் போகும் பட்சத்தில், எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பாரதூரமான விளைவுகளுக்கு இவர்களே பொறுப்பேற்க வேண்டியிருக்கும்.

அரசமைப்பின் ஊடாக தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்களம் என அனைத்து சமூகத்தினரும் ஏற்றுக் கொள்ளக்கூடியதும் சகல தரப்பினருக்கும் நியாயபூர்வமானதுமான அரசியல் தீர்வொன்றை வழங்குவதற்கே நாம் செயற்பட்டு வருகிறோம்.

இவ்வாறான நிலையில், பிரச்சினைக்குத் தீர்வொன்றை முன்வைப்பதற்கான அடிப்படையில் வடக்கு தலைவர்கள் செயற்பட வேண்டியமை அவசியமாகும். ஏனெனில், புதிய அரசமைப்பானது நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் சர்வஜன வாக்கெடுப்பொன்றுக்கு முன்வைக்கப்படும்போது, அதை நிறைவேற்றிக்கொள்வதற்கு பொதுவான அபிப்பிராயமொன்று ஏற்படுத்தப்பட வேண்டும்.

இன, மத, குல மற்றும் மொழி பேத ரீதியான செயற்பாடுகள் பிரச்சினையை தீர்க்க உதவா. பிரச்சினை சம்பந்தமாக பேசும் போது தீர்வு காண்பதிலும் நேர்மையாக இருக்க வேண்டும். இன்று யுத்தம் மற்றும் துப்பாக்கிச் சத்தங்கள் இல்லாத போதிலும் உண்மையான சமாதானத்தை ஏற்படுத்த வேண்டியுள்ளது.

எனினும், கடந்த தசாப்தங்களில் அற்பத்தனமான தேசாபிமானிகளின் செய்பாடுகளினால்தான் நாம் பாரதூரமான யுத்தமொன்றுக்கு முகம்கொடுக்க வேண்டிய வந்தது. எமக்கு, அரசியல் வீரர்கள் தேவையில்லை.

(20ஆம் பக்கம் பார்க்க)

காலைக்கதிர்
Kalaikkathir

## தீர்வைக்....

(19 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நியாயபூர்வமானதீர்வொன்றை வழங்கும் வீரர்களே அவசியமாக இருக்கின்றனர்.

ஏற்கனவே அதிகாரத்தை இழந்து எதிர்காலத்தில்அதிகாரத்துக்கு வருவதற்கான எதிர்பார்ப்புடன் செயற்படுபவர்கள் எமது உண்மையான முயற்சிகளை குழப்புவார்களாயின், எதிர்காலத்திலும்அவர்களால்அதிகாரத்துக்கு வர இயலாமலேயே போகும். எதிர்காலவாக்குகள்மற்றும்அதிகாரத்தை எதிர்பார்த்து குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக செயற்பட்டமையினாலேயே கடந்த காலங்களில்யுத்தம்உருவாகியிருந்தது. ஆகவே, பிளவுபடாத நாட்டுக்குள் அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக்கொள்ளும் தீர்வொன்றுக்கு பிரவேசிக்க வேண்டும்.

50 வருட அரசியல் அனுபவம் எனக்கு இருக்கிறது. இந்த பிரச்சினையைத்தீர்ப்பதில்வடக்கு, கிழக்கின் சிறந்த தலைவரான சம்பந்தன்எம்முடன் இருக்கிறார். இதற்கு முன்னர் இருந்த சிறந்த தலைவரான அமிர்தலிங்கம் விடுதலைப் புலிகளினால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

நியாயபூர்வமானதீர்வொன்றை காண்பதற்குசம்பந்தனும்அவரது கட்சியினரும் ஒத்துழைப்பை வழங்கி வருகின்றனர். இந்த ஒத்துழைப்பு கடந்த காலங்களில் வடக்குத்தலைவர்களிடம் இருந்து பெரும்பாலான சந்தர்ப்பங்களில் கிடைத்திருக்கவில்லை

புதிய அரசமைப்பு தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெளியிட்டிருக்கும் கருத்துக்கள் கவலைக்குரியனவாக இருக்கின்றன. புதிய அரசமைப்புநாட்டைப்பிளவுப்படுத்தும் என்று அவர் தெரிவித்துள்ளார். எனினும், மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில் இருந்தபோது நானும் அந்த அரசாங்கத்தில் அங்கம் வகித்திருந்தேன். 2009 ஆம் ஆண்டுஐ.நா.வில்அவர்அதிகார பகிர்வுபற்றி பேசியிருந்தார். அது மட்டுமல்லாது, தீர்வொன்றை வழங்க 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்குஅப்பால்செல்லவும் தாம்தயாராக இருக்கிறார் என இந்திய வெளிவிவகார அமைச்சரிடம் அவர் தெரிவித்திருந்தார். ஆகவே, அதிகா ரத்தில் இருக்கும் போது ஒன்றையும் அதிகாரத்தில் இல்லாதபோது மீண்டும் அதிகாரத்து வரும் எதிர்பார்ப்பில் இன்னொன்றையும் கூறுவது துரதிர்ஷ்டவசமான விட யமாகும்.

நிலையான சமாதானத்தையும் பிளவுபடாத நாடொன்றையும் உருவாக்குவதற்கும்மீண்டும்யுத்தமொன்று ஏற்படாமல் இருப்பதற்கும் சகலரும் ஒன்றிணைந்து வட்ட மேசையொன்றில் கலந்து பேசிப் பிரச்சினைக்குத் தீர்வொன்றைக் காண்பதற்கு ஒத்துழைப்புத் தருமாறு நாடாளுமன்றத்தின் அனைத்து உறுப்பினர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

அதிகாரப்பகிர்வு பற்றி நியாயமாக செயற்படுவதென்றால் நியாயபூர்வமான தீர்வொன்றினை வழங்கவேண்டும். தேசத்துரோகம் இழைக்க வேண்டிய அவசியம் எமக்கில்லை. உண்மையானதேசாபிமானி என்றால் பிரச்சினையை தீர்க்க செயற்பட வேண்டும். இந்த பிரச்சினையை எதிர்கால சந்ததியினருக்கு விட்டு வைக்க வேண்டியதில்லை. இன்றே தீர்த்து விட வேண்டும். பிரச்சினையைத் தீர்க்காமல் காலம் தாழ்த்துவதும் தேசத்துரோகமொன்றுதான். அதேபோல், தீர்வுக்கான முயற்சிகளைக்குழப்புவதும்எதிர்காலசந்ததியினருக்குஇழைக்கும்துரோகமே.

கொழும்பில், ஊடகவியலாளர் சந்திப்புக்களை நடத்தி, ஆர்ப்பாட்டங்களையும் பேரணிகளையும் முன்னெடுப்போர் யாரும் வடக்குக்குச் சென்று அம்மக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து அவற்றுக்குத் தீர்வு காண செயற்பட்டிருக்கவில்லை. கொழும்பிலும் தெற்கிலும் ஆர்ப்பாட்டங்களை நடத்தும் அற்பத்தனமான தேசாபிமானிகளுக்கு அம்மக்கள் 27 வருடங்கள், அதற்கு மேலும் முகாம்களில்வாழ்ந்திருப்பதுபுரிய வேண்டும்.

அம்மக்களுக்குத்தீர்வொன்றை வழங்கும்போது, அரசினதும்படையினரதும் காணிகளை அவர்களுக்கு வழங்குவதாக ஆர்ப்பாட்டம் நடத்துகின்றனர். ஆனால், தங்களது காணிகளையே வடக்கிலுள்ள மக்கள் திரும்ப கேட்கின்றனர். கடந்த ஒரு வருட காலத்துக்குள் நாம் காணிகளை திரும்ப வழங்கியபோது, தங்களதுசொந்த இடங்களுக்கு திரும்பிய மக்கள் தங்களதுஉணர்வுகளைஉணர்வுபூர்வமாக வெளிப்படுத்தியிருந்தனர்.

இவற்றுக்கு எதிராகக் குரல் எழுப்புபவர்களுக்கு இதேபோன்றதொருயுத்தத்தில்தங்களதுகாணிகளை இழந்திருக்கும் பட்சத்தில் தான்அந்தக்காணிகள்விடுவிப்பு எந்தளவு நியாயபூர்வமானது என்பதுபற்றிப்புரியும். உண்மையான தகவல்களை திரிபுப்படுத்தி, தவறான கருத்துக்களை ஊடகங்கள் மூலம் பிரசாரம் செய்யாமல் சமூகத்துக்குஉண்மையைப்பேசுங்கள். நாம் நாட்டைப் பிளவுப்படுத்த முயற்சிக்கின்றோம் எனச் சிலர் பிக்குமார்களுக்குத் தெரிவித்த தவறான கருத்துக்களை நான் நிராகரிக்கிறேன். இந்த நாட்டில் அனைத்து இன மக்களும் நட்புடனும், அச்சம், சந்தேகமின்றியும் அமைதியாகவும் ஒன்றுபட்டு வாழக்கூடிய நிலைமையை ஏற்படுத்தும் - மீண்டுமொரு யுத்தம் ஏற்படாத சூழலொன்றை உருவாக்கும் - நிரந்தர வேலைத்திட்டமொன்றிற்காக நாம் ஒன்றுபட வேண்டும். நாம்அடக்குமுறைகள் மூலம் எதையும் மேற்கொள்ளும் அரசாங்கம்அல்ல. நாம்அகிம்சைவாதிஅரசாங்கம். -என்றார்ஜனாதிபதி.

## வடமராட்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சக மீனவர்களால் அவர்களைத் தேடமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதால் கடற்படையினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது எனவும் மேற்படி பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, மேற்படிமீனவர்களில் குடத்தனையைச் சேர்ந்த மீனவர்கள்திரும்பி வந்துவிட்டார்கள் என்று யாரோ கூறிய வதந்தியை நம்பி, அவர்களைப் பார்வையிடுவதற்காகச் சென்ற உறவினர்கள் நால்வர் விபத்தில் சிக்கி காயமடைந்துள்ளனர்.

பொற்பதி குடத்தனையைச் சேர்ந்த த.நேசவனிதா (வயது-52), க.தயானந்தி (வயது-35), நா.நகுலேஸ்வரி (வயது-38), தா.நந்தன் (வயது - 44) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

இவர்கள்சென்ற'படி'வாகனம் மற்றொரு 'படி' வாகனத்துடன் மோதிவிபத்துக்குள்ளானதிலேயே இவர்கள் காயமடைந்தனர்.

(ம-30-23-32)

## கலாசார விழா ஒத்திவைப்பு

மருதங்கேணி, டிசெ.02

மருதங்கேணி பிரதேச செயலகத்தில்இன்றுவெள்ளிக்கிழமை நடைபெறவிருந்த கலாசார பண்பாட்டுப் பெருவிழா சீரற்ற காலநிலை காரணமாகப்பிற்போடப்பட்டுள்ளது என மருதங்கேணிப் பிரதேசசெயலாளர்கே.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

இவ்விழா சீரற்ற காலநிலையினால் பிற்போடப்பட்டுள்ளது எனவும், இவ்விழா நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் பிரதேச செயலர் கூறினார். (உ-40)

## யாழ்.மாவட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாறு கூறினார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்–

நடா சூறாவளி காரணமாக சாவகச்சேரியைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்திருக்கின்றார்.

இதேபோல் மருதங்கேணி மற்றும், மாதகல் பகுதிகளில் இருந்து மீன்பிடிப்பதற்காக கடலுக்குச் சென்றவர்கள் காணாமல் போயுள்ளனர் என்றும் கூறப்படுகின்றது. ஆனால், மாதகலைச் சேர்ந்த இருவரும் தொடர்பில் உள்ளனர் என்றும் தெரிய வருகின்றது.

மேலும் சாவகச்சேரி, கரவெட்டி, பருத்தித்துறை, வேலணை ஆகிய பகுதிகளில் 18 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. ஒரு வீடு முழுமையாகச் சேதமடைந்துள்ளது.

எனினும் இதுவரை அவசர கால நிலைமை ஏற்படவில்லை. அப்படி ஒரு நிலை ஏற்பட்டால் நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கு படையினரின்உதவியைப் பெறுமாறு சகல பிரதேச செயலாளர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் வழக்கத்துக்கு மாறாகக் குளிர் காணப்படுகின்றது. எனவேமக்கள் அவதானமாக இருக்குமாறு கேட்கப்படுகின்றனர். - என்றார். (ம)

## 'நடா' புயல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதுவரை அதன் தாக்கம் வடக்கு இலங்கையில் உணரப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் காலநிலை மாற்றத்தினால் யாழ். குடாநாட்டில் நேற்று திடீரென வெப்பநிலை வீழ்ந்தது. ஒரே குளிர். வரலாறு காணாத விதத்தில் நேற்று மாலை குடாநாட்டின் வெப்பநிலை 16.8 பாகை செல்ஸியஸ்க்கு தடாலெனக் குறைந்தது. ஆயினும் நேற்றிரவு அது 19.8 பாகை செல்ஸியஸ்க்கு உயர்ந்தது. எனினும் குளிர் நடுக்கம் நீடித்தது.

இத்தகைய குளிர் நிலைமை நீடிக்குமானால் பெரும் பாதிப்பு ஏற்படும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

அறிவிக்கப்பட்ட அளவுக்கு நேற்று காற்றின் வேகம் குடாநாட்டில் உணரப்படவில்லை. என்றாலும் கரையோரப்பிரதேசங்களில்காற்றின் தாக்கம் இருந்தது. நேற்றிரவு சுமார் 30 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசியது.

பரவலாக மழை நீடித்தது. 35 மில்லிமீற்றர் மழை பதிவாகியுள்ளது. பருத்தித்துறை வல்லிபுரம் பகுதியில் அதிக மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

யாழ்.குடாநாட்டைச் சூழவுள்ள கடற்பிரதேசங்கள் தொடர்ந்தும் கொந்தளிப்பாகவும், கடும் மழையாகவும் காணப்பட்டன.

புயலினால் ஏற்படக்கூடிய விபரீதங்களை எதிர்கொள்வதற்கான தயார் நிலையில் அரசு இயந்திரம் முழு உஷாராக வைக்கப்பட்டிருந்தது.

# கடமைக்கு வ்ராத முப்படையினருக்கு நேற்றுத் தொடக்கம் பொது மன்னிப்பு

முப்படைகளிலிருந்து தப்பிச் சென்றவர்கள் உத்தியோகபூர்வமாக தமது சேவையிலிருந்து விலகிக் கொள்வதற்கு ஒரு மாத கால பொதுமன்னிப்பு காலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் ஊடக மையத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் பாதுகாப்பு செயலாளர் பொறியியலாளர் கருணாசேன ஹெட் டியாராச்சி இந்தப் பொது மன்னிப்புக் காலத்தை அறிவித்தார்.

இப் பொதுமன்னிப்புக் காலம் நேற்றுத் தொடக்கம் இம்மாதம் 31 ஆம் திகதி வரை அமுலில் இருக்கும். இதன்போது முப்படைகளிலிருந்து தப்பிச் சென்றவர்கள் தமது சேவைத் தலைமையகத்துக்கு அல்லது தான் சார்ந்த படைப்பிரிவிற்கு சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றனர். இவ்வாறு சமுகமளிக்கும் படை வீரர்கள் எதுவித தண்டனைகளுக்கு உட்படுத்தப்படவோ தடுப்புக் காவலில் வைக்கப்படவோ மாட்டார்கள். அவர்கள் சட்டபூர்வ ஆவணங்களை சமர்ப்பித்து சட்ட ரீதியாக விலகிச் செல்ல முடியும்.

முன்பு அறிவிக்கப்பட்ட பொது மன்னிப்புக் காலத்தைப் பயன்படுத்தி படையினர் பலர் சட்டபூர்வமாக விலகியுள்ளனர். இவ்வாறு சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தத் தவறிய படை வீரர்களுக்காக மீண்டுமொரு சந்தர்ப்பம் அளிக்கபட்டுள்ளது.

இதுவரை இராணுவத்திலிருந்து 174 இராணுவ அதிகாரிகள் மற்றும் 42 ஆயிரத்து 506 வீரர்களும், கடற்படையிலிருந்து 26 கடற்படை அதிகாரிகள் மற்றும் 6 ஆயிரத்து 133 வீரர்களும், விமானப்படையிலிருந்து 37 விமானப் படை அதிகாரிகள் 2 ஆயிரத்து 806 வீரர்களும் படையிலிருந்து தப்பிச் சென்றவர்களாக அல்லது உத்தியோகபூர்வ விடுமுறையின்றி கடமைக்கு சமுகமளிக்காதவர்களாக கருதப்படுகின்றனர். - என்று அவர் தெரிவித்தார். (ம)

## தென்னாபிரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அண்மைக்காலஅரசியல்ரீதியான மேம்பாடுகள், புதிய அரச மைப்பு உருவாக்கத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம், நீடித்த அமைதிமற்றும் நல்லிணக் கத்தை ஏற்படுத்துவதன் முக்கி யத்துவம், போன்ற விடயங்கள் குறித்து ஒருமணிநேரம் இடம் பெற்ற இந்தச் சந்திப்பின்போது இரா.சம்பந்தன் எடுத்துரைத்துள்ளார்.

நாடாளுமன்றவளாகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றஉறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனும் பங்கேற்றிருந்தார்.

## ரயில்வே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாடலின் பின்பே இந்தப் பணிப் பகிஷ்கரிப்பு இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

கோரிக்கைகள் சிலவற்றை முன்வைத்து நேற்று நள்ளிரவு முதல் நாடு முழுவதும் பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக ரயில்வே தொழிற்சங்கங்கள் தெரிவித்திருந்தன.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரச கருமமொழிகள் அமைச்சின் மீதான குழு நிலை விவா தத்தில் கலந்துகொண்ட ஜனாதிபதி, மக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தாது, ஆர்ப்பாட்டம் மற்றும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ள அனைவரையும் பேச்சுக்கு வருமாறு அழைப்பு விடுத்திருந்தார்.

இதைத் தொடர்ந்து நாடாளுமன்றவளாகத்தில்ஜனாதிபதியுடன் இடம்பெற்றபேச்சுக்களைஅடுத்து தாம்பணிப்புறக்கணிப்புப்போராட்டத்தைக் கைவிடத் தீர்மானித்துள்ளனர் என ரயில்வே தொழிற்சங்க கூட்டின் ஏற்பாட்டாளர் ஜானக பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

இதேவேளை திட்டமிட்டவாறு நேற்று நள்ளிரவு முதல் தனியார் பஸ் உரிமையாளர்களின் பணிப் பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்படும் என அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் செயலாளர் அஞ்ஜன பிரியன் ஜித் தெரிவித்தார். பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லும், வான், முச்சக்கரவண்டிகளின் சாரதிகளும் இந்தப் பணிப் பகிஷ்கரிப்பில் இணைந்துள்ளனர்.

எனினும் கெமுனு விஜேரத்ன தலைமையிலான தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் இந்தப் பகிஷ்கரிப்பில் இணையவில்லை.

## 'ஆவா' – 'கியா' சுவாரஸியப் பதில்

யாழ்ப்பாணத்தில்வாள்வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புபட்ட 'ஆவா' குழு இப்போது எங்கே என்று யாழ்ப்பாணம் பிரதிப் பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ தர்மரட்ணவிடம் ஊடகவியலாளர்கள் நேற்றுக் கேட்டனர்.

"ஆவா - கியா" என்று சிங்களத்தில் சுவாரஸிமாகப் பதில் தந்தார் அவர்.

'ஆவா' என்றால் சிங்களத்தில் 'வந்தது' என்று அர்த்தம். 'கியா'என்றால்போய்விட்டாயிற்று என்று அர்த்தம்.

'வந்தது', 'போய்விட்டாயிற்று' என்ற சாரப்பட சுவாரஸியமாக ஊடகவியலாளருக்குப் பதில் தந்திருக்கிறார் இந்த பொலிஸ் அதிகாரி.

யாழ்ப்பாணத்தில் திறமையாகக் கடமையாற்றிய பொலிஸாரைப் பாராட்டும் நிகழ்வு நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றபோதே ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு பிரதி பொலிஸ்மா அதிபர் இப்படி இரண்டு சொற்களில்பதில்தந்து சிரிப்பை ஏற்படுத்தினார் என்று கூறப்பட்டது. (உ)

## அமெ. உப ...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

உரையாடல் ஒன்று இடம்பெற்றதாக அறியவந்தது.

இரு தரப்பு உறவுகள் குறித்து இருவரும் உரையாடினர் எனத் தெரிவிக்கப்பட்டது. இருவருக்கும் இடையில் விரைவில் சந்திப்பொன்று இடம்பெறுவதற்கான பூர்வாங்க அழைப்பும் இந்தப் பேச்சின் போது விடுக்கப்பட்டதாக அறியவந்தது. (உ)

## இந்திய மீன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடராஜன்(வயது-43), நடராஜன் செல்வம்(வயது-39), நடராஜன் சங்கர் (வயது-36), பழனி பாலு (வயது-36), ராஜகுண்டம் கோவிந்தசாமி(வயது-30)ஆகிய மீனவர்களேகரையொதுங்கினர்.

இந்த விடயம் தொடர்பாக பருத்தித்துறை பிரதேச செயலாளர் த.ஜெயசீலன், கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகள்ஆகியோருக்குஅறிவிக்கப்பட்டது. அவர்கள் அங்கு சென்று பார்வையிட்டனர்.

பின்னர்இந்தமீனவர்களைப் பொறுப்பேற்ற கடற்படையினர் தற்போது காங்கேசன்துறை கடற்படைத்தளத்தில்தங்கவைத்துள்ளனர். இன்று காலநிலை சீராகினால் அவர்கள் தமிழகக் கடலோர எல்லைவரை அழைத்துச் செல்லப்பட்டு அங் கிருந்து அவர்களின் படகு மூலமா கவே தமிழகத்துக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள் என்று கடற்படையினர் தெரிவித்தனர்.

(ம- 40-23-30)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.12.2016 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.